344

344.
208

செந்தமிழ் மாலை

SCANNED



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - AUG 1958
MADRAS

நான்காம் படிவம்

SCANNED

சிறப்புப் பகுதி

TB
031(9)
N88
133686.

ி. சூ. சுவாமிநாதன்

மதுரை.... சென்னை

செந்தமிழ் மாலை

நான்காம் படிவம்

சிறப்புப் பகுதி

தொகுத்தவர் :

குமாரி திலகவதி பால், பி. ஏ., எல். டி.,

தலைமை ஆசிரியை,

க்ஷத்திரிய பெண்கள் உயர்நிலைப் பள்ளி, விருதுநகர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS

8 - [illegible] 1958

MADRAS

பிரசுரகர்த்தர் :

வி. சூ. சுவாமிநாதன்

மேலக்கோபுரத் தெரு,
மதுரை.

சுங்குராம செட்டி தெரு,
சென்னை-1.

பதிப்புரிமை]

[விலை {ரூ. 0—12—0
{75. ந. பை.

முதல் பதிப்பு — 1955
மூன்றாம் பதிப்பு — 1958

133686.
சென்னை-600 008.

Printed by Mr. S. Krishnan at The Huxley Press,
114, Armenian Street, Madras-1

முன்னுரை

1952-ல் சென்னை அரசாங்கக் கல்வி இலாகாவினரால் வெளியிடப்பெற்று, இப்பொழுது நடைமுறையிலுள்ள பாடத்திட்டப்படி, **நான்காம், ஐந்தாம் படிவத்துப் பொதுத் தமிழ், சிறப்புத் தமிழ்** மாணவர்களுக்காகச் **செந்தமிழ் மாலை** என்ற இந்நூல் வரிசையைத் தொகுத்துள்ளேன்.

பண்டைக்காலச் செய்யுள், இடைக்காலச் செய்யுள், தற்காலச் செய்யுள் ஆகிய மூன்று பிரிவுகளிலிருந்தும், இனிய செய்யுட்களும் காப்பியப் பகுதிகளும் தேர்ந்துகொள்ளப் பெற்றுள்ளன. இவை, மாணவர்கள் விரும்பிப் படிக்கத் தக்கனவாகவும், தமிழிலக்கியங்களை மேன்மேலும் படிக்க வேண்டுமென்னும் ஆர்வம் ஊட்டத் தக்கனவாகவும் இருக்குமென்னும் துணிபுடையேன். செய்யுள் பாடத்திட்டத்தில் கொடுத்துள்ள வரிக் கணக்குக்குச் சற்று அதிகமாகவே, பொதுத் தமிழ்ப் பகுதியிலும், சிறப்புத் தமிழ் பகுதியிலும் செய்யுள்களைத் தொகுத்துள்ளேன். ஆசிரியர்கள் தம் உசிதம் போல் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். செய்யுட் பகுதியில் மாணவர் மனப்பாடம் செய்வதற்குரிய வரிகளைத் தமிழாசிரியர்கள் தாமே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

உரைநடைப் பகுதிகளில், இலக்கிய ஆராய்ச்சி, வரலாறு, கலைகள், விஞ்ஞானம், சமூகவியல் முதலான பல துறைகளில் முன்னணியில் நிற்கும் எழுத்தாளர்களால் வரையப் பெற்றுள்ள சிறந்த கட்டுரைகளே தொகுக்கப்பட்டுள்ளன. இவை நான்காம், ஐந்தாம் படிவ மாணவர்களின் மொழியறிவையும் உய்த்துணர் திறனையும் மேம்படச் செய்யத் தக்கனவாயும், மாணவர்கள் பின்பற்றத்தக்க மொழி நடையுடையனவாயும் இருக்குமென்னும் கருத்துடையேன். அந்த அந்தப் படிவத்திற்குரிய நூல்களில் பொதுப் பகுதியைவிடச் சிறப்புப் பகுதி சற்று உயர்ந்த மொழிநடை உடையனவாகவும் அமைத்துள்ளேன்.

செய்யுட் பகுதி, உரைநடைப் பகுதி ஆகிய இரண்டிலும், மாணவர் தாம் கற்றவற்றை மனத்திற் பதித்துக் கொள்ள உதவுமாறு குறிப்புரைகளும், வினாக்களும், மொழிப் பயிற்சிகளும், கட்டுரைப் பயிற்சிகளும் சேர்க்கப் பெற்றுள்ளன.

உரிமைபெற்ற கட்டுரைகளையும் செய்யுட்களையும் இந் நூல் தொகுதிகளில் தேர்ந்துகொள்வதற்கு இசைவளித்த, அவற்றின் உரிமையாளர்களுக்கெல்லாம் எனது நன்றி.

இச் செந்தமிழ்மாலை நூல் வரிசையைத் தொகுத்துப் பதிப்பித்தலில், சென்னை எம். ஸிடி. முத்தையா செட்டியார் உயர்நிலைப்பள்ளி ஆசிரியரான வித்துவான் எஸ். **முத்து ஐயங்கார்**, பி. ஏ. (ஹானர்ஸ்), எல். டி., அவர்கள் செய்த பேருதவி மறக்கற்பாலதன்று.

தொகுப்பாளர்

நன்றியுரை

இந்நூலில் தொகுத்துள்ள கட்டுரைகளும் செய்யுட்களும் ஆசிரியர் அல்லது உரிமையாளர் இசைவு பெற்றுப் பிரசுரிக்கப் பெற்றுள்ளன.

அன்னவர்களுக்கெல்லாம் என் மனமார்ந்த நன்றி உரித்தாகும்.

பிரசுரகர்த்தர்

உள்ளுறை

எண்	பொருள்	பக்கம்
	செய்யுள்	
I	வாழ்த்துப் பகுதி	
1.	திருவாய்மொழி	1
2.	குறுந்தொகை	2
II	அறவுரைப் பகுதி	
1.	நாலடியார்	4
2.	ஏலாதி	6
III	கதைப் பகுதி	
1.	அரிச்சந்திர புராணம்	9
2.	மனோன்மணீயம்	16
IV	பல்சுவைப் பகுதி	
1.	புறநானூறு	24
2.	குறுந்தொகை	24
3.	அன்பே கடவுள்	25
4.	புள்	26

உள்ளுறை

எண்	பொருள்	பக்கம்
	உரை நடை	
1.	ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு —டாக்டர் அ சிதம்பரநாதன் செட்டியார், பி. ஏ, பிஎச். டி.	29
2.	தமிழிசை —சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி. ஏ, பி.எல்.	36
3.	இளந்தமிழ் வீரர் —யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்	42
4.	அச்சம் ஒழிந்தது சுதந்திரம் —குமார திலகவதி பால், பி ஏ, எல். டி.	47
5.	தமிழின் உறவு : ஆங்கிலம் —வித்துவான், என். சுப்பு ரெட்டியார், எம், ஏ., பி. எஸ்ஸி., எல். டி.	54
6.	சி. வை. தாமோதரம் பிள்ளை —வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.	65
7.	நம் பண்டைய நீதி நூலாசிரியர் —பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்	72
8.	பண்டைய உரைநடை —புறநானூற்று உரையாசிரியர்	80

நான்காம் படிவம்

சிறப்புப் பகுதி

செய்யுள்

I வாழ்த்துப் பகுதி

1. திருவாய்மொழி

ஆழ்வார்கள் பன்னிருவர் கடவுளைத் திருமாலாகப் பாடிய பாடல்கள் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்ற நூலில் அடங்கியுள்ளன. இதில் ஒரு பகுதியான திருவாய் மொழியிலிருந்து பின்வரும் செய்யுள் எடுக்கப்பெற்றுள்ளது. திருவாய்மொழியைப் பாடியவர் நம்மாழ்வார் என்ற சடகோபர். இவர் ஆழ்வார் திருநகரி என்ற திருக்குருகூரில் பிறந்தவர். இவர் பாடிய திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்ற நான்கு நூல்களும் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்துள் சேர்க்கப்பட்டுள்ளன. இவரது பாடல்களில் பக்திப் பெருக்கும் கவிதை இன்பமும் ஒருங்கே காணலாம்.

ஒளிமணி வண்ண னென்கோ,
　　ஒருவனென் றேத்த நின்ற
நளிர்மதிச் சடைய னென்கோ,
　　நான்முகக் கடவு ளென்கோ,
அளிமகிழ்ந் துலக மெல்லாம்
　　படைத்தவை யேத்த நின்ற
களிமலர்த் துளவ னெம்மான்
　　கண்ணனை மாய னையே!

—நம்மாழ்வார்

குறிப்புரை

வண்ணன் - நிறத்தவன். என்கோ - என்று சொல்வேனோ. ஒருவன் என்று - ஒப்பற்றவன் என்று. ஏத்த நின்ற - புகழப்படு

இன்ற. ஙளிர் மதிச் சடையன் - குளிர்ந்த பிறைச் சந்திரனைத் தன் சடையில் தரித்தவனான சிவபெருமான். நான்முகக் கடவுள் - பிரமன். அளி - கருணை. களி மலர் துளவன் - தேன் துளிக்கும் மலரைக் கொண்ட துளசியை அணிந்த திருமால். எம்மான் - என் தலைவன். கண்ணனாகிய மாயனை ஒளி மணி வண்ணன் என்கோ, சடையன் என்கோ, கடவுள் என்கோ என்று கூட்டிப் பொருள் கூறுக.

2. குறுந்தொகை

சங்க கால நூல்களில் ஒன்றான எட்டுத்தொகையைச் சேர்ந்தது குறுந்தொகை. குறுகிய அடிகளையுடைய பாக்களால் தொகுக்கப்பட்ட நூல் குறுந்தொகை எனப்பட்டது. இந்நூலின் கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ள செய்யுளே இங்கு தரப்பட்டுள்ளது. இதைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்பவர். இவரால் பாடப் பெற்ற பாரதநூல் ஒன்று முன்பு இருந்து பிறகு மறைந்திருக்கவேண்டும். இவர் சமயப் பொது நோக்குடையவர்.

தாமரை புரையுங் காமர் சேவடிப்,
பவழத் தன்னமேனித், திகழொளிக்
குன்றி யேய்க்கு முடுக்கைக், குன்றின்
நெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேல்,
சேவலங் கொடியோன் காப்ப,
ஏம வைகல் எய்தின்றா லுலகே.

—பாரதம் பாடிய பெருந்தேவனார்

குறிப்புரை

தாமரை புரையும் - தாமரை மலரைப் போன்ற. காமர் - அழகிய. சேவடி - சிவந்த பாதம். மேனி - உடம்பு. குன்றி ஏய்க்கும் உடுக்கை - குன்றிமணி போன்ற சிவந்த ஆடை. குன்றின் நெஞ்சு - கிரௌஞ்சம் என்னும் மலையின் நடுஇடம். பக - பிளக்க. அஞ்சுடர் - அழகிய ஒளியுடைய. நெடுவேல் - நீண்ட வேலாயுதம். ஏமம் வைகல் - இன்பமான நாட்களை. உலகு எய்தின்று - உலகம் அடைந்துள்ளது. ஆல், அசை. இச் செய்யுள் முருகன் துதி. முருகன் கிரௌஞ்சம் என்ற மலையை வேலினால் எறிந்து பிளந்தார் என்பது புராண வரலாறு.

வினாக்கள்

1. நம்மாழ்வார் கண்ணனை எவ்வாறெல்லாம் பெயரிட்டு அழைக்கின்றார்?

2. நம்மாழ்வார் சமரச மனப்பான்மையுடையவர் என்பது எவ்வாறு அறியக் கிடக்கின்றது?

3. முருகனது சேவடி, மேனி, உடுக்கை இவற்றுக்கு உவமையாகக் கூறப்பெற்றவை யாவை?

4. உலகு இன்பமான நாட்களை எய்தியது எதனால்?

பயிற்சி

1. பொருள் கூறுக: நவிர் மதி, ஏத்த, சடையன், துளவன், காமர், உடுக்கை, குன்றி, ஏமம், வைகல், எய்தின்று.

2. பிரித்து எழுதுக: நான்முகம், சேவடி, திகழொளி, அஞ்சுடர், நெடுவேல்.

3. பகுதி கூறுக: உடுக்கை, எறிந்த, காப்ப, ஏத்த, மகிழ்ந்து.

4. பின் வருவன என்ன தொடர்?

   மதிச் சடையன்; நெடுவேல்.

II அறவுரைப் பகுதி

1. நாலடியார்

நாலடியார் என்னும் நீதி நூல் சமண முனிவர் பலரால் இயற்றப் பட்டது. இது சங்க நூல்களில் பதினெண் கீழ்க் கணக்கு என்ற வகையின் பாற்படும். நான்கு அடியுள்ள வெண்பாக்கள் நானூறு கொண்ட நூலாதலின் இதற்கு நாலடியார், நாலடி நானூறு என்ற பெயர்கள் ஏற்பட்டுள்ளன. ஆர் விகுதி நூலின் சிறப்பைக் குறிக்கின்றது. நாலடியாரிலுள்ள பாடல்களைத் தொகுத்து, பால், அதிகாரம் ஆகிய பிரிவுகளாக வகுத்தவர் பதுமனூர் என்பவராவர்.

கல்வியின் சிறப்பு

1. வைப்புழிக் கோட்படா ; வாய்த்தீயின் கேடில்லை ;
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார் ;
எச்சம்என ஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சை ; மற்(று) அல்ல பிற.

கல்வியினால் வரும் உயர்வு

2. களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர் !
கடைநிலத்தோர் ஆயினும், கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

தானே தன் உயர்வுக்குக் காரணம்

3. தன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினும்
மென்மேல் உயர்த்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்.

குடிப்பிறந்தார் இயல்பு

4. ஒருபுடை பாம்பு கொளினும், ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉம்—திங்கள்போல்

செல்லாமை செவ்வனேர் நிற்பினும் ஒப்புரவிற்(கு)
ஒல்கார் குடிப்பிறந் தார்.

நல்லினஞ் சேர்தல்

5. ஊரங் கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்—ஒருங்
குலமாட்சி யில்லாரும் குன்றுபோல் நிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.

நட்பாராய்தல்

6. யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் ; எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.

—சமண முனிவர்கள்

குறிப்புரை

1. வைப்புழி - வைத்த இடத்தினின்று. கோட்படா - (பிறரால்) கொள்ளப்படமாட்டா. வாய்த்து ஈயின் - கிடைக்கப் பெற்றுப் பிறருக்குக் கொடுத்தபோதிலும். செறின் - கோபித்தாலும். வவ்வார் - அபகரிக்க மாட்டார். எச்சம் என - (தனக்குப் பின்) எஞ்சி நிற்கும் பொருளாக. விச்சை - வித்தை, கல்வி. பிற அல்ல - பிற பொருள்கள் அல்லவாம். கோட்படா - கோட்படு, பகுதி. ஈயின் - ஈ, பகுதி. வவ்வார் - வவ், பகுதி.

2. களர் நிலம் - உப்புமண் பூமி. சான்றோர் - மேலோர். விழுமிதா - சிறப்புடையதாக. கடை நிலத்தோர் - கீழான குடியில் பிறந்தோர். தலைநிலத்து - முதலிடத்தில்.

3. நிறுப்பான் - நிறுத்துபவன். கீழிடுவான் - இழிநிலை அடையச் செய்பவன். தலையாகச் செய்வான் - தலைவனாகச் செய்பவன்.

4. குடிப்பிறப்பு - உயர் குடியின் இயல்பு. ஒரு புடை - ஒரு பக்கத்தை. பாம்பு - ராகு அல்லது கேது என்ற கிரகம். அம் கண் மாஞாலம் - அழகிய இடத்தையுடைய பெரிய பூமியை. செல்லாமை - இயலாமை, வறுமை. செவ்வன் - நன்றாக. ஒப்புரவிற்கு - உபகாரஞ் செய்தற்கு. ஒல்கார் - தளரமாட்டார்கள்.

5. அங்கண நீர் - ஜலதாரை நீர். உரவு நீர் - மிகுந்த நீர்; ஆறு, கடல்போன்ற நீர் நிலை. தீர்த்தம் ஆம் - தூய நீர் என்று ஆகிவிடும். குல மாட்சி - குலப் பெருமை. குன்றுபோல் - மலைபோல், பெருமையாக.

6. நண்பு ஒரீஇ - நட்பினை விலக்கி. கேண்மை - நட்பு. கெழீஇக் கொளல் - தழுவிக் கொள்ளுதல். மெய்யதா - உடலில் (பாய்ந்து) இருக்க. மெய்யதா=மெய்யது+ஆக.

வினாக்கள்

1. கல்விக்கு அழிவு இல்லை, பிற பொருள்களுக்கு அழிவு உண்டு என்பதை விளக்கிக் கூறுக.

2. தலை நிலத்து வைக்கப்படுவர் யாவர்? இது எது போல?

3. "நன்னிலைக்கண் தன்னை..." என்று தொடங்கும் செய்யுளை அடி பிறழாமல் எழுதிப் பதவுரையும் எழுதுக.

4. "ஒப்புரவிற்கு ஒல்கார் குடிப் பிறந்தார்"—இதன் பொருள் யாது? இதற்கு உவமையாகக் கூறப்படுவது யாது?

5. குலமாட்சி நல்லாரைச் சார்ந்து குன்றுபோல் நிற்பவர் யாவர்? இதற்கு எடுத்துக்காட்டு யாது?

6. யாருடைய நட்பை நீக்கவேண்டும்? யாருடைய நட்பைக் கொள்ளல் வேண்டும்? ஏன்?

பயிற்சி

1. பொருள் கூறுக: வவ்வார், எச்சம், விச்சை, விழுமிதா, புடை, செல்லாமை, ஒப்புரவு, ஒல்கார், அங்கணம், ஒரீஇ, கேண்மை, கெழீஇக் கொளல்.

2. பிரித்தெழுதுக: வாய்த்தீயின், அங்கண், மெய்யதா, பிறிதாகி.

3. பகுதி கூறுக: கோட்படா, செறின், வவ்வார், கீழ்வோன், ஒல்கார்.

4. இச் செய்யுட்களிலிருந்து எடுத்துக்காட்டு உவமை அணிக்கு உதாரணம் தருக.

2. ஏலாதி

ஏலாதி - என்ற நூல் பதினெண்கீழ்க் கணக்கைச் சேர்ந்தது. இதன் ஆசிரியர் கணி மேதையார். 'ஏலாதி' என்பது ஏலம், இலவங்கம் முதலிய ஆறு சரக்குகளால் செய்யப்பட்ட ஒரு மருந்தின் பெயர்.

ஏலாதி - ஏலம் + ஆதி ; ஏலத்தை முதலாக உடையது என்பது பொருள். இம் மருந்து உடற் பிணிகளைப் போக்கி நலஞ் செய்வது போல், ஏலாதி என்ற இந்நூலும் மக்களின் அறியாமைப் பிணியைப் போக்கக் கூடியது. ஒவ்வொரு செய்யுளிலும் ஆறு அல்லது ஏழு உண்மைப் பொருள்கள் எடுத்துரைக்கப்படுகின்றன.

1. நிறையுடைமை நீர்மை உடைமை கொடையே
பொறையுடைமை பொய்ம்மை புலாற்கண் — [மறையுடைமை
வேயன்ன தோளாய் ! இவையுடையான் பல்லுயிர்க்
தாயன்னன் என்னத் தகும். [கும்

2. இளமை கழியும் ; பிணிமூப்(பு) இயையும் ;
வளமை வலிஇவை வாடும் ;— உளநாளால்
பாடே புரியாது, பால்போலும் சொல்லினுய் !
வீடே புரிதல் விதி.

3. சாதல் பொருள்கொடுத்தல் இன்சொல் புணர்
நோதல் பிரிவில் கவறலே—ஓதலின் [வுவத்தல்
அன்புடையார்க் குள்ளன ஆறு குணமாக
மென்புடையார் வைத்தார் விரித்து.

4. களியான்கள் உண்ணுன் களிப்பாரைக் காணுன்
ஒளியான் விருந்திற் குலேயான்—எளியாரை
எள்ளான்ஈத் துண்பானேல் ஏதமில் மண்ஆண்டு
கொள்வான் குடிவாழ்வான் கூர்ந்து.

—கணி மேதையார்

குறிப்புரை

1. நிறை - மன அடக்கம். நீர்மை - நல்லியல்பு. பொய்ம்மை, புலால்கண் மறையுடைமை - பொய் கூறுதலிலும் புலால் உண்ணுதலிலும் மறுத்தல் உடைமை. தாய் அன்னன் - தாய் போன்றவன். வேயன்ன தோளாய் - மூங்கிலை ஒத்த தோள்களை உடையவளே ! (மகடூஉ முன்னிலை).

2. பிணி மூப்பு இயையும் - நோயும் கிழத்தனமும் வந்து சேரும். வலி - உடல் வலிமை. வாடும் - குறைந்து அழியும். பால் போலும்

சொல்லினுய்! (மகடூஉ முன்னிலை.) பாடு புரியாது - உலக இன்பங் களுக்காக உழைக்காமல். வீடு புரிதல் - வீட்டு இன்பத்திற்காக உழைத் தல். விதி - கடமை.

3. சாதல் - (நண்பன் பொருட்டாக) இறத்தல். புணர்வு உவத் தல் - கூடி மகிழ்தல். பிரிவில் நோதல் - பிரியும் பொழுது வருந்துதல். கவறல் - கவலைப்படுதல். நண்பர்கள்பால் இந்த ஆறு இயல்புகளும் வேண்டப்படுவன.

4. களியான் - தற்பெருமை கொள்ளாதவனுகி. களிப்பார் - கள் குடித்து மகிழ்பவர். விருந்திற்கு ஒளியான் - விருந்தினர்க்கு இல்லை என்னுதவனுகி. உலையான் - ஒழுக்கம் கெடாதவனுகி. எள்ளான் - இக ழாதவனுகி. ஈத்து - (பிறர்க்கும்) கொடுத்து. (ஈ பகுதி); ஈத்து, இறந்த கால வினை யெச்சம். மண் ஆண்டு கொள்வான் - இவ்வுலகை ஆள்வான்.

வினுக்கள்

1. பல்லுயிர்க்கும் தாய் போன்றவனுடைய இயல்புகளை விவரி.

2. "இளமை கழியும்..." என்று தொடங்கும் செய்யுளை அடிபிற ழாமல் எழுதிப் பதவுரையும் தருக.

3. அன்புடையார்க்கு உள்ள ஆறு குணங்கள் யாவை?

4. குடிவாழ்வான் இவ்வுலகை ஆண்டு கொள்பவனுக ஆவதற்கு எவ்வாறிருக்க வேண்டும்?

பயிற்சி

1. பொருள் கூறுக: நிறையுடைமை, பொறை, மறையுடைமை, பாடுபுரிதல், வீடுபுரிதல், கவறல், எள்ளான், ஏதம், கூர்ந்து.

2. பிரித்தெழுதுக: நிறையுடைமை, இன்சொல், புணர்வுவத் தல், ஈத்துண்பான்.

3. பகுதி கூறுக: கொடை, பொறை, இயையும், புரிதல், சாதல், நோதல், கவறல், எள்ளான், உண்பான்.

4. மேற் செய்யுட்களில் வந்துள்ள மகடூஉ முன்னிலைகளை எடுத் தெழுதுக.

III. கதைப் பகுதி

1. அரிச்சந்திர புராணம்

அரிச்சந்திர புராணம் என்ற இந்நூலின் ஆசிரியர் நல்லூர் வீர கவிராயர் என்பவர். இவர் பதினாரும் நூற்ருண்டினர். இவர் காலத்தில் 'அரிச்சந்திர வெண்பா' என்ெருரு நூல் வழங்கிவந்தது. அந்நூலை ஆதாரமாகக் கொண்டு வீர கவிராயர் இந்நூலை இயற்றி, திருப்புல்லாணி என்ற தலத்துத் திருமால் கோயில்முன் உள்ள ஒரு மண்டபத்தில் அரங்கேற்றினர் என்று சொல்லப்படுகிறது.

இந்நூலினுள்ள செய்யுட்கள் இன்னேசையும் பல சொல்லணிகளும் பொருட்செறிவும் உடையவை. இந்நூல் பத்துக் காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் மயான காண்டம் என்ற பகுதியிலிருந்து பின்வரும் செய்யுட்கள் தரப்பட்டுள்ளன.

முன் கதை : அயோத்தி நகரில் அரசு செலுத்திவந்த அரிச்சந்திரன் பொய்யே சொல்லாதவன் என்ற கீர்த்தியுடன் விளங்கி வந்தான். அவனைத் தாம் எப்படியேனும் பொய்ச்சொல்லச் செய்வதாக, தேவேந்திரன், வசிட்டமுனிவர் ஆகியோர்முன் சபதம் செய்த விசுவாமித்திர முனிவர், அரிச்சந்திரனைத் தம்மிடம் கடன்படச் செய்து, ஏழையாக்கி, ராஜ்யத்தையும் கைப்பற்றிக்கொண்டு துரத்திவிட்டார். அரிச்சந்திரன், தன் மனைவி சந்திரமதி, மகன் தேவதாசன் ஆகியோருடன் காசி சென்று, அங்கு மனைவியையும் மகனையும் அடிமைகளாக விற்று விசுவாமித்திரரின் கடனைத் தீர்த்தான். பிறகு தானும் வீரவாகு என்ற புலையனுக்கு அடிமைப்பட்டுச் சுடலை காவலனுகத் தொழில் புரிந்தான்.

இந்நிலையில் தேவதாசன் அரவு கடித்து இறந்தான். அவனது உடலை அடக்கம் செய்வதற்குச் சந்திரமதி சுடலை சென்ருள். அச்சமயம் காசி ராஜனுடைய மகன் இறந்துவிட்டான். அம்மகனைக் கொன்றவள் சந்திரமதியே என்று குற்றம் சாட்டப்பட்டு, அவளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இத் தண்டனையை அரிச்சந்திரனே நிறைவேற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அரிச்சந்திரன், சந்திரமதியைக்கொண்டு நகர்ப்புறம் அடைதல்

1\. 'என்ன பாதகம் செய்தனம்'
என இறை நகைத்துக்
கன்னி கைகளைக் கட்டிய
கயிறுதான் பிடித்துத்

துன்னு மாமணித் தோரண
வாயிலைக் கடந்து
பொன்னின் மாநகர்ப் புரிசையின்
புறத்துவந் திறுத்தான்.

வசிட்டர் இந்திரனுக்குக் கூறுதல்

2. உற்ற நாளையில் வசிட்டனவ்
வும்பர்கோன் றனக்குக்
'கொற்ற வா, நினக் கியான்புகல்
கோதிலா னிடத்தே
அற்றை நாள்முதல் கௌசிகன்
அமைக்குமூ றனைத்தும்
இற்றை நாள்விடும்; காண்பம்; நீ
எழுக' என் றிசைத்தான்.

இந்திரன் முதலியோர் வானில் வந்திருத்தல்

3. தாழும் வார்சடை மாமுனி
அவ்வுரை சாற்றச்
சூழும் மாதரும் தும்புரு
நாரதர் தாமும்
வாழும் வச்சிர பாணியும்
வசிட்டனும் யாரும்
ஏழு பாலரும் காணவந்
தந்தரத் திருந்தார்.

கௌசிகன், அரிச்சந்திரனுக்குக் கூறுதல்

4. அந்த வேளையில் கவுசிகன்
விரைந்துவந் 'தரசே,
இந்த நோதக வெய்தல்என்?
எனக்கு நீ முன்னம்
தந்த நாடி "யான் தந்திலேன்"
எனுமொழி சாற்றி
உந்தம் நாடும்இவ் வுயிர்களும்
பெறு' கென உரைத்தான்.

அரிச்சந்திரனும் சந்திரமதியும் கௌசிகனுக்கு எதிருரைத்தல்

5. சேர நின்றவன் செப்பிய
தாங்கவர் அன்றி
ஆரும் கேட்டிலர் ; வசிட்டனும்
அமரரும் அறிந்தார்.
வீர வேந்தனும் மங்கையும்
அவனடி வீழ்ந்திங்
'கியாரை நீ இந்த ஏழைமைக்
காட்செய்தி ?' என்றார்.

6. 'சேய்மை அண்மையில் உயிர்க்கொரு
துணைஎனச் சிறந்த
வாய்மை யாலகம் தூய்மையாம் ;
மற்றிலை ; புறத்தைத்
தூய்மை செய்வது நீரலால்
சொல்லின்வே றுளதோ ?
நோய்மை செய்யினும் வாய்மையே
நோன்பெமக் கறிதி.

7. 'புலைய னும்விரும் பாதஇப்
புன்புலால் யாக்கை
நிலையெ னுமருண் டுயிரினும்
நெடிதுறச் சிறந்தே
தலைமை சேர்தரு சத்தியம்
பிறழ்வது தரியேம் ;
கலையு ணர்ந்தநீ எமக்கிது
கழறுவ தழகோ ?

8. 'இம்மை அம்மைவீ டெனமறை
புலங்கொள இயம்பும்
மும்மை யும்தரும் முறையுடைத்
தெனும்நிலை முரணி,

எம்மை ஆழ்வயிற் றடக்கி,நீ
டுமிழ்கலா எரிவாய்
வெம்மை கூர்நர குய்க்கினும்
மெய்ம்மையை விடேமால்.

9. 'பதியிழந் தனம்; பாலனை
இழந்தனம்; படைத்த
நிதியி ழந்தனம்; "இனி நமக்
குள "தென நினைக்குங்
கதியி ழக்கினும் கட்டுரை
இழக்கிலேம்' என்றார்.
மதி யிழந்துதன் வாயிழந்
தருந்தவன் மறைந்தான்.

இந்திரன், முதலியோரிடம் கௌசிகன் சார்தல்

10. மறைந்துபோகலும் வாசவன்
மாமுனி வணக்கூய்,
'அறைந்த காரணம் அறிந்துபோ'
என அரு கழைத்தான்.
நிறைந்த நாணமும் குறைந்தபார்
வையுமுற நினைவு
குறைந்தி ருந்தனன் முகிலிடத்
தவருடன் கூடி.

அரிச்சந்திரன், சந்திரமதியைக் கொண்டு மயானத்தைச் சார்தல்

11. வாசத் தார்புனை வாசவ
னுடன்முனி வைகப்
பாசத் தாள்கரம் பிணித்ததோர்
பாசங்கை பற்றிப்
பேசத் தான்பெருன் பிணஞ்சுடு
கோலினுல் தள்ளி
நேசத் தார்மகன் கிடந்ததோர்
நெடுநிலஞ் சேர்ந்தான்.

அரிச்சந்திரன் தேவியிடம் கூறுதலும், அவள் அவனை வேண்டுதலும்

12. 'வழக்கின் என்றும் நீ வழிபடு
கடவுளை வணங்கிக்
கிழக்கு நோக்கியீண் டிரு' எனக்
கிளிமொழி மடந்தை
பழக்க மானவக் கணவனைப்
பரவி, 'என் ஆவி
இழக்கற் கஞ்சி நீ அறம் வழு
வேல்' என இயம்பும்.

13. 'பொருந்தும் நீத்தத்தில் புற்புத
வாழ்வைநீ மெய்யென்
றருந்த வத்தையும் அறத்தையும்
மெய்யையும் விடுத்து
வருந்தல் மன்னவ, வழிவழி
சிறக்' கென வாழ்த்தி
இருந்த பின், சுடர் வாட்படை
வலக்கையின் எடுத்தான்.

அரிச்சந்திரன் சொல்லுதல்

14. 'உலகு யிர்க்கெலாம் பசுபதி
ஒருமுதல் ஆயின்,
அலகில் சீருடை அவன்மொழி
மறையெனின், அதன்கண்
இலக நம்பல வற்றினும்
வாய்மையீ டிலதேல்,
விலகு றுமலவ் வாய்மையை
விரதமாக் கொளின்யான்,

15. 'நெறியின் அன்னஎன் றனைவிடா
நிறை இவட் குளதேல்,
இறுதி யின்மையைப் பெறுக ; அன்
றெனின், இவள் இறுதி

பெறுக' என்றுவாள் வீசினன் ;
　　பேதைதன் கழுத்தில்
மறுமணத்திடு மாலையாய்
　　வீழ்ந்ததவ் வடிவாள்.

—நல்லூர் வீரகவிராயர்

குறிப்புரை

1. இன்ற - அரசனாகிய அரிச்சந்திரன். துன்னும் - நெருங்கிய. புரிசை - மதில். இறுத்தான் - தங்கினான்.

2. உம்பர்கோன் - தேவேந்திரன். நினக்கு + யான் = நினக்கியான்; குற்றியலுகரம் குற்றியலிகரமாயிற்று. புகல் - சொல்லிய. கோதிலான் - குற்றமில்லாதவன்; அரிச்சந்திரன். அன்று + நாள் = அற்றைநாள். ஊறு - துன்பம்; முதல் நிலை திரிந்த தொழிற்பெயர். விடும் - ஒழியும்.

3. வச்சிரபாணி-வச்சிராயுதத்தைக் கையிலுடையவன்; இந்திரன். எழுபாலரும் - (அஷ்டதிக்குப் பாலருள் இந்திரனை யொழித்த மற்ற) எழு திக்குப்பாலரும்.

4. நோதகவு - துன்பம். எய்தல் - அடைதல். நாடு + யான் = நாடியான். உம்தம் - உங்களுடைய. இவ்வுயிர்கள் எனச் சுட்டியது தேவதாசனையும் காசியரசன் புதல்வனையும். பெறுக + என = பெறுகென; அகரம் தொகுத்தல்.

5. அவர் - அரிச்சந்திரனும் சந்திரமதியும். இங்கு + யாரை = இங்கி யாரை. ஏழைமை - அறிவின்மை.

6. சேய்மை - தூரம். அண்மை - சமீபம். சேய்மை அன்மை என்பன, முன் பிறப்பினையும் இப்பிறப்பினையும் குறிக்கும். அகம் - மனம். புறம் - உடலின் மேற்புறத்தை. நோய்மை - துன்பம். நோன்பு - விரதம்.

7. புலையனும், உம் இழிவுசிறப்பு. புன்புலால் - இழிவாகிய மாமிசத்தையுடைய. நிலை என்று - ஸ்திரமானது என்று. மருண்டு - மயங்கி. உயிரினும், உம் உயர்வு சிறப்பு. கலை - சாஸ்திரங்கள். கழறுவது - கூறுவது.

8. இம்மை - இப்பிறப்பு. அம்மை - அப் பிறப்பு; இனி வரும் பிறப்பு. வீடு - மோக்ஷம். புலம்கொள - அறிவு ஏற்றுக்கொள்ளுமாறு. மும்மை - மூன்று. முரணி - மாறுபட்டு. வயிறு - நடு விடம். நீடு - நெடுங் காலம் வரை. உமிழ்கலா - வெளிவிடாத. வெம்மை - வெப்பம். கூர் - மிக்க. உய்க்கினும் - செலுத்தினும்.

9. கதி - மோக்ஷம். கட்டுரை - உண்மை. வாய் - சொல் வன்மை.

10. வாசவன் - இந்திரன். மாமுனிவன் - விசுவாமித்திரன். கூய் - கூவி. முகிலிடத்தவர் - மேகமண்டலத்திலுள்ளவர் ; தேவர்.

11. வைக - தங்கியிருக்க. பாசத்தாள் - அன்புடையவளாகிய மனைவியின். பேசத்தான் பெறுன் - பேசவும் முடியாதவனுய். நேசத்து ஆர் - அன்பால் நிறைந்த.

12. வழக்கின் - வழக்கமாய். ஈண்டு - இங்கு. பரவி - வாழ்த்தி. வழுவேல் - தவருதே. இயம்பும் - சொல்லுவாள்.

13. நீத்தம் - வெள்ளம். புற்புதம் - குமிழி. வருந்தல் - வருந்தாதே. சிறக்க + என = சிறக்கென; அகரம் தொகுத்தல். வாட் படை - வாளாயுதம்.

14. பசுபதி - சிவபெருமான். ஒரு முதல் - தனி முதல்வன் ; முதற் கடவுள். அலகு - அளவு. இலகு - விளங்குகின்ற. ஈடு - ஒப்பு, சமானம். விலகுருமல் - விடாமல்.

15. அன்ன - அத்தன்மையுள்ள. நிறை - கற்பு. இறுதியின்மை - சாவு இல்லாமை. பேதை - சந்திரமதி. வடி வாள் - கூர்மையான வாள். வடி வாள் மாலையாய் வீழ்ந்தது என்க.

வினக்கள்

1. 'கௌசிகன் அமைக்கும் ஊறனைத்தும் இற்றைநாள் விடும்'—சந்தர்ப்பம் கூறி விளக்குக.

2. அந்தரத்தில் வந்திருந்தோர் யாவர் ?

3. அரிச்சந்திரன் சந்திரமதியை வெட்டக் கொண்டுபோகும் பொழுது கௌசிக முனிவர் அவனிடம் கூறியதென்ன ?

4. அகம் தூய்மையும் புறந் தூய்மையும் எவற்ருல் ஏற்படும்?

5. யாக்கையின் இழிவும் சத்தியத்தின் சிறப்பும் எவ்வாறு விளக்கப்படுகின்றன ?

6. மெய்ம்மை எந்த மூன்றையும் தர வல்லது ?

7. அரிச்சந்திரனும் சந்திரமதியும் எவ்வெவற்றை இழந்துவிட்டனர்? எதை 'இழக்கிலேம்' எனக் கூறினர் ?

8. கௌசிகன், தேவர்களுடன் சேர்ந்தபொழுது எவ்வாறு நின்ருன் ?

9. மனைவியை எவ்வாறு நிற்கும்படி அரிச்சந்திரன் சொன்னான் ?

10. சந்திரமதி அரிச்சந்திரனுக்கு என்ன கூறி மன உறுதி உண்டாகச் செய்தாள் ?

11. அரிச்சந்திரன் என்ன கூறிக்கொண்டு தன் வாளை வீசினான் ?

12. அரிச்சந்திரன் வீசிய வாள் சந்திரமதியின் கழுத்தில் எவ்வாறு விழுந்தது ?

பயிற்சி

1. பொருள் கூறுக: புரிசை, ஊறு, நோதகவு, நோய்மை, நோன்பு, கழறுவது, முரணி, உமிழ்கலா, உய்க்கினும், கட்டுரை, கூய், நீத்தம், புற்புதம்.

2. பிரித்தெழுதுக: நாடியான், பெறுகென, இங்கியாரை, மற்றிலை, வேறுளதோ, எமக்கிது, அருந்தவம்.

3. பின் வரும் சொற்களும் தொடர்களும் யாரைக் குறிக்கின்றன ?

உம்பர்கோன், வச்சிரபாணி, வாசவன், முகிலிடத்தவர், பசுபதி.

2. மனோன்மணீயம்

செய்யுளில் இயன்றுள்ள இந்த நாடகத்தை இயற்றியவர் பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள். இவர் திருவாங்கூர் இராச்சியத்தைச் சேர்ந்தவர். சென்ற நூற்றாண்டில் வாழ்ந்திருந்தவர். திருவனந்தபுரம் மகாராஜாவின் கல்லூரியில் அறிவுநூற் புலவராக இருந்த இவர், தமிழிலக்கியங்களையும் நன்கு கற்றுப் பெரும்புலவராக விளங்கினார். இவர் இயற்றிய நாடகமான மனோன்மணீயம் இவரது புலமைக்குத் தக்க சான்றாக விளங்குகின்றது.

இங்குப் பாடமாக எடுக்கப்பட்டுள்ள பகுதி, மனோன்மணீயத்தில் முதல் அங்கத்தில் முதற்களத்தில் முற்பகுதி. பாண்டிய அரசனாகிய ஜீவகனை அவனுடைய மந்திரி குடிலன் தன் வயப்படுத்திக்கொண்டு, ஜீவகனுடைய ஒரே மகளான மனோன்மணியைத் தன்னுடைய மகனான பலதேவனுக்கு மணம் முடித்துக் கொண்டால், அரசனைத் தன் விருப்பப்படி ஆட்டி வைக்கலாமென எண்ணினான். இக்கருத்துடன் திருநெல்வேலி நகரில் புதிய அரண்களை அமைத்து, ஜீவகனை மதுரையை விட்டு நீங்கச் செய்து, திருநெல்வேலியில் நிலையாகத் தங்கச் செய்தான். குடிலனது இயல்பை அறிந்தவரும் ஜீவகனுடைய குருவுமான சுந்தரமுனிவர், குடிலனது வஞ்சனையிலிருந்து ஜீவகனைக் காக்க எண்ணி, தாமும் திரு

நெல்வேலியடைந்து அருகே ஆச்சிரமம் அமைத்துத் தங்கினார். குடிலனது சதித் திட்டங்கள் எல்லாம் முடிவில் பாழாகி, மனோன்மணி, சேர தேசத்து அரசனாகிய புருடோத்தமனை மணந்தாள். பாடப்பகுதியில், குடிலன், திருநெல்வேலியில் அமைத்த அரண்மனையை அப்பொழுது வந்த சுந்தரமுனிவரிடம் புகழ்ந்து கூறுகிறான்.

முதல் அங்கம்—முதற்களம்

இடம் : பாண்டியன் கொலுமண்டபம்

காலம் : காலை

(சேவகர்கள் கொலுமண்டபம் அலங்கரித்து நிற்க.)

1-ம் சேவ : புகழ்மிகு அமைதரு பொற்சிங் காதனம்
திகழ்தர இவ்விடம் சேர்மின். சீரிதே.

2-ம் சேவ : அடியிணை யருச்சனைக் காகுங் கடிமல
ரெவ்விடம் வைத்தனை ?

3-ம் சேவ : ஈதோ ! நோக்குதி.

4-ம் சேவ : அவ்விடத் திருப்பதென் ?

5-ம் சேவ : ஆரம். பொறு ! பொறு !
விழவரு வீதியில் மழையொலி யென்னக்
கழைகறி களிறுகள் பிளிறு பேரொலியும்,
கொய்யுளைப் புரவியின் குரத்தெழு மோதையும்
மொய்திரண் முரசின் முழக்கு மவித்துச்
'சுந்தர முனிவா ! வந்தனம் வந்தனம் !'
எனுமொலி யேசிறந் தெழுந்தது கேண்மின் !

2-ம் சேவ : முனிவ ரென்றிடிற் கனிவுறுங் கல்லும் !

4-ம் சேவ : எத்தனை பத்தி ! எத்தனை கூட்டம் !
எள்விழற் கிடமிலை. யான்போய்க் கண்டேன் !

3-ம் சேவ : உனக்கென் கவலை ? நினைக்குமுன் னோடலாம்.

1-ம் சேவ : அரசனும் ஈதோ அணைந்தனன் காணீர் !
ஒருசா ரொதுங்குமின். ஒரு புறம் ! ஒரு புறம் !

(ஜீவகன் வர)

யாவரும் : (தொழுது) } ஜய ! ஜய ! விஜயீபவ ராஜேந்திரா ! !

(சுந்தர முனிவர், கருணாகரர், குடிலன், நகரவாசிகள், முதலியோர் வர)

ஜய ! ஜய ! விஜய ! தவ ராஜேந்திரா ! !

ஜீவகன் : வருக ! வருக ! குரு கிருபாநிதே !
திருவடி தீண்டப் பெற்றவிச் சிறுகுடி
லருமறைச் சிகரமோ, ஆல நன் னீழலோ,
குருகுல விஜயன் கொடித்தேர்ப் பீடமோ,
யாதென வோதுவன் ? தீதற வாதனத்து
இருந்தரு ளிறைவ ! என்பவ பாச
மிரிந்திட நின்பத மிறைஞ்சுவ லடியேன்.

(ஜீவகன் பாதை பூசை செய்ய)

சுந்தர : வாழ்க ! வாழ்க ! மன்னவ ! வருதுயர்
சூழ்பிணி யாவுந் தொலைந்து வாழ்க !
சுகமே போலும், மனோன் மணி ?

ஜீவ : சுகம், சுகம்.

சுந்தர : இந்நக ருளாரும் யாவரும் க்ஷேமம் ?

ஜீவ : உன்னரு ளுடையோர்க் கென்குறை ? க்ஷேமம்
கூடன் மாநகர் குடிவிட்டிப்பாற்
பீடுயர் நெல்லையில் வந்தபின் பேணி
அமைத்தனன் இவ்வரண். இமைப் பறு தேவருங்
கடக்கரு மிதன்றிறங் கடைக்கண் சாத்தி

ஆசி நீயருள நேசித்தேன் நனி.
எத்தனை புரிதா னிருக்கினு மெமக்கெலாம்
அத்த ! நின் னருள்போ லரணெது ? குடில !
இவ்வழி யெழுந்த நம்மிறைவர், கடிபுரி
செவ்விதி னேக்கக் காட்டுக தெரிந்தே.

குடிலன் : ஊன்வரு பெருநோய் தான்விட வடைந்த
அன்பரின் புறவிவ் வருளுருத் தாங்கி
வந்தருள் கிருபா சுந்தர மூர்த்தி !

நீயறி யாத தொன் றில்லே ; ஆயினும்
உன்னடி பரவி யுரைப்பது கேண்மோ.

தென் பாண்டி நாடே சிவலோக மாமென
முன் வாதவூரர் மொழிந்தனர் ; அன் றியுந்
தரணியே பசுவெனச் சாற்றலு மற்றதிற்
பாதமே மடியெனப் பகர்வதுஞ் சரதமேல்,
பால்சொரி சுரைதென் பாண்டி யென்பது

மேல் விளம் பாதே விளங்கும். ஒருகா
லெல்லா மாகிய கண்ணுத லிறைவனும்
பல்லா யிரத்த தேவரும் பிறரும்
நிலேபெற நின்ற பணிவரை துலேயின்
ஒருதலே யாக உருவஞ் சிறிய

குறுமுனி தனியா யுறுமலே மற்ருேர்
தலேயாச் சமமாய் நின் றதேல், மலேகளில்
மலேயமோ அலதுபொன் வரையோ பெரிது ?
சந்நு செவிவழித் தந்த கங்கையும்
பின்ஞெரு வாயசங் கவிழ்த்த பொன்னியும்

வருந்திய தேவரோ டருந்தவர் வேண்ட
அமிழ்திலுஞ் சிறந்த தமிழ்மொழி பிறந்த
மலேயம் நின் றிழிந்து, விலேயுயர் முத்தும்
வேழவெண் மருப்பும் வீசிக், காழகிற்
சந்தனு டவியுஞ் சாடி வந்துயர்

குங்கும முறித்துச், சங்கின மலறுந்
தடம்பணே தவழ்ந்து, மடமயி னடம்பயில்
வளம்பொழில் கடந்து, குளம்பல நிரப்பி,
யிருகரை வாரமுந் திருமக ளுறையுளாப்
பண்ணுமிப் புண்ணிய தாமிர வர்ணியும்,

எண்ணிடி லேயென் றிசைக்கவும் படுமோ ?
இந்நதி வலம்வர விருந்த நந் தொன்னகர்
பொன்னகர் தன்னிலும் பொலிவுறல் கண்டனே.
தொடுகட லோவெனத் துணுக்குறும் அடையலர்
கலக்கத் தெல்லேயுங் கட்செவிச் சுடிகையும்

புலப்பட வகன்றாழ் புதுவக மூடுத்த
மஞ்சுகண் துஞ்சுநம் இஞ்சி யுரிஞ்சி
உதயனு முடல் சிவந் தனனே ! அதன்புறம்
நாட்டிய பதாகையிற் றீட்டிய மீனம்,
உவாமதிக் குறுமா சவாவொடு நக்கும்.

வெயில்விரி யெயிலினங் காக்க வியற்றிய
எந்திரப் படைகளும் தந்திரக் கருவியும்
பொறிகளும் வெறிகொளுங் கிறிகளு
மெண்ணில—

சுந். (எழுந்து,) சம்போ ! சங்கர ! அம்பிகா பதேஎ !

நன்று மன்ன ! உன்றன் றொல்குலங்

காக்கநீ யாக்கிய இவையெலாங் கண்டுளேம்.
அல்லா துறுதி யுளதோ ? சொல்லுதி !

ஜீவ : என்னை ! என்னை ! எமக்கருள் குரவ !
இன்னும் வேண்டிய தியாதோ ? துன்னலர்
வெருவுவர் கேட்கினும் ; பொருதிவை
வென்றுகைக்

கொள்ளுவ ரென்பதும் உள்ளற் பாற்றோ ?
ஆயினு மரணி லுளபுரை நோக்கி
நீயினி யியம்பிடின் நீக்குவ னொடியே.

சுந்தர : காலமென்பது கறங்குபோற் சுழன்று
மேலது கீழாக் கீழது மேலா

மாற்றிடுந் தோற்ற மென்பது மறந்தனை.
வினைதெரிந் தாற்றும் வேந்தன் முனமுனம்
ஆயற் பாற்ற தழிவு மஃதொழி
வாயிலு மாமென வையகம் புகலும்.
உன்னையு முன்குலத் துதித்தநம் மனோன்மணி

தன்னையுஞ் சங்கரன் காக்க ! தயாநிதே !
அன்பும் அறமுமே யாக்கையாக் கொண்ட
நின்புதல் வியை யான் காண நேசித்தேன்,
அத்திரு வுறையும் அப்புறம் போதற்

கொத்ததாமோ இக்காலம்? உணர்த்தாய்.
ஜீவ : ஆம்! ஆம்! சேவக! அறைதி சென்று
தேமொழிக் கன்னி தன் சேடியர் தமக்கு
நங்குல முனிவர் இங்குள ரெனவே.

—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

குறிப்புரை

[வரிகள் 1—10] திகழ்தர - விளங்க. அடியிணை - (சுந்தர முனிவரது) இரு பாதங்கள். அருச்சனை - பூசித்தல். கடிமலர் - நறுமணமுள்ள மலர்கள். நோக்குதி - பார். விழவறு - திருவிழா நீங்காத. கழைகறி களிறு - கரும்பினைக் கடித்துத் தின்னும் ஆண் யானை. உளை - பிடரி மயிர். குரம் - குளம்பு. ஓதை - ஒலி. அவித்து - மங்கச் செய்து.

[வரிகள் 11—20] கல்லும் கனிவுறும் - கல்லும் மென்மையாகும். ஒருசார் - ஒரு பக்கம். தவ ராஜேந்திரா - தவசிகளுக்குச் சக்கரவர்த்தியே [சுந்தர முனிவரை]. கிருபா நிதே - கருணைக் கடலே.

[வரிகள் 21—30] இச்சிறு குடில், ஜீவகனது புதிய அரண்மனையைக் குறிக்கிறது. ஆல நன்னீழல், விஜயனது (அருச்சுனனது) தேர்ப் பீடம் இவ்விடங்கள் கடவுள் உபதேசித்த இடங்கள். பவ பாசம் இரிந்திட - பாவமும் பந்தங்களும் நீங்கும்படி.

[வரிகள் 31—40] கூடன் மாநகர் - மதுரை நகரம். பீடு-பெருமை. நெல்லை - திருநெல்வேலி. பேணி - விரும்பி, பாதுகாத்து. இமைப்பறு தேவர் - கண்ணிமைகளை மூடாத தேவர்கள். கடக்கரு - கடத்தற்கு அரிய. கடைக்கண் சாத்தி - கடைக்கண்களால் பார்த்து. நனி நேசித்தேன் - மிக விரும்பினேன். புரி - நகரம். கடிபுரி - காவலுடைய நகரம்.

[வரிகள் 41—51] பரவி - வணங்கி, துதித்து. கேண்மோ - கேளுங்கள். வாதவூரர் - மாணிக்கவாசகர். தரணி - பூமி. பரதம் - பாரத நாடு. மடி - பசுவின் மடி. சரதம் - உறுதி. விளம்பாதே விளங்கும் - சொல்லாமலே தெரியும்.

[வரிகள் 52—58] கண்ணுதல் இறைவன் - நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான். பனிவரை - இமயமலை. ஒரு தலையாக - ஒரு பக்கமாக. துலை - தராசு. குறுமுனி - அகத்திய முனிவன். குறுமுனி தனியா உறு மலை - பொதியமலை, மலையமலை. பொன்வரை - இமயமலை.

[வரிகள் 59—71] சந்நு - ஒரு முனிவர். கங்கை சந்நு முனிவரின் செவியின் வழியே வெளிப்பட்ட நதி என்பது புராண வரலாறு. வாயசம் - காக்கை. அகத்தியருடைய கமண்டல நீரைக் காக்கை கவிழ்த்துக் காவிரி பிறந்தது என்பது வரலாறு. பொன்னி - காவிரி. வேழவெண்

மருப்பு - யானையின் வெண்மையான தந்தம். காழ் அகில் - வைரம் பாய்ந்த அகில். சந்தனடவி - சந்தன அடவி, சந்தன மரக்காடு. [வட மொழிப்புணர்ச்சி]. சாடி - மோதி. குங்குமம் - குங்கும மரம். தடம் பணை - பரந்த வயல். பொழில் - சோலை. வாரம் - நீர்க்கரை, பக்கம். திருமகள் - இலக்குமி. உறையுள் - இருப்பிடம். ஏயும் - ஒக்கும். இசைக்கவும்படுமோ - சொல்லவும் கூடுமோ; கூடாது. கங்கையும் காவிரியும் தாமிரவர்ணிக்கு ஈடாகா என்றவாறு.

[வரிகள் 72—83] பொன்னகர் - தேவருலகம். தொடுகடல் - (சகரரால்) தோண்டப்பட்ட கடல். துணுக்குறும் - நடுங்கும், அஞ்சும். அடையலர் - பகைவர். கலக்கத்து எல்லை - அச்சத்தின் அளவு. கட்செவிச் சுடிகை - பாம்பின் தலையுச்சி. [அகழி மிகவும் ஆழமாயிருப்பதால், பூமியைத் தாங்கும் எட்டு நாகங்களின் உச்சிகள் தெரிகின்றன.] மஞ்சு கண் துஞ்சும் - மேகம் உறங்கும்படியான உயரமுடைய. இஞ்சி - கோட்டை. உரிஞ்சி - பதிந்து, உராய்ந்து. உதயன் - சூரியன். [மிக்க உயரமான கோட்டைச் சுவரில் உராய்ந்ததால் சூரியன் உடல் சிவந்தான்.]

அதன் புறம் - கோட்டைச் சுவர்மீது. நாட்டிய - நிறுத்திவைத்த. பதாகை - கொடி. மீனம் - பாண்டியனது கொடியில் உள்ள மீன். உவாமதி - முழுநிலா. மாசு - களங்கம். அவாவொடு - விருப்பத்துடன். [கோட்டைச் சுவர்மீது பறக்கும் கொடியிலுள்ள மீன் சந்திரனது களங்கத்தைத் தின்னும்.]

[இவ்வருணனைகள் அகழியின் ஆழத்தையும் கோட்டையின் உயரத்தையும் உயர்வு நவிற்சியாகக் கூறுகின்றன.]

எயில் இனம் - மதில் சுவர் வகைகள். கிறி - பொய், வஞ்சனைக் கருவிகள்.

[வரிகள் 84—93]. உறுதி - உறுதிப்பொருள். குரவ - மேம்பட்டவனே! துன்னலர் - பகைவர். வெருவுவர் - அஞ்சுவர். உள்ளற்பாற்றோ - நினைக்கக் கூடுமோ. புரை - குற்றம்.

[வரிகள் 94—103] கறங்கு - பம்பரம். முனமுனம் - முதன்முதலாக. அழிவு - மரணம், நாசம். அஃதொழி வாயில் - மரணம் அல்லது நாசத்தை ஒழிக்கத் தக்க வழி. ஆயல்பாற்று - ஆராயும் தன்மையுடைத்து. யாக்கை - உடல். சேடியர் - தோழிகள்.

வினாக்கள்

1. சுந்தரமுனிவரை மக்கள் யாவரும் வரவேற்ற ஆரவாரம் எவ்வாறு வர்ணிக்கப்படுகிறது?

2. "என் பவ பாசம் இரிந்திட நின் பதம் இறைஞ்சுவன்"—சந்தர்ப்பம் கூறி விளக்குக.

3. "பால் சொரி சுரை தென்பாண்டி"—இது எவ்வாறு சொல்லாமலே விளங்குகின்றது?

4. மலயம், இமயம்—இவற்றில் பெருமை மிக்கது எது? காரணம் கூறுக.

5. தாமிரவர்ணியின் பிறப்பிடம், அது பாயும் பிரதேசத்தின் வளம் இவற்றை ஆசிரியர் எவ்வாறு வர்ணிக்கிறார்?

6. நெல்லையில் ஜீவகனுக்கு அமைக்கப்பட்ட அரணிலுள்ள அகழியின் ஆழத்தையும், கோட்டைச் சுவரின் உயரத்தையும் எவ்வாறு குடிலன் விவரிக்கிறான்?

7. பதவுரை எழுதி, கருத்தை விளக்குக:

— — — — அதன்புறம்
நாட்டிய பதாகையில் தீட்டிய மீனம்
உவாமதிக் குறுமா சவாவொடு நக்கும்.

8. காலத்தின் இயல்புபற்றிச் சுந்தரமுனிவர் கூறுவது என்ன?

9. வினை தெரிந்து செய்யும் வேந்தன் முதன்முதல் யாது செய்தல் வேண்டும்?

பயிற்சி

1. பொருள் கூறுக: கழைகறிகளிறு; குரத்தெழுமோதை; இரிந்திட; கடிபுரி; கடிமலர்; சரதம்; விளம்பாது; குறுமுனி; வாயசம்; பொன்னி; மருப்பு; சந்தனுடவி; பொன்னகர்; அடையலர்; துன்னலர்; கட்செவி; நடிகை; மஞ்சு; இஞ்சி; உரிஞ்சி; உதயன்; பதாகை; உவாமதி; பொருது; புரை; கறங்கு.

2. பிரித்தெழுதுக: குரத்தொழுமோதை; தீதற; கடக்கரும்; எமக்கெலாம்; கண்ணுதல்; வெண்மருப்பு; தொன்னகர்; கட்செவி; உறுமாசவாவொடு; வேண்டியதியாதோ; திருவுறையும்; போதற்கொத்ததாமோ.

3. பகுதி கூறுக: அவித்து; கேண்மோ; ஓதுவன்; நோக்க; விளம்பாது; தந்த; கவிழ்த்த; உறையுள்; பொலிவுறல்; புலப்பட; நாட்டிய; கேட்கினும்; வெருவுவர்; வென்று.

4. பின்வரும் தொடர்கள் யாரைக் குறிக்கின்றன? குருகுல விஜயன்; கண்ணுதலிறைவன்; குறுமுனி; திருமகள்; உதயன்.

IV. பல்சுவைப் பகுதி

1. புறநானூறு

எட்டுத் தொகை என்ற சங்க கால நூல்களைச் சேர்ந்த புறநானூறு என்பதிலிருந்து பின்வரும் செய்யுள் தரப்பட்டுள்ளது. பாரி என்ற வள்ளலைக் கபிலர் என்ற பெரும் புலவர் பாடிய பாடல்களில் ஒன்று பின்வருவது.

பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர் ;
பாரி ஒருவனும் அல்லன் ;
மாரியும் உண்டீண் டுலகுபுரப் பதுவே.

—கபிலர்

குறிப்புரை

பல ஏத்தி-பல கூறிப் புகழ்ந்து. செந்நாப் புலவர் - செம்மையான வாக்கையுடைய புலவர்கள். ஒருவன் புகழ்வர் - ஒருவனையே புகழ்வார்கள். புரப்பது - காப்பது. மாரி - மழை. "உலகத்தைக் காப்புதற்குப் பாரி ஒருவன்தானா இருக்கிறான்? இல்லை. மழையும் உலகத்தைக் காப்பதற்கு இருக்கிறது," என்று கூறுவதால், கபிலர் பாரியைப் பழிப்பதுபோலப் புகழ்கிறார். பாரியின் வண்மை மாரியின் வண்மையை நிகர்த்தது என்பது கருத்து.

2. குறுந்தொகை

குறுகிய அடிகளையுடைய பாக்களால் தொகுக்கப்பட்ட குறுந்தொகை என்பது சங்க கால நூல்களில் எட்டுத் தொகையைச் சேர்ந்தது. பின்வரும் செய்யுள் குறுந்தொகையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இதைப் பாடியவர் இறையனார். பாண்டியன் தூக்கிய பொற்கிழியை அறுத்துக் கொள்ளுமாறு தருமி என்பானுக்கு இறைவனே இச்செய்யுளைப் பாடிக்கொடுத்தார் என்பர்.

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி !
காமம் செப்பாது கண்டது மொழிமோ.
பயிலியது கெழீஇய நட்பின் மயலியற்

செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே ?

—இறையனார்

குறிப்புரை

கொங்கு - பூந்தாது. தேர் - ஆராய்கிற. அம் சிறை - உட் சிறகு. தும்பி - வண்டு. (தும்பி, அண்மைவிளி). காமம் செப்பாது - ஒரு பட்சமாகக் கூறாமல். மொழிமோ - சொல்வாயாக. பயிலியது கெழீஇய நட்பு - நெருங்கிப் பழகிய நட்பு. மயில் இயல் - மயில்போன்ற சாயல். செறி எயிறு - நெருங்கிய பற்கள். அரிவை - பெண். நறிய - நறுமணமுள்ளன. " அரிவை கூந்தலைப் போல் நறுமணமுள்ள பூக்கள் உண்டோ?" என்று தலைவன் வண்டினைப் பார்த்து வினவுகின்றான்.

3. அன்பே கடவுள்

[இதன் ஆசிரியரான சுவாமி சுத்தானந்த பாரதியார் புதுவை அரவிந்தர் ஆசிரமத்தில் நெடுங்காலம் யோகம் பயின்ற துறவி. தமிழ்ப் பற்று மிகுந்தவர். பல செய்யுள் நூல்களையும் உரைநடை நூல்களையும் இயற்றியுள்ளார்.]

பாடுங் குயிலின் பாட்டினிலே,
பசிய சோலைப் பழத்தினிலே,
ஆடும் மயிலின் தோகையிலே,
அழகின் இயற்கை வனப்பினிலே,
வாடும் பயிரை மகிழ்வுறுத்த
வானம் வழங்கும் வண்மையிலே,
காடும் வீடு மிருந்துநிதம்
கண்ட பயனும் அன்பேதான். (1)

கல்லா லடியிற் கனிந்தமொழி,
கண்ணன் குழலின் எழுந்தமொழி,
சொல்லா மோனர் காட்டுமொழி,
சுத்தர் சொன்ன சுருதிமொழி,
எல்லாம் துறந்த புத்தனுடன்
ஏசு நாதர் இயம்புமொழி
அல்லா ரஸூல் அருளுமொழி
அன்பு மொழியென் றறிந்தேனே ! (2,

அன்பே கடவுள் என்றறிவேன் ;
அன்பே யவன்பேர் வடிவென்பேன் ;
அன்பே கூடும் வழியென்பேன் ;
அன்பு மலரால் வழிபடுவேன் ;
அன்பிற் பெரிய தொன்றறியேன் ;
அனைத்தும் அன்பின் விரிவென்பேன் ;
இன்ப முண்மை யறிவாகி
யிருக்கும் அன்புப் பரம்பொருளே ! (3)

—சுவாமி சுத்தானந்த பாரதியார்

குறிப்புரை

1. வானம் வழங்கும் வண்மை - மழை. நிதம் - தினந்தோறும்.

2. கல்லால் - ஆலமரம். சிவபெருமான் கல் ஆலமரத்தடியி லிருந்து சீடர்களுக்கு உபதேசித்த மொழி. சுத்தர் - முனிவர். கண்ணன் குழலின் எழுந்த மொழி - கண்ணன் குழலோசை; பகவத்கீதை. மோனர் - மௌனிகள்.

3. அன்பே அவன் பேர் - கடவுளின் பெயர் அன்புதான். கூடும் வழி - கடவுளை அடையும் வழி.

4. புள்

தனிப் பாசுரத் தொகை என்ற நூலிலிருந்து இச்செய்யுள் எடுக்கப் பட்டுள்ளது. இந்நூலின் ஆசிரியர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி யார் ஆவர். இவர் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரி யராயிருந்து புது நூல்களை இயற்றியும் மாணவர்களுக்குத் தமிழ்க் கற் பித்தும், தமிழின் மறுமலர்ச்சிக்கு அளப்பரிய தொண்டாற்றியுள்ளார். தனிப் பாசுரத் தொகையிலுள்ள செய்யுட்கள், பதினான்கு அடிகளைக் கொண்ட அகவற்பாக்களாகும்.

புள்ளே ! மென்சிறைப் புள்ளே ! பலவகை
வண்ணமும் வாய்ந்த வனப்பும் யானறிவல் ;
எண்ணிய வெண்ணமுமென் கொலோ ? அறியேன்.
நீயுமின் புறுவை ; நின்னிசை யதனுன்
ஏனைய வுயிர்க்கு மின்பஞ் செய்குவை ;
வேண்டுழிச் செல்குவை ; வேண்டுந புரிவை ;
வஞ்சகஞ் செய்துநின் வான்செல றகைத்து

நினக்கு வருத்த நினைத்து விளைத்தலிற்
களிப்பர், அந்தோ கண்ணில்புன் மாக்கள்!
ஐயகோ நின்னை யருமையிற் பேணார்!
வெய்ய கணைகொடு வீழ்ப்பர்! அதாஅன்று,
மிருக மெனக்களீஇ மிசைவர் நின்றசை.
இன்ப வுருவினோய்! எளியரை
வருத்திய வலியரை வருத்துந் தெய்வமே.

—வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்

குறிப்புரை

புள் - பறவை. சிறை - சிறகு. வண்ணம் - நிறம். வேண்டுழி - வேண்டுமிடத்துக்கு. வான் செலல் தகைத்து - ஆகாயத்தில் பறத்தலைத் தடுத்து. கணை - அம்பு. கொடு - கொண்டு. கண் - இரக்கம். கண்ணில் - இரக்கமில்லாத. புன் - அற்பமான. மாக்கள் - விலங்குகளைப் போன்ற மனிதர். பேணார் - பாதுகாக்கமாட்டார்கள். அதாஅன்று - அவ்வாறல்லாமல். களீஇ - களித்து. மிசைவர் - புசிப்பர். நின்றசை - நின் + தசை, உன்னுடைய தசையை.

வினாக்கள்

1. கபிலர் பாரியைப் பழிப்பதுபோலப் புகழ்வது எவ்வாறு?

2. இறையனார் தும்பியை எவ்வாறு வர்ணிக்கிறார்? தும்பியினிடம் என்ன வினவுகிறார்?

3. சுத்தானந்த பாரதியார் அன்பை இயற்கையில் எங்கெல்லாம் கண்டதாகக் கூறுகிறார்?

4. எல்லா மதங்களும் அன்பையே உபதேசிக்கின்றன என்பதை சுத்தானந்த பாரதியார் எவ்வாறு விளக்குகிறார்?

5. புள் தனக்கும் பிறருக்கும் இன்பம் செய்வது எவ்வாறு?

6. 'கண்ணில் புன்மாக்கள்' யாவர்? அவர்கள் புள்ளினை எவ்வாறு வருத்துவர்?

7. புள் என்ற செய்யுளின் கடைசி வரியைப் போன்ற ஒரு பழமொழியைக் கூறு.

பயிற்சி

1. பொருள் கூறுக: மாரி, புரப்புது, கொங்கு, தும்பி, எயிறு அரிவை, நிதம், மோனர், தகைத்து, பேணார், கணை, மிசைவர்.

2. பிரித்தெழுதுக: ஒருவர்புகழ்வர்; சேந்நா; உண்டுண்டுலகு; அஞ்சிறை; எயிற்றரிவை; மென்சிறை; செலறகைத்து; கண்ணில் புண்மாக்கள்; நின்றசை.

3. பின்வருவன என்ன தொடர்கள்? ஒருவற்புகழ்வர்; சேந்நா; தேர் வாழ்க்கை; மயிலியல்; மென்சிறை; வாய்ந்தவனப்பு; புன்மாக்கள்.

4. மேற்செய்யுட்களில் விளிவேற்றுமை ஏற்றுள்ள பெயர்களை எழுதுக.

1. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

(டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், எம்.ஏ., பி.எச்.டி.)

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே," என முழங்கினர் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார். "ஒற்றுமையாக உழைத்திடுவோம், நாட்டில் உற்றதுணைவராய் வாழ்ந்திடுவோம்", என்றார் கவிமணி தேசிக விநாயகம். இறக்கும் தருவாயில் இருந்த ஒரு முதியவர் தம் பிள்ளைகளை அழைத்து, விறகை ஒவ்வொன்றாகக் கொடுத்தும், கட்டாகக் கொடுத்தும் ஒடிக்குமாறு பணித்தார் என்றும், ஒன்றினை ஒடித்த பிள்ளைகள் கட்டினை முறிக்கக் கூடாத காரணத்தை வைத்து, அவர்களுக்கு ஒற்றுமை யுபதேசம் செய்தார் என்றும் சொல்லப்படுகிற கதை நம்மில் பலர் அறிந்ததே. திருவள்ளுவரும் ஒற்றுமையின் அருமையை ஓர் உதாரண முகத்தான் விளக்கியுள்ளார். ஒரு பெரிய வண்டி இருக்கிறது. அது வலிமை மிக்கதே. எனினும், மயிற்றோகையை நிரம்ப நிரம்ப வாரி வாரிப் போட்டுக் கொண்டேயிருந்தால், அவ்வண்டியும் தாங்காது அச்சு ஒடியும். தோகையோ மிகவும் நொய்மையானது. வண்டியின் அச்சோ மிகவும் வலிமையுடையதாய் உள்ளது. எனினும், மேலும் மேலும் திரண்டு கூடி தோகைகள் வருவதால் அச்சு இற்றுப்போகிறது. அதைப்போலவே, எத்துணை எளியராயினும், நமது பகைவர் சேர்ந்து சேர்ந்து கூட்டமாக வருவாரேயாயின், நமது வலிமை பெரியதாயினும், பயனின்றிப் போம். நாமே ஒற்றுமை மிக்குப் பலரையும் நம்மோடு சேர்த்துக் கொள்ளுவோமாயின், வரும் பயன் மிகப்பெரிதன்றோ? இவற்றையெல்லாம் உணர்த்த எடுத்துக்கொண்ட வள்ளுவப் பெருந்தகையார், "பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம், சால மிகுத்துப் பெயின்," என்று வழங்கியருளினர்.

நம் சுற்றத்தாரேயன்றி, நமது ஏவல் செய்வோர் தாமும் நம்மோடு இயைந்தவராய் இருத்தல் வேண்டும். நாமொன்று கருத, நம் வேலைக்காரர் பிறிதொன்று நினைத்துச் செய்து நமக்கு எள்ளல் வாங்கித் தருவாராயின், அவ்வேலைக்காரரால் நமக்கு

உதவியுண்டாவதற்கு மாருகப் பல சங்கடங்கள் வந்து சேரும். சங்கடங்கள் ஏற்படின், கவலையுண்டாவது உறுதி. கவலையேற் பட்டாலோ, கரு மயிர் நரைத்தல் ஒருதலை. எனவே, நம்மோடு ஒற்றுமைப்பட்ட வேலையாட்கள் இல்லையேல், நாம் விரைவில் மூப்பு உற்றவர் போன்று தோன்றுவோம். இதன் உண்மை, பழந்தமிழ்ப் பாடல் ஒன்ருலும் அறியப்படுகிறது. முன்னுளில் **பிசிராந்தையார்** என்னும் ஒரு புலவர் இருந்தார். அவருக்கு வயது பல ஆகியும் நரை தோன்றவில்லை. சில புலவர், அவரை ஒரு நாள் அதற்குக் காரணம் கேட்டனர். அவர் சொல்லிய காரணங்களுள் ஒன்று, 'யான் கண்டனையர் என் இளையரும்' என்பது. அதன் கருத்து, 'நான் நினைக்கிறபடியே நினைத்து என்னுடைய ஏவல் செய்வோரும் என்னேடு இயைந்து செயல் களைப் புரிகின்றனர். என் இல்லத்தில் சண்டைத் தொல்லைகள் இல்லை' என்பதாகும்.

இனி, குடும்பத்தாரிடையே பூசலுங் கலாமும் விளையக் கூடிய வேளைகளில், புலவர்கள் சிலர் ஒற்றுமையுறை நல்கித் தடுத்துள்ளனர் என்று அறிகிருேம். **நலங்கிள்ளி** என்னும் சோழனும் **நெடுங்கிள்ளி** என்னும் சோழனும் தாயத்தார்கள். அவருள் நலங்கிள்ளி மிக்க வீரம் வாய்ந்தவன்; சேர, பாண்டிய அரசரை வென்று, அவர்தம் வஞ்சி என்னும் ஊரையும், மதுரையென்னும் ஊரையும் புலவர்க்கு வழங்கத்தக்க ஆற்ற லுடையவன். அவன் ஒரு நாள் உறையூரை முற்றுகை யிட் டான். உள்ளே பங்காளியாகிய நெடுங்கிள்ளி இருந்தான். பார்த்தார் ஒரு புலவர்; 'அழகிது' என நினைத்தார். நலங் கிள்ளியிடம், 'ஒன்றுபட்டால் வாழ்வுண்டு; இன்றேல் இரு வர்க்கும் தாழ்வே' என்று கூறினர். இக்கருத்துப் பொதிந்த பாடல் புறநானூற்றிற் காணப்படுகிறது. அதன் போக்கு, "அரச! நீ பொர நினைக்கும் அரசன் சேரனும் அல்லன்; பாண்டியனும் அல்லன்; சோழனே ஆவன். நீயும் சோழன்; அவனுஞ் சோழன். நீயும் ஆத்திமாலை சூடியிருக்கிருய்; அவ னும் ஆத்திமாலை சூடியிருக்கிருன். அஃது ஒன்றே நீங்கள் இரு வரும் ஒரு குடிப்பிறந்தீர் என்பதைக் காட்டுமே! நும் இருவ ருள் எவர் தோற்ருலும், தோற்பது நும் குடியன்ருே? அவ்

வசை வரலாமா? நீங்கள் இருவரும் வெற்றிகொள்ள முடியாது என்பது வெளிப்படை. உமது குடிக்கு வரும் பழியை நீக்க வேண்டுமானால், இம்மாறுபாட்டை உடனே தவிர்க்க வேண்டாவோ? நீவிர் பொருவீரானால், உம் பகைவரெல்லாம் உடம்பு பூரித்து உவகை எய்துவர். அவர் உவகை நுமது இளிவரல் அன்றோ? நீர் போர் குறித்து நிற்பது நும் குடிக்கு ஏற்றதன்று,'' என்பதாகும்.

நலங்கிள்ளி 'குடிக்கு வடு உண்டாகும்' என்று கேட்டவுடன் போர்க்கோலம் நீத்தான். நெடுங்கிள்ளியும் புலவர் மொழியைக் கேட்டு இகலை விட்டான். இங்ஙனம் ஒற்றுமைப் படுத்திய புலவரது பெயரை நாம் அறியவேண்டாவோ?

கோவூர் கிழார், நலங்கிள்ளியையும் நெடுங்கிள்ளியையும் நண்பராகச் செய்தல்

வேண்டினும் அவர் பெயரை அறியோம், ஊரை அறிவோம். அவ்வூர்ப் பெயராலேயே அவர் இற்றை நாள்வரை அறியப்படுகிறார். அவரை மறவாது இருப்போமாக! **கோவூர் கிழார் வாழ்க!**

மற்றொரு புலவர், பாண்டியன் ஒருவனுக்கும் சோழன் ஒருவனுக்கும் ஓர் அறவுரை பகர்ந்துள்ளார். அவர் காவிரிப் பட்டினத்துக் **காரிக் கண்ணனார்** எனப்படுவர். வெள்ளியம்

பலத்துத் துஞ்சிய **பெருவழுதி** என்னும் அப்பாண்டியனையும், குராப்பள்ளித் துஞ்சிய **பெருந்திருமா வளவன்** என்னும் அச் சோழனையும் ஒருநாள் ஒருசேரக் கண்ட அப்புலவர்க்கு உண்டான மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. உடனே அவர் பாடத் தொடங்கிவிட்டார். "பால் நிறக் கடவுளும் நீல நிறக் கடவுளும் உடனிருப்பதுபோல் உள்ள நீவிர் இருவீரும் இயைந்திருப்பது இனிது. அண்ணனும் தம்பியுமாகிய பலராமனும் கண்ணபிரானும் ஒருங்கு இருப்பது போன்று உள்ளது உமது தோற்றம். இதனினுஞ் சிறந்த காட்சி பிறிதொன்று உண்டோ? நீங்கள் இருவீரும் ஒருவீர் ஒருவீர்க்கு உதவி புரிவீராக. நீவிர் இங்ஙனே ஒன்றுபட்டிருப்பின், கடல் சூழ்ந்த பேருலகு நும் கையகப்படுவது மெய்யே யாகும். இப்படி நீவிர் அன்பினால் இயைந்துள்ளதைக் காணும் சிலர் பொறாமை கொண்டு, நல்லன சொல்லுவார்போல் சில சொல் சொல்லி நும்மைப் பிரிக்கப் பார்ப்பர். நான் வேண்டுவதெல்லாம், இன்று போலவே என்றும் இருங்கள் என்பது. இருப்பீராயின், வெற்றியெல்லாம் நும் இருவர்க்கேயாம். நுங்கள் கொடிகளே பிற நாடுகள் எங்கும் துலங்கும். பிரியன்மின், பிரியன்மின்," என்பது அவர் பாட்டின் கருத்து.

மற்றுமோர் புலவர், சினந்த தந்தையை எதிர்த்த மக்களோடு ஒன்றுபடுத்தி வைத்தார் என்றும் அறிகிறோம். அப்புலவர் பெயர் **எயிற்றியனார்** என்பது; ஊர் புல்லாற்றூர். **கோப்பெருஞ் சோழன்** என்னும் அரசன், உறையூரை ஆண்டு வரும் நாளில், ஒருநாள் அவனுடைய புதல்வர் இருவர் அவனோடு மாறுகொண்டனர். எதிர்த்து நின்ற அவரோடு பொரக் கருதி எழுந்தான் சோழமன்னன். அப்பொழுது அங்கேயிருந்த பைந்தமிழ்ப் புலவர், "விறல் கெழுவேந்தே!" என்று விளித்தவுடன், செவி சாய்த்து நின்றான் நிருபன். புலவர் உடனே தமது பொருளுரையைப் புகலத் தொடங்கினார். அதன் சாரம், "பற்பல அமருள் வென்று மேம்பட்ட வேந்தே! இப்போது உன்னோடு எதிர்த்து வந்து நிற்போர் உன் பகைஞர் அல்லரே. நீயும் அவர்க்குப் பகைஞன் அல்லை. பகைஞரைக் கொல்லும் களிற்றையுடைய தலைவ! நீ புகழை இவ்வுலகில் எய்தி, உயர்ந்த உவகை அடைந்த பிறகு, உன் புதல்வர்க்குத்

தானே உன் அரசு உரித்தாகும்! இதனை நீயே அறிவையே!" என்பது ஆகும்.

இப்பொருளுரையைக் கேட்டும், அரசன் ஓர் அடி எடுத்து வைப்பது தோன்றிற்று புலவர்க்கு. "இன்னும் கேட்பாயாக, இசையில் விருப்பமுடையோய்! பெரிதும் கேட்பாயாக! புகழில் இச்சையுடையோய்!" என்பன போன்ற மொழிகளைச் சமயமறிந்து சொல்லி, அவர் மேலும் சொல்லலுற்ருர். "புதல்வர் ஆலோசனையின்றி, அறிவு குன்றி எதிர்ப்பட்டுள்ளனர். தோற்றுப் போனுல் உன் செல்வத்தைப் பின்னர் அவருக்கு அல்லாமல் வேறு எவருக்குக் கொடுக்கப் போகிருய்? போரினை விரும்புகின்ற செல்வ! ஒருகால் நீ அவருக்குத் தோற்ருல், உன் பகைவரெல்லாம் உன்னை இகழ்ந்து மகிழ்வர். உலகில் பழியையே வைத்துச் சொல்லவேண்டியிருக்கும். நாண் உன் ஆற்றலில் ஐயமுள்ளேன் என்பதன்று. அவ்வாற்றலை இவரிடம் காட்டவேண்டா என்பதே எனது வேண்டுகோள். உன்னுடைய வீரம் உன்னைவிட்டு இப்பொழுது நீங்கியிருக்கட்டும். உன்னுடைய ஊக்கம் பிறவற்றிற் செல்லட்டும். நல்வினைகள் பல செய்வாயாக. வாழிய, அரசே!" என்று நயம்பட உரைக்கப்பட்ட இவ்வுரையையும் மறுத்துப் புதல்வரொடு பொருவதற்கு அரசன் மனம் இயைந்திருக்குமோ? புலவர் உரைக்குங் காலே, வேம்பும் கரும்பும்போல இடையிடையே கடுஞ் சொல்லும் புகழ் மொழியும் பெய்து உரைத்த நயம் வியக்கற்பாற்று. அவர் அழைக்கும்போதே, அவன் பெருமையையும், வீரத்தையும், வென்றியையும், உரைத்து அழைத்தார். இடையிடை அவன் ஆற்றலின் சிறப்பைக் குறிக்கும் சொற்களைக் கூறினுர். "உனக்குத் தெரியாத தன்று" என்று சொன்னுர்; புகழ் விருப்பம் உள்ள அவன், பழிதரும் செயல் புரியலாகாது என்பதை வற்புறுத்தினுர்; புதல்வரை வெறுத்துரைப்பார் போன்று சில சொன்னுர். இவையெல்லாவற்றிலும் மிக்கதாக, "அமரில் விருப்பமுள்ள செல்வ" என்றும் "உன் வீரம் இப்பொழுது உன்னைவிட்டு இருக்கட்டும்" என்றும், அவர் மொழிந்த மொழிகளின் சிறப்பைக் கண்டு நாம் மகிழாதிருக்க முடியாது. ஓர் அரசன் முன் நின்று, "நீ உன் புதல்வர்க்குத்

தோற்றால்,'' என்ற கூற்றைக் கூறுவது எளிதன்று. அரசன் வெகுளாதிருக்கும் பொருட்டும், வெகுண்டு புதல்வரையே அழித்துவிடாதிருக்கும் பொருட்டும், எழுச்சியைத் தடுக்கும் பொருட்டும் அன்றோ அத்தண்டமிழ்ப் புலவர்,

" அமர்வெஞ் செல்வ ! நீ அவர்க்கு உலையின்
இகழுநர் உவப்பப் பழியெஞ் சுவையே !
அதனால், ஒழிகதில் அத்தைநின் மறனே !''

என இருமருங்கும் கட்டியைக் கூட்டி, இடையே கடுக்காய்த் தூளை வைத்தார் ! இங்ஙனமெல்லாம் நன் மருந்து தரவல்ல நாவலர் பலர் வாழ்ந்த நாடு நம் நாடு. அவர் தம் ஊர் பேர் உரைகளை மறந்துள்ள நாம் இனியாவது விழித்துக் காண்போமாக. அவர் தம் பொன்னுரைகளை யறிந்து வாழ்வம் ஒன்றாகவே !

அருஞ்சொற்பொருள்

சொய்மையானது - இலேசானது. பீலி - மயிற்றோகை. சாகாடு - வண்டி. சால மிகுத்துப் பெயின் - மிகவும் அதிகமாகப் பெய்தால். எள்ளல் - அவமதிப்புச் சிரிப்பு. ஒருதலை - நிச்சயம். பூசல் - சண்டை. கலாம் - கலகம். வெளிப்படை - தெளிவாகத் தெரியுமொன்று. உவகை - மகிழ்ச்சி. இளிவரல் - இழிவு. வடு - நிலைத்த அவமானம். இகல் - போர். ஒருசேர - ஒன்றாக. பால்நிறக்கடவுள் - பலராமன். நீலநிறக்கடவுள் - கண்ணன். பொரக்கருதி - போர்செய்ய நினைத்து. விறல்கெழு - வலிமை மிகுந்த. உலையின் - தோற்றால். இகழுநர் - இகழ்வோர். கட்டி - கற்கண்டு.

வினாக்கள்

1. 'பீலிபெய் சாகாடும்' என்ற குறளின் கருத்தை விளக்கிக் கூறுக.

2. பிசிராந்தையார், 'யான் கண்டனையர் என் இளையரும்,' என்று கூறியதன் கருத்தென்ன ?

3. கோவூர் கிழார் எந்த இரு மன்னர்களையும் ஒற்றுமைப்படுத்தினார்? அவர் யாது கூறி, அவர்களைச் சந்துசெய்வித்தார் ?

4. 'பால்நிறக் கடவுளும் நீலநிறக் கடவுளும் உடனிருப்பது போல்' இருந்தோர் யாவர் ' அவர்களைப் பாடிய புலவர் யார் ?

5. கோப் பெருஞ்சோழன் தன் புதல்வர்மீது போருக்கெழக் காரணம் யாது? அவனை எயிற்றியனார் எங்ஙனம் சமாதானம் செய்தார்?

6. "இருமருங்கும் கட்டியைக் கூட்டி, இடையே கடுக்காய்த் தூளை வைத்தார்."—இதன் பொருளை விளக்கி எழுதுக.

பயிற்சி :

1. பிரித்துக் கூறுக : பிறிதொன்று ; பேருலகு ; பொன்னுரை ; தண்டமிழ்.

2. பொருள் கூறுக : பீலி ; ஒருதலை ; இளிவரல் ; ஒருசேர ; கலாம் ; இகழுநர் ; சொய்மை.

3. மேல் வினாவிலுள்ள சொற்களை நம் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

4. பின் வரும் வாக்கியங்களிலுள்ள 'உம்மைகள்' எந்தப் பொருளில் எடுத்தாளப்பட்டன? அப் பொருள் தோன்ற உமது சொந்த வாக்கியங்கள் அமைக்க :—

அ. நயம்பட உரைக்கப்பட்ட இவ்வுரையையும் மறுத்துப் புதல்வரோடு பொருவதற்கு அரசன் மனம் இசைந்திருக்குமோ?

ஆ. அவன் பெருமையையும், வீரத்தையும், வென்றியையும் உரைத்து அழைத்தார்.

2. தமிழிசை

(சி. எம். இராமச்சந்திர செட்டியார், B.A., B.L.)

நமது முன்னோர்கள் தமிழை இயல், இசை, நாடகம் என்ற முப்பகுதிகளாக வகுத்து வழங்கினர்; தமிழ் மொழியை முத்தமிழ் என்றும் குறித்தனர். ஆகவே இம் மூன்று பகுதிகளுக்கும் ஒத்த சிறப்பு இருந்திருக்க வேண்டும். இயற்றமிழுக்கு எத்துணைச் சிறப்புத் தந்தனரோ அத்துணைப் பெருமை இசைக்கும் நாடகத்துக்கும் தந்திருக்க வேண்டும். பண்டைக் காலத்தில் இயற்றமிழுக்கு இலக்கியமும் இலக்கணமும் ஏற்பட்டாற் போல இசைத் தமிழுக்கும் நாடகத் தமிழுக்கும் ஏற்பட்டிருந்தன. சிலப்பதிகார உரையுள் அடியார்க்கு நல்லார் "இசை நுணுக்கம்" முதலிய பல இசைநூல்களைக் குறிப்பிடுகிறார். அவையெல்லாம் மறைந்து போயின. இயல் இசை நாடகம் ஆகிய மூன்று பகுதிகளும் ஒருங்கு சேர்த்துச் செய்யப்பெற்ற நூல் ஒன்றே உள்ளது. அதுவே **சிலப்பதிகாரம்** என்பது.

பின்வந்த தமிழ்மக்கள் இசை நூல்களையும் நாடகங்களையும் போற்றாமல் புறக்கணித்துவிட்டதன் காரணம் எளிதிற் புலப்படவில்லை. அரசியற் புரட்சி போன்ற எதேனும் ஒரு பெரிய விபத்தினால் இவை மறைந்திருத்தல் கூடும். எல்லாவற்றுக்கும் ஊழின் பெரு வலியையே நொந்துகொள்ள வேண்டியிருக்கிறது. இயல் ஒன்றே உயிர்பெற்று நின்றது. இசையும் நாடகமும் பல நூற்றாண்டுகளாகப் பாராட்டப்படாமற் போயின.

சங்கத்தார் காலத்துக்குப் பிறகு தமிழ்நாட்டில் சைவ வைணவ எழுச்சி வரும் வரையில் புத்த சமண சமயங்களின் மேம்பாடே இருந்து வந்தது. அச்சமயத்தினர் அறவொழுக்கத்தையே மும்முரமாகக் கொண்டனர். தவமே அவர்களது சிறந்த குறிக்கோளாதலால் இசையையும் நாடகத்தையும் அவர்கள் இன்பப் போக்கெனக் கருதி வெறுத்திருந்தனர் போலும். ஆகவே, அவர்களிடம் இயல் மாத்திரம் முன்னேற்றமடைந்தது; இசை உறங்கிற்று; நாடகம் நடிப்பும் துடிப்புமற்றுக் கிடந்தது.

இந்நிலையில் சைவ சமயம் ஏழாவது நூற்றாண்டில் தழைக்கத் தொடங்கிற்று. சமயாசிரியர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவரும் இன்னிசையின் துணைகொண்டு தேவாரங்களை ஓதி மக்களைத் தம்வழிப்படுத்தினர். இசைக்குள்ள கவர்ச்சிப் பண்பை நன்கறிந்து அதனைச் சமயப் பிரசாரம் செய்வதற்குப் பயன்படுத்திக்கொண்டனர். வாய்ப் பாட்டிற்குத் துணையாக யாழ், தாளம் முதலிய இசைக் கருவிகளையும் பயன்படுத்திக் கொண்டனர். திருஞானசம்பந்தருடைய இனிய குரலோசையோடு திருநீலகண்ட யாழ்ப்பாணருடைய இனிய யாழோசையும் கலந்தது. திரள் திரளாக மக்களைக் கவர்ந்தது. பதினாயிரம் போன்ற பெருந்தொகையான திருநீற்றுத் தொண்டர் குழாம் எப்போதும் தொடர்ந்து வரும்படியாகச் செய்தது. இவ்விசையின் ஆற்றலையுணர்ந்த சுந்தரர், "நாளும் **இன்னிசையால் தமிழ் பரப்பும்** ஞானசம்பந்தன்" என்று வாயாரப் புகழ்ந்தார்.

ஏறக்குறைய அறுநூறு ஆண்டுகள் வரையில் இசைக்கு நல்ல ஆதிக்கம் இருந்தது. இக்காலத்திலேதான் தேவாரம், திருவாசகம்,நாலாயிர திவ்வியபிரபந்தம், திருவிசைப்பா முதலியன தோன்றின. இவை பண்ணோடு பாடப்பட்டன. பெண் சுமந்த பாகத்தன் இப்பண்சுமந்த பாடல்கட்கு விண்சுமந்த வியன் கீர்த்தியையே பரிசாகப் படைத்தருளினன். இப்பெருங் கீர்த்தி இன்றும் நின்று நிலவுகின்றது; என்றும் நின்று நிலவும் தன்மையுடையது. அக்காலத்தில் தமிழ் நாடெங்கும் இசை மயமாகவே காணப்பட்டது. முதல் இராஜராஜ சோழன் தஞ்சைப் பெருவுடையார் திருத்தளியில் திருப்பதிகம் விண்ணப்பிக்க ஐம்பது ஓதுவார் மூர்த்திகட்கு மானியம் அளித்தனன். சிறப்புவாய்ந்த பல கோயில்களில் பெரிய திருப்பாட்டு ஓதவும் திருப்பதியம் விண்ணப்பிக்கவும் திருநெடுந்தாண்டகம் திருவாய்மொழி முதலியன பாடுதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு, கல்வெட்டுக்கள் மூலம் சாசனங்கள் எழுந்தன. யாழ் வாசிப்பதற்கும், குழல், கொட்டி, மத்தளம் முதலியவற்றை இசைப்பதற்கும் சாசனங்கள் பிறந்தன. ஏழிசையாய் இசைப் பயனாய்த் தமிழ்த் தெய்வம் விளங்கிற்று.

பிறகு சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற காவியங்களிலுள்ள கவர்ச்சியாலும், இராமாநுசர் போன்ற சமயப் பெரியார்கள் நிகழ்த்திய தத்துவ ஆராய்ச்சியின் வலியாலும் தமிழ் மக்கட்கு இசையிலிருந்த ஈடுபாடு குறையத் தொடங்கிற்று. துறவிகட்கும் மடங்கட்கும் செல்வாக்கு அதிகரிக்கவே, இசைக்குள்ள ஆதரவு குறைந்து வந்தது.

பிறகு பதினுன்காம் நூற்ருண்டில் தமிழ்நாடு விஜயநகர மன்னர் ஆட்சிக்குள்ளாயிற்று. அம்மன்னர் பிரதிநிதிகளாக வடவேங்கடத்திருந்து தென்குமரிவரையில் பல வடுகக் குறுநில மன்னர் ஆண்டனர். இவர்களே நாயக்க அரசர்கள் எனப் படுவோர். இவர்கள் வடுகநாட்டிலிருந்து தங்களுடன் கருநாடக இசையையும் தெலுங்கு பாஷையையும் கொண்டு வந்தனர். தமிழ்நாடெங்கணும் கருநாடக இசையும், தமிழும் தெலுங்கும் ஆரியமும் கலந்த பாடல்களும் பரவின. இக்காலத்தில் விளங்கிய அருணகிரிநாதர் பாடல்களில் மிகுதியான வடசொற்களும் புதிய புதிய சந்தங்களும் மிளிர்கின்றன.

பின்வந்த மகாராஷ்டிர மன்னர்களும் கருநாடக இசையையும் வடமொழி விரவிய பாடல்களையுமே ஆதரித்தனர். பிற்காலத்திய தமிழ்ப்புலவர்களும் கீர்த்தனை, பதம், குறவஞ்சி, சிந்து முதலிய இசைப்பாடல்களைக் காலத்துக் கேற்றவாறு பாடினுர்கள். ஆகவே **செங்கோலுக்கு விஞ்சிய சங்கீதமில்லை** என்ற பழமொழிக்கு ஒரு புதிய உரை கூறுவது போலவே தமிழ்நாட்டின் இசை பரதேச உடை போர்த்துப் பரதேச உணவருந்தி மறைந்தது. இக்காலத்தில் பற்பல இசை மன்றங்களும் இசைவாணர்களும் தோன்றியும் பண்டைய தமிழ்ப் பண் உயிர்பெற்றெழவில்லை. இனியேனும் இதையறிந்து இக்குறையைப் போக்குவோமாக.

இசைக்கு இன்றியமையாத பண்புகள் அளபெடையும் அடுக்குச் சொற்களுமேயாம். இப்பண்புகள் பண்டைக்கால முதல் வழங்கப்பெற்று வருகின்றன. இவை ஒவ்வொரு மொழியிலும் உள்ளன. அங்ஙனம் தமிழிலும் உள. அளபெடையைக் குறிப்பதற்கு ஒரு நெடுங்கணக்கு உண்டு. அதனை மேற்கு

நாடுகளில் ஒரு தனி எழுத்துத் தொடராகவே கொண்டிருக்கின்றார்கள். நமது நாட்டில் அதனை வடமொழிச்சார்பான மொழிகளில் ச, ரி, க, ம, ப, த, நி என்ற ஏழு எழுத்துக்களால் குறிக்கின்றார்கள். தமிழில் முற்காலத்தில் அவ்வாறு இல்லை. அளபெடையை உயிர் எழுத்தானல் நெடிலுக்குப்பின் அதைச் சார்ந்த குறில் எழுத்தின் சேர்க்கையாலும், மெய் எழுத்தானல் அடுக்கிய ஒற்றுக்களாலும் குறித்து வந்தார்கள். உதாரணமாக "பைந்தொடீஇ" "நமச்சிவாய வாஅழ்க" "அவன்ருளாலே அவன்ருள் வணங்ங்கி" என்பவைகளில் காண்க. இசையில் அளபெடையின் மாத்திரை இன்னமும் நீளும். அளபெடையை வடமொழியில் ஆலாபனம் என்னலாம். அது, ச ரி க ம ப த நி என்ற எழுத்துக்களால் இக்காலத்தில் குறிக்கப்படும். அவ்வாறு குறிப்பதனல் அதனை அநுசரித்து மற்றவரும் எளிதில் பாடலாம். மேற்கு நாட்டு மொழிகளிலும் மேற்கூறிய தனி எழுத்து மூலமாகவும் பாடமுடியும்.

தமிழில் அளபெடையைத்தவிர வேறு குறியெழுத்துக்கள் பயிலாத நிலைமையினல் பண்டைய இசைமுறைகளை நாம் அறிவதற்கு இடமில்லை. (ஆங்கிலத்தில் இதனை Notation என்பார்கள். கர்நாடகத்தில் சுவரம் என்பார்கள்.) ஆனல் அடுக்குச் சொற்களோ எக்காலத்திலும் இருந்தன என்னலாம். பண்டைய காலத்தில் அடுக்குச் சொற்கள் பாடல் நடுவிலே வரும்.

உதாரணமாக,

"திங்கள்மாலை வெண்குடையான் சென்னிசெங்கோ லதுவோச்சிக்
கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி!
கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணய்
மங்கைமாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி!"

—சிலப்பதிகாரம், கானல்வரி

இறுதியில் வருவன:

"மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே!
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே!"

—சிலப். ஆய்ச்சியர் குரவை

* * * * *

இக்காலத்தில் வடமொழி கருநாடகப் பழக்கத்தை அது சரித்து; முதலில் அடுக்குச் சொற்கள் வருகின்றன. அந்த முறைக்குப் பல்லவி, அநுபல்லவி என்று பெயர்.

முற்காலத்தில் மோனை, எதுகை முதலியவையே யன்றி இயைபுத் தொடையும் இருந்தது; ஆனால் மிகக் குறைவு கலம்பகச் செய்யுட்களில் அது வரும்.

"ஆலநீழ லுகந்ததி ருக்கையே,
ஆனபாட லுகந்ததி ருக்கையே;
பாலினேர்மொழி யாளொரு பங்கனே,
பாதமோதலர் சேர்புர பங்கனே;
கோலநீறணி மேதகு பூதனே,
கோதிலார்மன மேவிய பூதனே;
ஆலநஞ்சமு துண்டக ளத்தனே,
ஆலவாயுறை யண்டர்க ளத்தனே."

—சம்பந்தர் தேவாரம்

இக்காலத்தில் சிந்துக்களில் அது பெரும்பாலும் வருகின்றது.

செய்யுள் நடையிலும் மிகுந்த மாறுதல் உண்டு. முற்காலத்து இசையிலும் செய்யுணடை சிறந்திருந்தது. இயலுக்கு இருந்த முழுச் சிறப்பும் இசைச் செய்யுளுக்கும் இருந்தது, அருணகிரிநாதர் காலத்தில் வடமொழிக் கலப்பு அதிக மாயிற்று. அண்மைக் காலத்திலே வெறும் பேச்சு நடையையே இசைக்கும் கொள்ளுகிறார்கள்.

அருஞ்சொற்பொருள்

அடியார்க்கு நல்லார் - சிலப்பதிகார உரையாசிரியர். புறக்கணித்து - அலட்சியம் செய்து. பெருவலி - மிகுந்த சக்தி. துடிப்பு - உற்சாகம். திருநீற்றுத் தொண்டர் - சிவனடியார்கள். வாயார - வாய் நிறைய. பண் - இராகம். பெண் சுமந்த பாகத்தன் - சிவபெருமான். பண் சுமந்த பாடல் - இராகத்துடன் கூடின பாடல். விண்சுமந்த வியன்கீர்த்தி - வானுலகம் பொருந்திய பெரும் புகழ். தஞ்சைப் பெருவுடையார் - தஞ்சாவூரில் கோயில் கொண்டுள்ள பிரகதீசுவரர். திருத்தளி - திருக்கோயில். மோனை - செய்யுளில் சீர்களின் முதலெழுத்துக்கள் ஒத்திருத்தல். எதுகை - இரண்டாம் எழுத்துக்கள் ஒத்திருத்தல். இயைபு - சீர்களில் முடிவு ஒத்திருத்தல். சிந்து - ஒருவகை இசைப் பாட்டு.

வினாக்கள்

1. இயல், இசை, நாடகம் என்ற தமிழின் முப்பகுதிகளுக்கும் பண்டைக் காலத்தில் ஒத்த சிறப்பு இருந்திருக்க வேண்டும் என்பதற்கு ஆதாரமென்ன ?

2. " இசை உறங்கிற்று; நாடகம் நடிப்பும் துடிப்புமற்றுக் கிடந்தது "—எக்காலத்தில் ? ஏன் ?

3. "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்."—இது யார் கூற்று ? ஏன் இவ்வாறு கூறினர் ?

4. இசைத் தமிழ் வளர்ச்சிக்கு, இராஜராஜன் எவ்வாறு உதவினன் ?

5. பதினன்காம் நூற்ருண்டுக்குப் பிறகு தமிழ் நாட்டின் இசை வளர்ச்சி எவ்வாறு மாறியது ?

6. "செங்கோலுக்கு விஞ்சிய சங்கீதமில்லை"—தமிழ் நாட்டின் இசை, இப்பழமொழியை எவ்வாறு உண்மையாக்கியது ?

7. இசைக்கு இன்றியமையாத பண்புகள் யாவை? அவற்றிற்கு ஒவ்வொரு உதாரணந்தருக.

8. இசைத் தமிழ்நடை முற்காலத்தில் எவ்வாறிருந்தது ? தற்காலத்தில் எவ்வாறுள்ளது ?

9. தற்கால இசையில் பல்லவி, அநுபல்லவி என்பனபோல், தமிழ்ப்பாடல்களில் வந்தவை யாவை ?

3. இளந்தமிழ் வீரர்

(யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்)

ஆற்றல், வீரம், அழகு, துணிவு, சுறுசுறுப்பு, வினையுறுதி, தைரியம் ஆகிய குணங்கள் இளமைக்கு இயல்பாகும். இக்குணங்களே உருவாய்த் திரண்ட வாலிபரிடமே, நம் நாட்டின் முன்னேற்றம் உள்ளது. வீட்டிற்கு உயிர், இனிய மக்கள்; நாட்டிற்கு உயிர், வீர வாலிபர்; வீர வாலிபரே ஒவ்வொரு நாட்டின் முன்னேற்றத்தையும் ஊக்கினர். வாலிப இரத்தம் நாடுகளுக்கு விடுதலை யீந்தது. ருஷ்யா, ஃபிரான்ஸ், அமெரிக்கா, ஜப்பான், சீனம், துருக்கி முதலிய நாடுகளில் வீரப் பொறுமையுடன் பல தியாகங்களைச் செய்து உயிரைக் கொடுத்து, சுதந்திரக் கொடியை உயர்த்திய தீரர், இளைஞரே யாவர்.

1858-முதல் இந்திய சுதந்திரப்போரை நடத்திவரும் தலைவருக்குத் துணைவராயிருப்பவர் வீர இளைஞரே.. திலகரின் சுயராஜ்ய இயக்கத்திற்கும், மகாத்மாவின் சத்யாக்கிரக வெற்றிக்கும் உயிர்நாடியாயிருந்தவர் வீர வாலிபரே யாவர். உலகம் புத்துயிர் பெற்று வருகிறது. எண்ணங்கள் விசாலமடைந்து வருகின்றன. குறுகிய தடைகளைத் தகர்த்தெறிந்து, மனித சமுதாயம் புதிய மாறுதல் பெற்று வருகிறது: சமரசமும், சுதந்திர சக்தியும் பெருகிவருகின்றன. ஜனநாயக முழக்கம் திசைபிளந் தொலிக்கிறது. தொழிலுக்கு வந்தனஞ் செய்யுங் காலம் நெருங்கிவிட்டது. மக்கள் ஒருகுலமாய் வாழும் நாள் வந்துவிட்டது. அத்தகைய புதுயுக மலர்ச்சி, இளைஞர் வீரவுணர்ச்சியால் வரும். நம் தமிழணங்கு மொழியரசியாக் விளங்கவும், தமிழிலக்கியம் புதியதுறைகளிற் பொலியவும், தமிழர் வீரமும் செல்வமும் அறிவும் ஒழுக்கமும் ஆற்றலும் செழித் தோங்கவும் பணிசெய்ய இளந்தமிழ் வீரரே வருக!

நமது கன்னித் தமிழ்நாடு, இளந்தமிழரின் ஊழியங்களையே எதிர்பார்க்கிறது. தமிழ்நாட்டின் புகழ்க் கோட்டையைச் சல்லி சல்லியாகக் கெல்லும் சாதி வேற்றுமையும்,

வகுப்புப் பொருமையும், கட்சிச் சச்சரவும், இளந்தமிழரின் சமரச முயற்சிகளாலேயே நீங்கவேண்டும்.

மக்களுக் கோர் சமயம்—புவி—மன்னுயிர்க் கோர் இறைவன் ;
மக்களும் ஓர்வகுப்பே—எனின்—மறு முண்டோ பகுப்பே ?

சுத்த சமரச சன்மார்க்கக் கொடிபிடித்து இளைஞர் கிளர்ந்தெழுக ! வீண் வேற்றுமைகளும் காலததிற்குதவாத பழக்கங்களும், முன்னேற்றத்திற்கு முரணுன மூடக் கொள்கைகளும் இளைஞரின் தைரியமான அறப்போரினுலேதான் ஒழியவேண்டும். பிராமணர்—பிராமணரல்லாதார் வாதமும், இந்து முஸ்லிம் பிணக்குகளும், பால்யவிவாகக் கொடுமையும், இளங்கைம்பெண்களின் பரிதாபமும், நாட்டின் வறுமையும், அடிமைத்தனமும், மடமையும் இளைஞராலேதான் தீரவேண்டும். ஆசாரச் சீர்திருத்தம், சமூகச் சீர்திருத்தம், தொழில் முன்னேற்றம், கல்விவளர்ச்சி, சுகாதார மேன்மை, வியாபார விரிவு, செல்வப் பெருக்கு ஆகிய எல்லாம் இளைஞரின் முயற்சியாலேயே இயலும். பாரத நாட்டைச் சுதந்திரத்திற்கு நடத்திச் செல்பவரும் இளைஞர் ; அச்சுதந்திரத்தை அனுபவிப்பவரும் இளைஞர். ஆதலின் இளைஞர் ஒன்றுசேர்ந்தால் எல்லாம் கைகூடும். அவர்கள் ஒற்றுமையே நாட்டின் வெற்றி ; அவர்களை மதிப்பதே நாட்டின் மதிப்பு : அவர்கள் ஒழுக்கமே நாட்டின் ஒழுக்கம், அவர்களை மதித்துப் போற்றி ஊக்கப்படுத்தும் நாடு, சுதந்திர நாடுகளின் முன்னணியில் நிற்கும். இளைய பாரதம் வாழ்க ! இளந் தமிழர் வாழ்க !

நம் நாட்டின் முன்னேற்றத்திற்குக் கிராம நிர்மாண வேலையே வழியென்பது நம் சுருதிவாக்கியம். அதற்கு இளந்தமிழ்த்தொண்டர்களே உயிர்போன்றவர்கள். அவர்கள் ஊக்கமுள்ள உழைப்பைக் கிராமங்களிற் பயன்படுத்தினுல், நம் கிராமங்களின் வறுமை நீங்கும் ; வளமை பொங்கும் ; தூக்கம் நீங்கும் ; தொழில் ஓங்கும் ; அடிமைத்தனம் ஒழியும் : ஆண்மை பெருகும் ; தொண்டர் பணியே சுதந்திரம் நல்கும் : நம் நாட்டு விடுதலைப் பணிக்கு ஏராளமான தொண்டர்கள் வேண்டும். கிராமத்திற்கு ஐந்தைந்து தொண்டர்களாகச்

சென்று பாதிரிகள் மாதிரி வேலை செய்யவேண்டும். பாதிரி மார்கள் தங்கள் வைராக்கியமான உழைப்பால் எவ்வளவு அற்தபுமான வேலைகளைச் செய்கின்றனர் ; தங்கள் சமய நூல் களைப் பரப்புகின்றனர் ; கோயில் கட்டுகின்றனர் ; பள்ளிக் கூடங்கள் ஏற்படுத்துகின்றனர் : மாணவர்களுக்கு 'மிஷன்' செலவில் சாப்பாடு போட்டு, அவர்களைக் கொண்டு தொழில் கள் பலவற்றை நடத்துகின்றனர் ! வைத்தியசாலை, தோட்ட வேலை, மாடு வளர்த்தல், அச்சுவேலை, நெசவு, தச்சு இரும்பு வேலைகள் முதலியவற்றை ஏற்படுத்தி, ஏராளமான தொழிலா ளருக்கு வேலை தருகின்றனர் ; இவ்வழியாய்த் தமது செல்வாக் கைப் பெருக்குகின்றனர். அந்தப் **பாதிரிகளோ**, தாங்கள் சிறு தேவையளவே அனுபவிக்கின்றனர் ; தங்கள் முழு ஆயுளையும் அருட்பணிக்கே அர்ப்பணஞ் செய்கின்றனர். அவர்கள் செய் யும் வேலைகள் நமது சமுதாயத்திற்கு நலமோ தீதோ என்பது கேள்வியன்று. நமது சமுதாயத்தின் நலத்திற்குரிய வேலைகள் இன்னின்ன வென்று நமக்குத் தெரியும். அவ்வேலைகளை ஏன் நாம் அவர்கள் மாதிரி ஊக்கமுடன் செய்யக்கூடாது? நம் வாலிபர்கள் கிராமங்களிற் குடியேறி ஏன் அத்தகைய நிலை யான பணிகளைச் செய்யக்கூடாது? அன்னிய நாட்டினர் அத்தகைய வேலைகள் செய்ய முடியுமானல் சொந்த நாட்டி னர் ஏன் செய்யலாகாது? அவர்களைவிட நூறு மடங்கு நாம் அதிகமாகச் செய்ய வேண்டுமன்றோ?

உண்மையே கடவுளாகவும், அறமே மதமாகவும், தேச சுதந்திரமே நோக்கமாகவும் கொண்டு வீர இளைஞர் முன் வரல் வேண்டும்; அவர்கள் மத போதகராயும், உபாத்தியாய ராயும், தொழிலாளராயும் கிராமங்களுக்குச் செல்லல் வேண் டும். பஜனைகள், கடவுள் வழிபாடு, பக்தி ரச கானங்கள் மூலம் கிராமத்து மக்களை விழிப்பிக்க வேண்டும் ; அவர்களுக்கு வைத்தியத்தாலும் அவசர உதவிகளாலும் ஊழியஞ் செய்து அவர்கள் அன்பைப் பெறவேண்டும்; பிறகு சுகாதார விஷயங் களை அவர்களுக்குப் போதிக்க வேண்டும். அதன் பின்னர் பள்ளிக்கூடம், வைத்தியசாலை, தொழிற்சாலை, நூற்றற் கூடம், நெசவு சாலை முதலியன ஏற்படுத்தலாம். பிறகு ஜனோபகார சங்கங்கள் ஏற்படுத்தி அவற்றின் சார்பாக விவ

சாயச் சீர்திருத்தங்களும், ஐக்கிய நாணயச் சங்கங்களும், பஞ்சாயத்தும், மதுவிலக்கும், சமூக ஒற்றுமையும் ஏற்படுத்தலாம். இத்தகைய நிலேயான பணிகளுக்கே தொண்டர்கள் தேவை. மேடைப் பிரசங்கங்கள் இனிப் போதும்!

நம் நாட்டில் எத்தனேயோ கனவான்கள் உள்ளார்கள். அவர்கள் தங்கள் பணத்தை அணி மணிகளுக்கும், ஆடம்பர மான விருந்திற்கும், வீண் சடங்குகளுக்கும், சுகபோக லீலே களுக்கும் செலவிடுகிருர்கள். மேற்சொன்ன கிராம வேலே களுக்காகச் சிறிது செலவு செய்ய அவர்கள் மனம் விழையு மாயின், அந்நாளே நன்னுளாகும். தேர்தலுக்குச் செலவு செய்யும் ஆயிரக்கணக்கான தொகையைக் கொண்டு எத்தனே கிரா மங்களேத் திருத்தலாம்! வீண் கட்சிச் சண்டைகளிலும் அகங் காரத்திலும் நாடு தற்கொலே புரிந்து கொள்ளுகிறது. நிலேயான வேலேயே வேண்டும்; அதற்குத் தொண்டர்கள் வேண்டும். அவர்களுக்கு நாட்டின் ஆதரவு வேண்டும். ஆதரவு பெருக அன்பு பெருகும்; அன்பு பெருக அருட்பணி பெருகும்; அருட் பணி பெருக அருள் தொண்டர் பெருகுவர். தொண்டர் தம் பெருமை சொல்லவும் படுமோ? தமிழ் நாட்டு இளஞ்சிங்கங் காள், இளந்தமிழர்காள், உங்கள் வீர நாட்டின் விடுதலே உங்க ளிடமே யிருக்கிறது. உங்கள் தொண்டே நாட்டின் சுதந்திரம். எழுமின், உழைமின்!

அருஞ்சொற் பொருள்

ஆற்றல் - திறமை; சக்தி. உருவாய்த் திரண்ட - நிரம்பப் பெற்ற. ஈந்தது - கொடுத்தது. நாடி-நரம்பு. விசாலம்-அகன்ற பரப்பு. தமிழணங்கு-தமிழ்த்தெய்வம். கன்னித் தமிழ்-இளமை குன்ருத தமிழ். சல்லி சல்லியாக-சிறிது சிறிதாக; அணு அணுவாக. கைம் பெண்-கணவனே இழந்த பெண். மிஷன்-சமயப் பிரசார சபை. அர்ப்பணம் செய்தல்-இலாபத்தை எதிர்பாராது கொடுத்தல். பணி-தொண்டு. ஜனேபகார சங்கம்-மக்களுக்கு உதவும் குழு. லீலே-விளேயாட்டு.

விஞக்கள்

1. நம் நாட்டின் சுதந்திரக் கிளர்ச்சியில் இளேஞர் புரிந்த தொண்டு என்ன?

2. தமிழ் நாட்டின் பெருமையைக் குலைத்து வரும் தீங்குகள் யாவை? இவை நீங்குவதற்கு எத்தகைய முயற்சி வேண்டும்?

3. கிறித்தவப் பாதிரிமார்கள் எத்தகைய முயற்சிகள் செய்கின்றனர்?

4. கிராம மக்களின் அன்பை எவ்வாறு பெற்று அவர்களுக்கு ஊழியம் செய்யவேண்டும?

5. பணம் படைத்தவர்கள் எவ்வாறு கிராமச் சீர்திருத்தத்திற்கு உதவலாம்?

6. இளந் தமிழர்கள் நம் நாட்டு விடுதலைக்கும் கிராம முன்னேற்றத்திற்கும எவ்வாறு உதவவேண்டு மென்பதைப் பற்றி ஓர் உரையாடல் நிகழ்த்துக.

4. 'அச்சம் ஒழிந்தது சுதந்திரம்'

(குமாரி திலகவதி பால்)

1947-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் பதினைந்தாம் நாள் இந்திய வரலாற்றின் புனிதப் பொன்னுள். வான வெளி தனிலே தாயின் மணிக்கொடி பட்டொளி வீசிப் பறந்து களி நடம் புரிந்தபோது, நாமும் ஆநந்த நர்த்தனம் செய்தோம். பெறற்கரிய பேறு பெற்ருேம் என இறும்பூதெய்தினேம். அறப்போர் ஆற்றி ஆண்மையை நிலை நாட்டினேம் என்று பெருமிதங் கொண்டோம். 'இந்நாட்டு மன்னர் நாம்!' என்று ஏறு போற் பீடுநடை நடந்தோம். ஆயினும் அந்தோ! பூரண சுதந்திரத்திற்கும் நமக்கும் எத்துணை தூரம்! வெள்ளையனை வெளியேற்றி விட்டதால் நாடு சுதந்திரம் அடைந்து விட்டது என்று கருதுவது அரசியல் விடுதலையைப் பொறுத்த வரையிலுமே பொருந்தும். பொருளாதாரத் துறையில் விடுதலை பெற்றுப் பயனுற வாழ முயன்று வருகின்ருேம்—ஐந்தாண்டுத் திட்டங்கள் பலவும் உருவாகி வருகின்றன. சமூகத்துறையிலோ இன்னமும் நம்மை அடிமைப்படுத்தியிருக்கும் கட்டுப்பாடுகள் எத்தனை, எத்தனை!

நம் சமூகத்தைக் கவிந்து கிடக்கும் அறியாமையெனும் இருள், அறிவு எனும் அருணேதயத்தில் மாய்ந்து மறைய வேண்டும். 'பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்' ஞானவிழி பெற்றுக் குதித்தெழ வேண்டும். இந்திய மக்கள் போர் முனையிலே வீரர்; 'மறங்கடந்த திண்டோள்; வலிவுடையர்'; 'என்றும் முதுகிற்கிடார் கவசம்'; 'நமனை அஞ்சார்'; எனினும், அன்ருட வாழ்க்கைப் போராட்டத்திலே 'அஞ்சி அஞ்சிச் சாவார்; இவர் அஞ்சாத பொருள் இல்லை அவனியிலே' என்று நெஞ்சங் குமுறினுர் அமரகவி பாரதி. 'அச்சம்' எனும் அரக்கனுக்கு ஆளாகி விட்டோம், நம்மை அடிமைப் படுத்தி விட்ட இவ்வச்சந்தான் எத்தனை எத்தனை விதங்களில் உருவெடுத்து நமது வாழ்வை நிறைவாக்க விடாமல் உருக் குலைக்கின்றது! இவ்வரக்கன் மாண்டொழிந்து போகிற போழ்துதான் நாம் உண்மைச் சுதந்திரம் பெற்றவர்களா

வோம். 'அச்சம் ஒழிந்தது சுதந்திரம்', என்றார் நாமக்கல் கவிஞரும்.

சாதி சமயக் கட்டுப்பாடுகளைப் பற்றிய அச்சம்! அர்த்த மற்ற ஆசாரங்கள் அனர்த்தமான சம்பிரதாயங்களைப் பற்றிய அச்சம்! கவிகளின் கனவு உலகிலே, 'குலமும் ஒன்றே, குடியும் ஒன்றே, வழிபடும் தெய்வமும் ஒன்றே'. நடைமுறையிலோ எத்தனை சாதி சமயப் பிரிவுகள்! 'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்' என்ற முதுமொழி பல்லாயிர ஆண்டுகளாகப் பரவி வந்த திரு நாட்டிலே இன்னமும் சாதி நூறு சொல்லு கின்றோம்; அவற்றுள் குலத்தாழ்ச்சி உயர்ச்சியும் சொல்லி வரு கின்றோம். குல ஆசாரங்களைப்பற்றிய அச்சம் தனிப்பண்பை யும் வளர்ச்சியையும் நசித்துப் போகச் செய்கின்றன. இக்குல ஆசாரங்கள் பெண் கல்விக்குத் தடை விதி போடுகின்றன; பொறுப்பேற்க முடியாத இளங் குழந்தைகளின்மீது குடும்ப பாரத்தைச் சுமத்துகின்றன. ஒத்த உளம் உடையோர் திரு மணத்தால் இணைக்கப்பட்டு இல்லறமெனும் நல்லறத்தை நடாத்தி வந்த திரு நாட்டிலே, 'கலியாண மார்க்கெட்' நிரந் தரக் குத்தகை எடுத்துக்கொண்டு விட்டது. 'கற்புநிலையென்று சொல்ல வந்தால், இரு கட்சிக்கும் அஃதைப் பொதுவில் வைப் போம்' என்று அறைகூவிய பாரதி பிறந்த பொன்னாட்டிலே, பெண்களின் நிலையென்ன? குருட்டுக் குல ஆசாரங்களில் மாத் திரமல்ல, உயிரற்ற மூடப் பழக்க வழக்கங்களிலும் நம்பிக்கை களிலும் நல்லறிவை இழக்கின்றோம் நாம். காலத்திற்கு ஒவ் வாத சகுனங்கள் ஆயிரம், சாஸ்திரங்கள் பதினாயிரம்! மனித னுடைய விந்தைக் கற்பனையிற் பிறந்து நமது வீட்டின் மூலை முடுக்குகளிலும், தோட்டந்துரவுகளிலும், ஆற்றோரங் கிணற் றோரங்களிலும் வாழ்ந்து நம்மை அச்சுறுத்தி வரும் பேய் பிசாசுகளின் லீலைகள் தான் எத்தனை! சாதிக் கட்டுப்பாடுகள் தனிப் பண்பைத் தலைதூக்கவிடாமல் தடை யுத்தரவு போடு கின்றன வென்றால், அதைச் சிறைப்பிடித்தே வைக்கின்றன சமயக் கட்டுப்பாடுகள். இவற்றைப்பற்றிய அச்சம் ஒரு சம யத்தைச் சார்ந்தவர் பிறசமயங்களை ஆராய்ந்து பார்க்க அநு மதிப்பதில்லை. அவற்றிலுள்ள நல்ல அம்சங்களை ஏற்றுக்

கொள்ள வொட்டாது குறுக்கே நிற்கின்றது குறுகிய மனப் பான்மை.

இன்னும் சில ஆண்டுகளில் இந்நாட்டு மன்னர்களாகத் திகழ்ந்து இந்திய சமூகத்தின் நல் வாழ்வின் சிற்பிகளாகப் பணியாற்ற வேண்டிய மாணவர் திலகங்கள் சிந்திக்கவேண்டிய விஷயங்கள் இவை. சமூக விடுதலைக்கு அடிகோலிய வீரர்களின் வாழ்க்கை வரலாறுகளை அவர்கள் கற்றுணர்ந்து அவர்களின் அடிச்சுவட்டிலே நடக்க முயலவேண்டும். இருள் சூழ்ந்த சமூக வானிலே விடி வெள்ளியென முளைத்து விடுதலைக்கு வழிகாட்டிய **இராஜா ராம்மோஹன் ராயின்** அரிய சாதனையை மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாக இவண் கூற விரும்புகின்றேன்.

அச்சத்தை ஒழித்து, அறப்போர் ஆற்றி, மறத்தை வென்று சமூக விடுதலைக்கு அடிகோலிய வீரர் எத்துணை இன்னல்களைத் தாங்க வேண்டியிருந்தது! இவர்கள் போர்முனையில் விழுப்புண் பட்டவர்கள் அல்ல; மாற்றாரின் வில்லம்புகள் இவர்கள் மார்பைத் துளைக்கவில்லை; ஆனால், உற்றாரின் சொல்லம்புகள் இவர்கள் வைரமுடைய நெஞ்சிற்பட்டு முனை மழுங்கிக் கீழே விழுந்தன. அடுகளத்தில் மக்களை மலையெனக் கொன்று குவித்து, குருதி வெள்ளத்தில் நீந்தி வாகை சூடியவர்கள் அல்ல; ஆனால் மக்களை மாக்களாக்கியிருந்த அடிமைத் தளைகளைத் தம் கூரிய அறிவெனும் அம்பு கொண்டு தகர்த்தெறிந்தனர். படைகள் புடை சூழ்ந்து கட்டியங் கூறி வர இவர்கள் திக்கு எட்டும் வெற்றி வலம் செய்தவர்கள் அல்ல; ஆனால் ஆயிரமாயிரம் அன்பர்களின் மனத்தை ஆலயமாகக் கொண்டவர்கள். பெண்ணுலகிற்கு விடுதலை தேடித் தந்த இராஜா ராம்மோஹன் ராயின் அறங்கிடந்த நெஞ்சிலே அச்சத்திற்கு இடமில்லை; அருள் நிறைந்த கண்களிலே மருட்சிக்கு இடமில்லை.

பதினாறு வயது இளம்பிராயத்தினன் ஒருவன் இடுகாட்டிலே நின்று கொண்டிருக்கிறான், உடலும் உள்ளமும் ஒருங்கே சோர; அவனுடைய அண்ணனது உடல் சிதையிலிடப்படுகிறது. இருள் கவிந்த அக்காலத்திய வழக்கப்படி இறந்து

விட்டவனுடைய இளம் மனைவியும் உடன்கட்டை ஏற இசைந்துவிட்டாள். சிதைக்குத் தீ மூட்டப்படுகிறது. அந்தோ! தீயின் வெப்பம் தாங்கமாட்டாமல் அவள் வெளியே ஓடி வர முயற்சிக்கிறுள்; குடிமுழுகிவிட்டதுபோல் தவிக்கின்றனர் சுற்றியிருந்தவர்; சாதி ஆசாரம் போய்விட்டாதாகப் பதறுகின்றனர்; இப்படிப்பட்ட பாவச் செயலால் அவள் அவியாத நெருப்பெரியும் நரகலோகத்தையடைந்துவிடுவாள் எனக் கழிவிரக்கங் கொள்ளுகின்றனர். அவளுக்குச் சுவர்க்கத்திலே இடம் பிடித்துக்கொடுக்க மடிதற்றிக்கொண்டு முன் வருகின்றனர். நீண்ட மூங்கிற்கழிகளைக் கொண்டு அவளை நெருப்பினுள் தள்ளி, அவள் உடல் வெந்து நீராகும்வரை தடுத்து நிறுத்துகின்றனர். இராஜா ராம் மோஹனின் கண்களிலே பொங்கியெழுந்த கண்ணீர்த்திரை அப்போது அக்கோரக் காட்சியை மறைத்து விட்டதெனினும், அவன் அகத்திரையிலே விழுந்த சோகச் சித்திரம் என்றும் மறையவில்லை. இவ்வசுர வழக்கத்தை நாட்டினின்று ஒழிப்பேனென்று அவன் உறுதிகொண்டான். மனித சமூகத்தை அடிமைப்படுத்தியிருந்த மூடப் பழக்க வழக்கங்களை அச்சமின்றித் தகர்த்தெறிய ஆரம்பித்தான். சொந்த சாதியினர் வெகுண்டெழுந்தனர். "குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பு" என்று தந்தை சீறினர். சாதியை விட்டு ஓட்டினர். வீட்டை விட்டுத் துரத்தினர். இவையனைத்தும் பஞ்சிற்பட்ட ஈட்டியெனப் பயனற்றுப் போயின. இராஜாராம் மோஹன்ராய் அன்றைய கவர்னர் ஜெனரலான பென்டிங்க் பிரபுவின் உற்ற நண்பரானர். சாதிக் கட்டுப்பாடுகளைக் கடந்தும் கடல் கடந்தும் இங்கிலாந்து சென்றும் ஆவன செய்தார். அவர் வில்லில் நாணேற்றிக் கொடுக்க, பெண்டிங்க் ஏவிய 'சதி ஒழிப்புச் சட்டம்' எனும் பாணம், 'சதி'யெனும் கொடிய அரக்கனை மாய்த்தது. சமூக விடுதலையின் அடிப்படைக் கல்லும் நாட்டப்பட்டது.

இராஜா ராம்மோஹன் ராயின் வழி வழி வந்த சுதந்திர வீரர்களின் வாழ்க்கை வரலாறுகளும் பொன்னெழுத்துகளில் பொறிக்கப்பட வேண்டியவை. அருள் வடிவான **ஈசுவர சந்திர வித்தியாசாகரர்** அஞ்சாத நெஞ்சம் படைத்தவர். கணவனை

133686

இழந்த அபலைகளுக்காக இராஜா ராம்மோஹன்ராய் விட்டுச் சென்ற போரைத் தொடர்ந்து அவர்கள் மறுமணம் செய்து கொள்ளச் சட்டபூர்வமான உரிமை வாங்கி வழங்கிய வீரர் இவர். **காந்தியடிகளின்** வாழ்க்கையை நாம் அரசியல் விடுதலையோடு அதிகமாகப் பிணைத்துவிடுவதால், அவர் சமூகப் பணியைப் பின்னணியில் வைத்துவிடுகின்றோம். நம் சமூகத்தைப் பாழ்படுத்திவந்த தீண்டாமையையும், வகுப்பு வாதத்தையும் ஒழித்த தீரர் இவர். இவரது சத்தியாக்கிரகத்தாலும் உண்ணா விரதத்தாலும் பிறந்த ஆத்ம பலத்தின் முன்னால் இவை வலுவிழந்து போயின.

"வாழ்க்கையெனும் போர்க்களத்திலே, மதியிழந்து, செயலிழந்து, வாயிழந்து விரட்டப்படும் ஆட்டுமந்தைகளைப்

TB 031 (9) N58

இராஜா ராம்மோஹன் ராய்

ஈசுவர சந்திர வித்தியாசாகரர்

போலிராதே; வீரனாயிரு", என்றார் லாங்பெல்லோ எனும் மேனாட்டுக் கவிஞர். 'அச்சமே கீழ்களது ஆசாரம்' என்று இழிவு தோன்றக் கூறினார் வள்ளுவர் பெருந்தகை. அச்சத்தினால் பிறந்த ஆசாரம் கீழ் மக்களுடையது; அச்சத்தை ஒழித்ததால் பிறந்த ஆசாரம் வீரனுடையது. போதிய சிந்தனையின் பயனாகிய தெளிந்த அறிவு இன்மையாலும், தன்னம்பிக்கையினடியாய்ப் பிறந்த ஊக்கமின்மையாலும், குறுகிய மனப்பான்மையும் தாழ்வு மனப்பான்மையும் தோன்றுகின்றன. இவையே அச்சத்திற்குக் காரணம். அச்சம் அறிவைக் கெடுத்து வளர்ச்சியைத் தடுக்கின்றது; அழகைக் கெடுத்து

மகிழ்ச்சியைப் போக்குகின்றது. நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறி வேண்டும் வளமான வாழ்வைப் பெற; வைரமுடைய நெஞ்சு வேண்டும் முறையுடன் வாழ. எங்கே அநீதி இழைக்கப் படுகின்றதோ, எங்கே ஒழுக்கந் தவறிய நிலையிருக்கின்றதோ, எங்கே மதம் அறத்தை நசித்துப் போகச் செய்கின்றதோ, அங்கே அஞ்சாமை வேண்டும் அவற்றை யெதிர்த்துப் போராட. எவனொருவன் அபலைகளுக்கும் ஆதரவற்றோர்க்கும் பரிந்து பேச அஞ்சி, பணத்திற்கும் பதவிக்கும் தலைகுனிகின்றானோ அவன் அடிமை. 'எவன் ஒரு உண்மையைக் கண்டறிந்த பின்னும் பெரும்பான்மையானவர்க்கு அஞ்சி அதை எடுத்துரைக்கத் துணிவற்றிருக்கிறானோ, அவன் அடிமை; தன் சகோதர மக்களை வருத்தும் அடிமைத் தளைகளினால் தானும் வடுப்படாதவன் சுதந்திரத்தையடைய அருகதையற்றவன்' என்கிறார் மேனாட்டுக் கவிஞர் லாவல். எங்கே மனம் அச்சத்தை ஒழித்துக் கட்டுகின்றதோ, அங்கே தெளிந்த அறிவு பிறக்கின்றது; கண்கவர் அழகு பிறக்கின்றது. 'மனம் அச்சத்தை ஒழித்த நிலையை என் நாடு எய்தட்டும்' என்று மனங் கசிந்து வேண்டுகிறார் வங்கக் கவி தாகூர். சுதந்திரக் கவி பாரதியின் பாடல் தோறும் காணக்கிடக்கின்ற அச்சாணியன்னதோர் சொல் 'அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமில்லை.'

'பாதகம் செய்பவரைக் கண்டால் பயங்கொள்ளலாகாது பாப்பா; அவரை மோதி மிதித்துவிடு.' ஆம், பாப்பாவின் சின்னஞ் சிறிய கால்களுக்கும் அவ்வலிமை வேண்டும். பாதகர்க்கு அஞ்சாதே; பாதகத்திற்கு அஞ்சி விலகு; அறிவீனர்க்கு அஞ்சாதே; அறியாமைக்கு அஞ்சு அது உன்னை அண்டவொட்டாமல் ஞானச்சுடர் ஏற்று. வறியோர்க்கு அஞ்சி உன் முகத்தை மறைத்துக்கொண்டு ஓடாதே; வறுமை நோய் உன் நாட்டைப் பீடித்து விடும் என்று அஞ்சி, அதைப் போக்கும் ஆக்க வேலைகளில் ஈடுபடு. கீழ் மக்களுக்கு அஞ்சாதே; அவர்கள் ஆசாரம் உன் நாட்டை ஆட்கொண்டு விடும் என்று அஞ்சி அதை எதிர்த்துப் போராடு.

'அஞ்சுவதஞ்சாமை பேதைமை; அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்.'

அருஞ்சொற்பொருள்

இறும்பூது - மகிழ்ச்சி. பீடுநடை - பெருமை தோன்ற நடத்தல். ஏறு - காளை. சம்பிரதாயம் - பழைய வழக்கம். நிரந்தர - நிலையான. அடிகோலிய - அடிப்படையான வேலைகளைச் செய்து. விடிவெள்ளி - சூரிய உதயத்திற்குமுன் கீழ் வானில் தோன்றும் வெள்ளிக் கிரகம். இன்னல் - துன்பம். விழுப்புண் - போர் முனையில் உடலின் முன்புறம் ஏற்படும் புண்; சிறந்த புண். அடுகளம் - போர்க்களம். குருதி - இரத்தம். கட்டியம் கூறல் - புகழ்பாடுதல். மருட்சி - பயம். சிதை - பிணத்தைக் கொளுத்த அடுக்கிவைக்கப் பெற்றுள்ள விறகு முதலியன. கழிவிரக்கம் - மிகுந்த இரக்கம். அபலை - உதவியற்றவள்; வலிமை யற்றவள். தளை - விலங்கு. வடு - ஆறிய புண்ணினால் ஏற்படும் தழும்பு. அருகதை - தகுதி.

வினாக்கள்

1. பெண்களுக்கு நம் சமூகத்திலுள்ள கட்டுப்பாடுகள் யாவை?
2. பிற சமய நூல்களை ஒருவர் ஆராய்ந்தறிய முடியாதிருப்பது ஏன்?
3. சமூகக் கட்டுப்பாடுகளில் தீயவற்றைத் தகர்த்தெறிவதற்கு மாணவர்கள் யாது செய்தல் வேண்டும்?
4. இராஜா ராம்மோகன் ராய் ‘சதி’ என்ற பழக்கத்தை ஒழிக்க உறுதி பூண்டதற்குக் காரணமாயிருந்த நிகழ்ச்சி யாது?
5. ராம் மோஹன் ராய் சதியை ஒழித்தது எவ்வாறு?
6. ஈசுவர சந்திர வித்தியாசாகரர் மாதர் சமூகத்துக்குச் செய்த உபகாரம் யாது?
7. காந்தியடிகள் எந்தச் சமூகச் சீர்திருத்தங்களுக்கு காரணரா யிருந்தார்?
8. சமூகக் கொடுமைகளுக்குக் காரணமாயிருப்பவை யாவை?
9. லாவல் என்பவர் கூறுவதென்ன?
10. பாரதியாரின் அச்சாணியன்னதோர் சொல் யாது?
11. ‘அஞ்சுவதஞ்சாமை...’ என்ற குறளின் கருத்தை விளக்குக.

5. தமிழின் உறவு : ஆங்கிலம்

(வித்துவான் N. சுப்பு ரெட்டியார், M.A., B.Sc., L.T.
தமிழ்ப் பேராசிரியர் அழகப்பா பயிற்சிக் கல்லூரி, காரைக்குடி)

உலகின்கண் பல பாகங்களிலும் உள்ள மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசி வருகின்றனர். மக்கள் தம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்குச் சிறந்த கருவியாக இருப்பது மொழி யாகும். மனிதன் இயல்பாகவே கலந்து வாழும் பிராணியாதலால், அவனிடம் வேறு பிராணிகளிடமில்லாத மொழி தோன்றி வளர்ந்து பண்பட்டு இருக்கும் ஒரு சிறந்த சாதனமாகும். இன்றைய சூழ்நிலையில் பலநாட்டு மக்களும் நெருங்கி உறவுகொண்டு வாழும் நேரத்தில் ஒரு மொழி பிற மொழிகளுடன் உறவு கொள்வது இன்றியமையாததாகி விடுகிறது. தமிழ் மொழி ஆங்கில மொழியுடன் ஏன் உறவுகொள்ள வேண்டும்? எத்தகைய உறவு கொள்ளவேண்டும்? எந்த அளவுக்கு உறவு கொள்ளவேண்டும்? அங்ஙனம் உறவு கொள்வதால் தமிழ் மொழிக்கு ஏற்படும் ஆக்கங்கள் யாவை? கேடுகள் யாவை? இவை போன்ற ஒரு சிலவற்றை ஈண்டு ஆராய்வோம்.

உலகில் எல்லாப் பாகங்களிலும் அறிஞர்கள் தோன்றிப் பல துறைகளில் பல உண்மைகளைக் கண்டறிந்து அவரவர் மொழிகளில் நூல்களாக எழுதி வைத்துச் சென்றுள்ளனர்; உயிருடன் இருப்போர் எழுதி வெளியிட்டுக் கொண்டுள்ளனர். இவ்வாறு கண்ட புதிய உண்மைகளையெல்லாம் தமிழில் கொண்டுவர வேண்டுமானால் தமிழ்மொழி பிற மொழிகளுடன் உறவு கொள்ளத்தான் வேண்டும். இங்ஙனம் தமிழ்த் தாயின் புது வாழ்வு இயக்கத்திற்கும் அறிவியற்கலை வளர்ச்சிக்கும் புத்தம் புதிய இலக்கியப் பெருக்கிற்கும் மொழிகளின் உறவு தேவை என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனால் தமிழ் வளரும் புதிய துறைகளிலெல்லாம் தமிழின் உயிர் நாடி பேசவேண்டும்; சங்க இலக்கியங்களில் கொலுவீற்றிருக்கும்

அரசிளங்குமரியாம் தமிழ்த்தாயின் அதிகார முத்திரை பெற வேண்டும்; அதாவது தமிழ் தமிழாகவே வளரவேண்டும். இவ்வாறு தமிழ் மொழியில் கருத்துச் செல்வம் பெருகி வருங் கால் புதிய புதிய சொற்செல்வங்களும் பெருகும்; வேற்று மொழிகளின் சொற்கள் தமிழில் வந்து கலக்கும். அவற்றை யெல்லாம் தமிழின் சீர்மைக்கேற்றவாறு செப்பனிட்டு நம தாக்கிக்கொள்ள வேண்டும். செப்பனிட இயலாத இடங் களில் அப்படியே ஏற்றுக் கொள்வதிலும் தவறு ஒன்றும் இல்லை. ஏற்றுக்கொள்வதில் எவ்விதத் தயக்கமும் கூடாது.

தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி என்பது பல அறிஞர் கள் ஒப்புக்கொண்டதும், மறுக்க முடியாததுமான உண்மை யாகும். இன்று தமிழிலுள்ள பிறமொழிச் சொற்களையெல் லாம் களைந்துவிடினும் அது தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்த மொழியென்பதை டாக்டர் கால்டுவெல் போன்ற மேனாட்டு அறிஞர்களும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஒரு மொழி தனித்து இயங்கினால் மட்டும் போதுமா? அங்ஙனம் தனித்து இயங்கினாலும் எல்லாத் துறைகளிலுமுள்ள கருத்துக்களைத் தெளிவாகவும் எளிதாகவும் எடுத்து இயம்பமுடியும் என்று உறுதியாகச் சொல்லமுடியாது. எடுத்துக் காட்டாக, சங்க காலத்துக்கு முன்பிருந்தே வடமொழிச் சொற்கள் தமிழில் கலந்து வந்துள்ளன. அதனால் தமிழ்மொழி பெற்றிருக்கும் சொற்செல்வமும், கருத்துச் செல்வமும், இவ்வளவு அவ்வளவு என்று வரையறுத்துக் காட்ட இயலாது. இதனால் தமிழில் சொற்களுக்கும் கருத்துக்களுக்கும் பஞ்சம் உண்டு என்று தவறாகவும் எண்ணிவிடுதல் கூடாது. ஒருவரிடம் அதிகமான செல்வம் இருப்பினும் மேலும் செல்வம் வந்து சேரும்போது 'வேண்டாம்!' என்று சொல்வாரா? தமிழில் இல்லாத புதிய துறைகளில் எல்லாம் சொற்செல்வமும் கருத்துச் செல்வமும் வந்து சேரும்போது, வளர விரும்பும்போது, எந்தத் தமிழனும் அவற்றை மறுக்கமாட்டான். இன்று தமிழில் உள்ள வட சொற்களையெல்லாம் களைந்துவிடின் சமயம்பற்றிய கருத்துக் களும் தத்துவ அறிவு பற்றிய கருத்துக்களும் மறைந்துவிடு மென்றுதான் சொல்லவேண்டும். மருத்துவம், கணிதம்,

சிற்பம், கட்டடக்கலை, சோதிடம் முதலிய துறைகளிலுள்ள கருத்துக்களைத் தெளிவாக விளக்குவதற்குப் பல வடமொழிச் சொற்களின் துணை இன்றியமையாததாக இருக்கின்றது. ஆனால் தமிழிலுள்ள அத்துறைகள் பற்றிய சொற்களை வேண்டுமென்றே களைந்துவிட்டுப் பிறமொழிச் சொற்களை வலிந்து புகுத்தும் கொடுமை கூடாது.

இன்று உலகம் பல துறைகளிலும் விரைவாக முன்னேறி வருகிறது. இந்த நேரத்தில் பல கலைகளையும் தன்னகத்தே கொண்டு திகழும் ஆங்கில மொழியின் உறவு தமிழுக்கு மிகவும் இன்றியமையாதது. இன்று ஆங்கிலம் உலகப் பொது மொழியாக வழங்கி வருகிறது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா கண்டங்களில் அது பொதுமொழியென்ற நிலையையும் பெற்றுள்ளது. உலகிலுள்ள அறிஞர்களில் பெரும்பாலாரும் ஆங்கிலமொழியை அறிந்திருக்கின்றனர். ஆங்கிலமொழி வழங்காத நாகரிக நாடுகளே இல்லையென்று கூறும் அளவுக்கு அம்மொழியின் ஆட்சி விரிந்துள்ளது. எனவே, உலகில் எப் பகுதியில் எந்தப் புதிய உண்மைகள் தோன்றினாலும், அவை ஆங்கில மொழியில் வெளிவந்துவிடும் என்பதற்கு ஐயம் சிறிதும் இல்லை. தமிழ்மொழி ஆங்கில மொழியின் உறவைப் பெற்றால் இப்புதிய கருத்துக்களையும், உண்மைகளையும் தமிழ் நூல்களில் ஏற்கமுடியும். வேறு நாடுகளிலிருந்து வேற்று மொழியின் மூலமாகப் பல கலைச் செல்வங்கள் வந்து சேரும் போது சொற் செல்வமும் வந்து சேர்ந்து வீட்டுக் கருவூலத்தை நிரப்பக்கூடும் உலகில் பல இடங்களில் பல மொழிகளிலும் தோன்றிய நூல்கள் யாவும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. அக்கருத்துக்களைத் தமிழர்கள் அறிந்துகொள்ள வேண்டுமானால் அம்மொழிகளையெல்லாம் தனித் தனியாகக் கற்று, மொழிகளைக் கற்றலிலேயே காலத்தைப் போக்காது, ஆங்கிலமொழி ஒன்றை மட்டும் கற்று அச்செல்வங்களையெல்லாம் பெயர்த்தும் தழுவியும் எழுதித் தமிழ்மொழியை வளப் படுத்தவும் இயலும். இச்செயல்களால் பல ஆங்கிலச் சொற்கள் தமிழ்மொழியில் வந்து கலக்கவும் கூடும். தமிழர்கள் அவற்றை விரும்பி ஏற்கத்தான் வேண்டும்.

தமிழில் அறிவியல், மருத்துவ இயல், பொறியியல், வானியல் கணித இயல் முதலிய துறைகளில் அதிகமான நூல்கள் தோன்றவே இல்லை. அத்துறைகளில் தமிழர்கள் அதிகமாக வளரவில்லை என்றுதான் சொல்லவேண்டும். பண்டைத் தமிழர் இத்துறைகளில் பெரும்புகழ் பெற்றிருந்தனர் என்பதற்குச் சில இலக்கியச் சான்றுகள் உள்ளன. ஆனால் இத் துறைகளைக் கலைகள் என்ற நிலைக்கு ஒரு திட்டமாக ஒழுங்கு படுத்தி நூல்களாக எழுதி வைக்கவில்லை என்று உறுதியாகச் சொல்லி விடலாம். ஒருக்கால் தோன்றி அழிந்துபட்டிருக்கவும் கூடும். இன்று ஆங்கிலத்தில் இத்துறைகள் யாவும் வியத்தகு முறையில் விரிவாக வளர்ந்துள்ளன. பௌதிகம், இரசாயனம், நில இயல், உயிரியல், தாவர இயல், பொறியியல், வானியல், கணித இயல் முதலிய துறைகளில் ஏராளமான நூல்கள் வெளிவந்துள்ளன. அவைகள் யாவும் தமிழில் மொழி பெயர்க்கப்படவேண்டும். அப்போது ஒருசில ஆங்கிலச் சொற்களைத் தமிழ்த்தாய் பிறந்த மேனியாகவே ஏற்றுக் கொள்ள நேரிடவும் கூடும் கூடியவரை ஆங்கிலச் சொற்களைத் தமிழின் நீர்மைக் கேற்றவாறு ஒலிவடிவு கொடுத்து ஏற்றுக்கொண்டால் தமிழ்த் தாய்க்கு யாதொரு குறைவும் வந்துவிடாது. இவைபோன்ற சில உண்மைகளைத் தமிழர்கள் நன்கு சிந்திக்கவேண்டும்.

ஆங்கிலேயர்கள் நமது நாட்டிற்கு வந்தபிறகுதான் ஆங்கிலத்தின் உறவு தமிழுக்குக் கிடைத்தது. அவ்வுறவைப் பெற்ற பிறகு தமிழ்மொழி பல துறைகளிலும் வளமடைந்திருக்கிறது என்பதை எவர்தான் மறுக்கமுடியும்? அவ்வாறு வளம்பெற்ற வரலாற்றை ஒரு சிறிது கண்டு ஆராய்வோம்.

முதலாவது : தமிழ் ஆங்கில மொழித் தொடர்பைப் பெறுவதற்கு முன்பு தமிழில் உரைநடை நூல்களே இல்லை. சிலப்பதிகாரம் போன்ற உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் நூல்களிலும், இறையனார் அகப்பொருள் உரையிலும், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்குநல்லார் போன்ற உரையாசிரியர் எழுதியுள்ள உரைநூல்களிலும் அத்தி பூத்த மாதிரி காணப்படும் உரைநடைகளைத் தவிர, வேறு தனி உரை

நடை நூல்களே தமிழில் இல்லை. ஆங்கில மொழியிலோ உரை நடைச் செல்வம் ஏராளமாக வளர்ந்திருக்கிறது. அம்மாதிரி தமிழ்மொழியில் உரைநடை நூல்கள் தோன்றாத வரை தமிழ் மக்களின் கல்வியறிவு நன்முறையில் வளம்பெற முடியாது. இன்று தமிழ்மொழியில் காணப்படும், நாள் தோறும் தோன்றி வரும், உரை நடை நூல்கள் யாவும் ஆங்கில மொழியின் உறவு ஏற்பட்ட பிறகுதான் தோன்றின என்று சொல்லவேண்டும். சமயத்தொண்டு புரிவதற்குக் கிறிஸ்தவப் பாதிரிமார்தான் இத்துறையில் முதன்முதலாகத் தொண்டாற்றத் தொடங்கினர். இந்த விழுமிய தொண்டைத் தொடங்கிவைத்தவர் வீராமா முனிவர் என்று வழங்கப் பெறும் **ரெவரண்டு பெஸ்கி** என்ற இத்தாலி நாட்டுப் பெரு மகனுவார்.

ஆங்கில மொழியின் உறவால் தமிழுக்கு ஏற்பட்டிருக்கும் **இரண்டாவது நன்மை** புதினம் (Novel) என்ற துறையிலாகும். ஆங்கில மொழியில் சிறந்த புதினங்கள் எண்ணற்றவை தோன்றியுள்ளன. பதினேழாம் நூற்றாண்டு தொடங்கியே இக்கலை மேனாட்டில் அரும்பி விழுமிய முறையில் செழித்து வளர்ந்து வருகிறது. இன்று மேனாடுகளில் புதினம் ஒரு சிறந்த கலை என்ற நிலையை அடைந்துவிட்டது என்றுகூடக் கூறலாம். தமிழில் இத்துறை இப்போதுதான் முகிழ்த்திருக் கிறது என்று சொல்லவேண்டும். மாயூரம் வேதநாயகம் பிள்ளையவர்களால் எழுதப்பெற்ற **பிரதாப முதலியார் சரித்திரம்**, பி. ஆர். ராஜமய்யர் எழுதிய **கமலாம்பாள் சரித்திரம்** போன்றவை தமிழில் முதன்முதலாகத் தோன்றின புதினங்களாகும். அவற்றுக்குப் பிறகு தமிழில் எத்தனையோ புதினங்கள் தோன்றிய வண்ணமிருக்கின்றன. இவையெல்லாம் பெரும் பாலும் ஆங்கில மொழி பயின்ற அறிஞர்கள் தமிழுக்குச் செய்த தொண்டாகும். ஆங்கில மொழியில் தோன்றியுள்ள மாதிரி தமிழில் புதினங்கள் இன்னும் தோன்றாவிடினும் புதினக்கலை வளரவேண்டுமென்ற ஆர்வம் தமிழ்மக்களுக்கு நன்றாக ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு எள்ளளவும் ஐய மில்லை. இத்துறையில் தமிழில் அதிக நூல்கள் தோன்று வதற்குத் தமிழ்த்தாய் ஆங்கிலத்தாயை எதிர் நோக்கியிருக்

கிருள் என்று சொல்லுவதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது.

இதற்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணக்கூடிய **மூன்ருவது நன்மை** சிறுகதை வளர்ச்சியிலாகும். ஏதோ கதைகள் என்ற பெயருக்கேற்றவாறு விக்கிரமாதித்தன் கதை, நளமகாராஜன் கதை, மதனகாமராஜன் கதை என்பனபோன்ற கதைகள் இருந்தனவேயன்றி, இன்று மேனுட்டு இலக்கிய வகைகளில் ஒன்ருகக் கதைகள் வளர்ந்துள்ள மாதிரி தமிழில் பண்டைக் காலத்தில் தோன்றவில்லை. சிறுகதையில் கதைப்போக்கு மிகச் சுருக்கமாகததான் இருக்கும். கதையில் வரும் பாத்திரங்களும் ஒரு சிலராகத்தான் இருப்பர். அவர்களுடைய உணர்ச்சியையும், உளப்பாங்கையும் நுட்பமான நாடகச்சுவையுடன் தோற்றுவிக்கும் சிறு காட்சிகள் அடங்கின வரலாறுதான் சிறுகதைச் சொல்லோவியம். படிப்போர் மனத்தில் கதையுடன் ஒருமைப் படக்கூடிய உணர்ச்சி எழுந்தால்தான் அது உயர்ந்த சிறுகதைச் செல்வமாக வைத்து எண்ணப்படும். இத்தகைய பண்புகளைக் கொண்ட சிறுகதைச் செல்வங்கள் நாடோறும் தமிழில் ஏராளமாகத் தோன்றிவருகின்றன. இத்துறையில் முதன் முதலில் **வ. வே. சு ஐயர்** இட்ட வித்து நன்கு முளைத்து, **புதுமைப் பித்தன்** போன்ற ஆசிரியர்களால் வளர்க்கப்பெற்று, இன்று நம்மிடையே வாழும் பல ஆசிரியர்களால் தரம் குறையாது பாதுகாக்கப்பெற்று வருகிறது. ஆங்கில மொழித் தொடர்பால் தான் தமிழில் சிறுகதை இலக்கியம் தோன்றியது என்று சொல்லுவதில் எவ்வித ஆட்சேபமும் இருத்தல் முடியாது.

நான்காவது: இன்று ஆங்கிலத்தில் Literary Criticism என்று வழங்கி வருவதைத் தமிழில் **இலக்கியத் திறனுய்வு** என்ற தொடரால் குறிக்கலாம். இத்துறை ஆங்கிலத்தில் இமயம் போன்று வளர்ந்துள்ளது. அம்மொழியில் தோன்றும் நூல்களுக்கெல்லாம் திறனுய்வு நூல்களும் தோன்றி வருகின்றன. எடுத்துக்காட்டாக **செகப்பிரியரின்** (Shakespeare) நாடக நூல்களுக்கெல்லாம் பல திறனுய்வு நூல்கள் உள்ளன. அவரது மூலநூல்களின் எண்ணிக்கையைவிடத் திறனுய்வு நூல்களின்

எண்ணிக்கையே அதிகம் இருக்கிறது என்று கூறப்படுகிறது. இன்று ஆங்கில மொழியில் ஏராளமான திறனாய்வு நூல்களைக் காணலாம். திறனாய்வு எங்ஙனம செய்யப்பெறல் வேண்டும் என்பதற்குக்கூடத் திறனாய்வு விதிகள் (Principles of Literary Criticism) என்ற இலக்கண நூல்களும் தோன்றியுள்ளன. தமிழில் இக்கலை சரியான முறையில் தொடங்கப்பெற்று விரிவடையவில்லை. இலக்கிய நயங்காணல், பாநயங்காணல் என்ற போக்கில் மட்டிலும் நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார் போன்ற உரையாசிரியர்களின் உரைகளில் சில குறிப்புகள் காணப்படுகின்றன என்றாலும், தொல்காப்பியப் பொருளதிகாரத்திலுள்ள மெய்ப்பாட்டியல், உவமையியல் ஆகிய பகுதிகள் ஓரளவு இத்துறையைத்தான் குறிக்கின்றன என்றாலும், இன்று மேனாட்டு இலக்கியங்களில் இத்துறை ஒரு கலை என்ற நிலை அடைந்துள்ள மாதிரி தமிழில் இன்னும் தோன்றி வளரவில்லை. ஆங்கிலக் கல்வி பெற்ற ஒரு சில அறிஞர்களால் ஒருசில நூல்கள் தமிழுக்குக் கிடைத்திருக்கின்றன என்றாலும் இத்துறையில் தமிழர்கள் வளர்ச்சி பெற்றவர்கள் என்று சொல்வதற்கில்லை தமிழிலுள்ள ஒவ்வொரு நூலுக்கும் பல திறனாய்வு நூல்கள் தோன்ற வேண்டும். இதற்கு ஆங்கில மொழியின் உறவு பெருந்துணை புரியக்கூடும்.

ஐந்தாவது : ஆங்கில மொழியின் உறவால் தமிழில் மொழி நூற்கலையும் ஓரளவு வளர்ச்சி பெற்றிருக்கிறது. உலகிலுள்ள மொழிகளைப் பல குடும்பங்களாகப் பிரித்து ஒவ்வொரு குடும்பத்திலுள்ள மொழிகளையும் ஒப்பு நோக்கு முறை என்ற முறையில் ஆராயும் மனப்பான்மை ஆங்கில மொழியின் உறவால் விளைந்த நன்மையாகும். பதினெட்டாம் நூற்றுண்டில் மேனாட்டில் அரும்பிய இத்துறை நந்தமிழ் மொழியில் சென்ற நூற்றாண்டில் தோன்றியது. டாக்டர் கால்டுவெல் என்ற அறிஞர் முப்பத்தேழு ஆண்டுகள் தமிழ்ப் பயின்று, மலையாள மொழியில் டாக்டர் குண்டர்ட் என்பார் செய்துள்ள ஆராய்ச்சிகளையும், கன்னட மொழியில் கிட்டல் என்ற அறிஞர் ஆராய்ந்தவைகளையும், தெலுங்கு மொழியில் சி. பி. பிரௌன் என்ற

பெரியார் ஆராய்ந்து கண்ட முடிவுகளையும் கொண்டு தமிழ் மொழியில் தாம் ஆராய்ந்து கண்ட பல உண்மைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்துத் 'திராவிட மொழிஇனம்' என்ற புதிய தோர் மொழிக் குடும்பம் இருந்ததை முதன் முதலாக உலகிற்கு உணர்த்தினர்; இவர் இத்துறையில் பதினைந்து ஆண்டுகள் ஓயாது அல்லும் பகலும் உழைத்தார். அதற்கு முன்னர் இத் துறையில் உழைத்த மேக்ஸ்முல்லர் என்ற மொழிநூல் வல்லார் தமிழ் முதலிய திராவிட மொழிகளை ஆரிய மொழி இனத்தில் வைத்தே எண்ணினர். டாக்டர் கால்டுவெல் தமது ஆராய்ச்சியின் முடிவுகளையெல்லாம் தொகுத்து கி பி. 1856-ல் 'திராவிட மொழியின் ஒப்பிலக்கணம்' என்ற அரியதோர் நூலை வெளியிட்டார். அதன் இரண்டாவது பதிப்பையும் சில திருத்தங்களுடன் கி. பி. 1875-ல் அவரே வெளியிட்டார். அவருக்குப் பிறகு அத்துறையில் அறிஞர் எவரும் தீவிரமான கவனம் செலுத்தவில்லை. செலுத்திய ஒரு சிலரும் ஒரு சில பகுதிகளை மட்டிலும் ஆராய்ந்து கட்டுரைகள் எழுதியிருக் கிறார்களேயன்றி முழுநூல் வடிவில் யாருமே எழுதி வெளியிட வில்லை. இத்துறையில் ஆரிய மொழிகளைப் பற்றியும் இந்தோ - ஐரோப்பிய மொழிகளைப் பற்றியும் பல நூல்கள் வெளிவந் திருக்கின்றன. இத்துறையிலும் தமிழன் ஒரு சிறந்த வளர்ச் சியைக் காணவேண்டுமானல் அவன் ஆங்கில மொழியின் உறவைக் கட்டாயம் அடைந்தே தீரவேண்டும்.

ஆறுவது : ஆங்கில மொழியின் உறவு தமிழுக்கு ஏற்பட்ட பிறகே தமிழில் அகராதி நூல்கள் தோன்றலாயின. வீரமா முனிவர் என்ற இத்தாலியப் பாதிரியார் முதன் முதலாகத் தமிழ் அகராதியைத் தொகுத்து, தமிழ்த் தாய்க்கு வழிபாடு செய்தார். அதற்கு முன்னர் தமிழர்கள் சொற்களஞ்சியத்தை நிகண்டுகள் என்ற பெயர் கொண்ட பாவோடுள்ள நூல் களையே தொகுத்து வைத்திருந்தனர். வீரமாமுனிவரின் சதுரகராதியைச் சிறந்ததோர் அகராதி என்று கொள்ள முடியாவிடினும் அதற்குப் பிறகு வெளிவந்த அகராதி நூல்கள் யாவற்றிற்கும் அதுவே முதல் நூலாக அமைந்தது. இன் றுள்ள அகராதி நூல்கள் யாவற்றிலும் சிறந்தது சென்னைப்

பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ள 'தமிழ் லெக்ஸிகன்' ஆகும். இன்று ஆங்கில மொழியில் அகராதித்துறை சிறந்த முறையில் விரிவடைந்திருக்கிறது. இலக்கியம், அறிவியல், வானியல், கணித இயல், மருத்துவ இயல், பொறியியல் முதலிய ஒவ்வொரு துறையிலுமுள்ள கலைச் சொற்களுக்கும் தனித்தனி அகராதிகள் உள்ளன. அறிவியலிலும், பௌதிகம், இரசாயனம் போன்ற ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனி அகராதி வெளிவந்துள்ளது. ஒவ்வொரு துறையிலும் பல அறிஞர்கள் பல அகராதி நூல்களைப் பதிப்பித்திருக்கின்றனர். இம்மாதிரியான பல அகராதி நூல்கள் தமிழிலும் தோன்ற வேண்டும்; தோன்றுவதற்கு ஆங்கில மொழியின் உறவு மிகமிக இன்றியமையாதது.

ஏழாவது : தமிழில் இன்று திரு. தி. சு. அவிநாசிலிங்கம் அவர்கள் கலைக்களஞ்சியப் பணியைத் தொடங்கி வைத்திருக்கின்றார்கள். ஆங்கிலத்தில் 'என்சைக்ளோபீடியா' என்று வழங்கும் இத்துறை தமிழிலும் தோன்றி வெற்றியடைய வேண்டுமானால் ஆங்கிலத்தின் தொடர்பு மிகவும் அவசியமாகும். ஆங்கிலத்தில் எத்தனை கலைக்களஞ்சியங்கள் உள்ளன! அகராதிகளைப் போலவே ஒவ்வொரு துறைக்கும் தனித் தனியாகக் கலைக்களஞ்சியம் உள்ளது. ஆங்கில மொழியிலுள்ள அத்துணை உண்மைகளும் சுருக்கமான முறையில் தமிழிலும் வர வேண்டுமல்லவா? அதற்கு ஆங்கிலத்தோடு பல கலைகளையும் பயின்ற எத்தனை அறிஞர்களின் உழைப்பு எத்தனை ஆண்டுகளுக்கு வேண்டியிருக்கும்! தமிழுக்கு ஆங்கில மொழியின் உறவுமட்டிலும் இல்லாவிடில் அதில் கலைக்களஞ்சியம் தோன்றுதல் என்பது குதிரைக் கொம்பாகும்.

எனவே, எந்தக் கோணத்தில் நோக்கினும் தமிழுக்குப் பல கலைகளும் மலிந்த ஆங்கிலத்தின் உறவு மிகமிக இன்றியமையாதது என்பது உறுதிப்படுகின்றது. தமிழ் சிறந்த முறையில் வளரவேண்டுமானால் நாம் என்ன செய்யவேண்டும்? பாரதியாரைக் கேட்போம்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்:
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்;

என்றல்லவோ மகாகவி கூறுகின்றார்! இவ்வாறு தமிழைச் சிறந்த முறையில் வளர்த்துத் "தேமதுரத் தமிழோசை"யை உலகமெல்லாம் செழிக்கச் செய்வதற்கு, ஆங்கிலத்தின் உறவு தமிழுக்கு மிகவும் அவசியம் என்பதற்கு என்ன தடை?

அருஞ்சொற்பொருள்

அறிவியல்கலை - விஞ்ஞானம். அதிகார முத்திரை - அரசாங்கத்தார் சரியான அளவை முதலியவற்றிற்குப் பொறிக்கும் அடையாளக் குறி; (சரியான தமிழ் என்ற அடையாளம்.) செப்பனிட்டு - சரியாக்கி; திருத்தம் செய்து. கருவூலம் - பொக்கிஷம்; விலையுயர்ந்த பொருள்களை வைத்துப் பாதுகாக்குமிடம். பிறந்த மேனி - ஆடை அணிகள் இல்லாத உடல்; (சிறிதும் திருத்தி மாற்றாத சொல்.) அத்திபூத்த மாதிரி - அபூர்வமாக; அருமையாக. அரும்பி - தோன்றி. குதிரைக் கொம்பு ஆகும் - இல்லாததாகும். தேமதுர - தேன்போல் இனிப்பான.

வினாக்கள்

1. தமிழ் மொழியில் பிறமொழிச் சொற்கள் கலப்பதற்குத் தற்காலச் சூழ்நிலை எவ்வாறு காரணமாகிறது?

2. வடமொழிச் சொற்களின் துணை எந்தத் துறைகளில் தேவைப்படுகிறது?

3. ஆங்கில மொழி தற்காலத்தில் பெற்றுள்ள பெருமை என்ன?

4. ஆங்கில மொழி ஒன்றை மட்டும் கற்றாலே, பிற எல்லா மொழிகளிலும் உள்ள அறிவுச் செல்வமும் நமக்குக் கிடைத்துவிடும் என்பதற்குக் காரணம் என்ன?

5. தற்கால விஞ்ஞானத் துறைகளில் ஏதேனும் ஐந்து கூறுக.

6. ஆங்கிலத்தின் தொடர்பினால் தமிழ் உரைநடை எத்துறைகளில் வளம்பெற்று வருகிறது?

7. சிறு கதையின் சிறப்பியல்புகள் என்ன?

8. இலக்கியத் திறனாய்வு என்ற துறையில் தமிழ் எந்நிலையிலுள்ளது?

9. டாக்டர் கால்டுவெல் தமிழுக்குச் செய்த பெருநன்மை என்ன?

10. தமிழ் மொழியில் அகராதிகளின் வளர்ச்சியைப் பற்றிக் குறிப் பெழுதுக.

11. கலைக் களஞ்சியம் என்பது என்ன? தமிழில் கலைக் களஞ்சியங் கள் தோன்ற, ஆங்கில உறவு ஏன் இன்றியமையாதது?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் பொருத்தமான பெயரை எடுத்து எழுதுக:

1. சுருக்கமான கதையுடன், சில பாத்திரங்களே உளவாக, உளப் பாங்கை நுட்பமான நாடகச் சுவையுடன் தோற்றுவிக்கும் சிறு காட்சி கள் அடங்கின வரலாறு——————.(சிறு கதை; புதினம; உரை நடைநூல்.)

2. அத்திபூத்த மாதிரி காணப்படும் உரைநடைகளைக் கொண்ட தமிழ் நூல்களை இயற்றியவர்————(வீரமா முனிவர்; பி. ஆர். இராஜமய்யர்; நச்சினார்க்கினியர்.)

3. சிறுகதை வளர்ச்சியை முன்னேற்றிய தமிழ்ப்பெரியார் ————.(வ. வே. சு. அய்யர், பரிமேலழகர், டாக்டர் கால்டுவெல்.)

2. பொருத்தமான சொற்களால் நிரப்புக:—

1. தொல்காப்பியப் பொருளதிகாரத்திலுள்ள மெய்ப்பாட்டியல், உவமையியல் ஆகிய பகுதிகள்——————என்ற துறையைக் குறிக் கின்றன.

2. கலைக்களஞ்சியத்தை——————என்று கூறுகிறோம்.

3. —————— என்பதுதான் பண்டைக்காலத்தில் அகராதி எனக் கருதப்பட்டது.

4. தமிழ் மொழிக்குத் தொண்டு செய்த மேனாட்டுப் பெரியார் கள் ————————.

6. சி. வை. தாமோதரம்பிள்ளை

(வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி ஏ.)

புது நூற்றுண்டு பிறந்து யாவும் இனிது செல்லும் என்றெண்ணி எதிர்பார்த்து நின்ற நந்தம் தமிழுலகம் பெரிதும் துன்புறத்தக்கதோர் நிகழ்ச்சி கேட்டு நடுநடுங்குகின்றது. அந்தோ! புதுநூற்றுண்டு பிறந்த அற்றை ஞான்றே செந்தமிழுலகில் செம்மை சான்று விளங்கிய நமது **ராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள்** இவ்வுலக வாழ்வை நீத்துச் சிவபிரான்றிருவடி நீழலிற் சென்று சேர்ந்தனர். என்னே உலகம்! என்னே வாழ்க்கை!!

தமிழ்ப்புலவ ரில்லங்களிற் பனையோலைச் சுவடிகளிற் சிறைப்பட்டுக் கிடந்து தவித்த செந்தமிழணங்கு நல்லாடையுடுத்துத் தெலுங்கு, கன்னடமாகிய பாங்கிமாரோடு அச்சுவாகனமேறி நாடெங்கும் உலாவருமாறு செய்தற்கட் பெருக்கமெடுத்து உழைத்து நின்ற நம் பிள்ளையவர்கள் காலஞ் சென்றன ரென்பதுணர்ந்த யாவரே தமது அவலமெய்ப்பாட்டினை யடக்கவல்லார்? அவ்வாருக யாம் எமது துன்பத்தை யடக்கப் புகுதலெவன்? மனத்தின்கணுள்ள துக்கம் வாய் விடுத்துக் கூறுமிடத்துச் சிறிது தணியுமன்றே. அங்ஙனங் கூறுதற்கட் குறை நிகழுமாயினும் உலகம் எம்மைப் பொறுக்க.

வாழ்க்கை: நமது தாமோதரம் பிள்ளையவர்கள் யாழ்ப்பாணத்துச் **சித்தூர் - வைரநாத பிள்ளையவர்**களது குமாரர். இவர் கி பி. 1832 ஆம் வருடம் பிறந்தனர். ஆண்டுள்ள யாழ்ப்பாணத்துக் கல்லூரியில் ஆங்கிலமும், **சுன்னுகம் முத்துகுமார சுவாமி பிள்ளையவர்**களிடம் தமிழ்க்கலையும் பயின்றனர். 1852-ஆம் வருடம் அக்கல்லூரியினின்றும் பரீட்சையிற்றேறிப் பட்டம் பெற்று வெளிப்போந்தனர். பின்னர்க் **கோப்பாயி**லுள்ளதோர் கல்விச் சாலையிற் போதகாசிரியராய் அமர்ந்தனர். அக்காலத்துச் சென்னையில் விளங்கிய **பேர்ஸிவல் துரை யவர்**களால் அழைக்கப்பட்டுச் சென்னைக்குப்போந்து **தினவர்த்த**

மானி யென்றதோர் தமிழ்ப் பத்திரிகையை நாடோறும் பதிப்பித்து வந்தனர். அங்ஙனம் பதிப்பித்தற்கண் நமது பிள்ளையவர்கள் உலகிற்குக் காட்டிய தமிழ் நூற்பயிற்சியும் ஆராய்ச்சி வன்மையும் அவர்க்கு மிக்க புகழ் விளைத்தன. இஃதுணர்ந்த துரைத்தனத்தார் பிள்ளையவர்களை இராசதானிக் கலாசாலையில் தமிழ்ப்பண்டிதராய் அமரும்படி வேண்டிக்கொண்டனர். அங்ஙனம் அக்கலாசாலையில் தமிழ்ப்புலமை நடாத்தி வருபவர்

சி. வை. தாமோதரம் பிள்ளை

1857-ஆம் வருஷத்து முதன் முதலில் ஏற்பட்ட சென்னை சர்வகலாசாலைப் பிரவேச பரீட்சையில் தேறினர். பின்னர் அவ்வாறு தேறி நான்கு திங்கள் கழியுமுன் 1858-ஆம் வருடத்தில் நிகழ்ந்த பி. ஏ. பட்டப் பரீட்சையிலுந் தேறினர், எனவே நமது தாமோதரம் பிள்ளையவர்கள் சென்னைச் சர்வகலா சாலையில் முதலிற் பி. ஏ பட்டம் பெற்ற இருவருள் ஒருவராவர். பிள்ளையவர்கள் பி. ஏ. பட்டம் பெற்றவுடன் கள்ளிக்

கோட்டைக் கல்விச் சாலையில் உதவி உபாத்தியாயரா யனுப்பப்பட்டனர். ஆண்டிருந்து சென்னைக் கோட்டையில் உயரியதோர் உத்தியோகத்திலமர்ந்து பல துறைகளிலும் தமது வாய்மை, நேர்மை, மேற்கொண்ட கடமை தவறுமை ஆதிய நற்குணங்கள் காரணமாக புகழப்பெற்று விளங்கி, 1882-ஆம் வருடம் உபகாரச் சம்பளம் பெற்று வேலையினீங்கினுர். இடையில் இவர் கோட்டையில் வேலையிலமர்ந்திருக்கும் போழ்தே 1871-ஆம் வருடம் பி. எல். பரீட்சையிலுந் தேறியிருந்தனர். ஆகவே தாம் வேலையினீங்கினவுடனே 1884-ஆம் வருடம் குடந்தையம்பதியில் நியாயவக்தாவாய் அமர்ந்தனர். அதன் மேற் புதுக்கோட்டைச் சமஸ்தானத்தில் நியாயாதிபதியா யிருந்து உலகிற்கு நன்மை செய்வாராயினர். அக்காலத்தில் அவர்க்கு மகப்பிரிவு நேரிட்டமையின் வேலையை விடுத்துச் சென்னைக்கு வந்துவிட்டனர்.

தமிழ்நூற் பதிப்பு: இது நிற்க. குடைந்தையிலிருந்த பொழுது அச்சிடப்படாத பல அருமையான தமிழ் நூல்களைப் பனையோலைச் சுவடிகளைக்கொண்டு பரிசோதித்துப் பதிப்பிக்கத் தொடங்கினர். அவ்வாறு அவர் பதிப்பித்த நூல்களுட் பெரும்பாலன சாமானிய சனங்கள் பயிலாதனவும் அதிகமாய் விலைப்படாதனவுமாகிய இலக்கண நூல்களாம். தமிழின் மீது ஆர்வம் மிகுந்த இற்றைஞான்றினும் அவைகள் பெரிதுங் கவனிக்கப்படுகின்றிலவாமாக அந்நாட்களில் அவை விலைப் பட்டில என்பதோர் ஆச்சரியமன்று. அன்னணம் அவர் பிரசுரித்த இலக்கண நூல்கள் **தொல்காப்பிய நச்சினுர்க்கினியம், தொல்காப்பியச் சேனுவரையம், வீரசோழியம், இறையனுரகப் பொருளுரை, இலக்கண விளக்கவுரை** என்பனவாம். சங்க நூல்களில் எட்டுத் தொகையுள் ஒன்ருகிய **கலித்தொகையும்** இவர் பதிப்பித்ததே. பின்னர்த் தமிழிலக்கியங்களுட் பெரிதும் திரிசொற்களான் யாக்கப்பட்ட **தணிகைப்புராணமும்** சிறு காப்பியங்களுள் ஒன்றெனக் கருதப்படும் சூளாமணியும் பிள்ளையவர்கள் முயற்சியான் வெளிப்போந்தன. இவை தம்முட் பல பகுதிகள் பிரதமகலா பரீட்சைக்கும், பி. ஏ., எம். ஏ. பரீட்சைகட்கும், அவ்வக்காலங்களிற் பாடங்களாய் ஏற்படுத்

தப்பட்டன. இவர் பதிப்பித்த நூல்களெல்லாம் இவரது சங்கச் செய்யுட் பழக்கத்தினையும், நுணிகியுணருங் கூரியமதியினையும், ஆராய்ச்சி வன்மையினையும் பெரிதும் புலப்படுத்துகின்றன. அவ்வந் நூல்களின் பதிப்புரைக்கட் பல அரிய பெரிய விடயங்களைச் சிக்கறவாராய்ந்து தெள்ளிதிற் றெரித்துளர். இவர் தமது இறுதிக்காலத்தில் எட்டுத் தொகையுளொன்றாகிய **அகநானூற்றினைப்** பரிசோதித்து வந்தனர். ஐயகோ! அகப்பாட்டு அகப்பாட்டாகவே நின்றது.

புலவர் மதிப்பு: இவ்வாறு மிகப் பெருமை வாய்ந்த நூல்களைப் பரிசோதித்துப் பதிப்பித்தமை காரணமாக இவர்க்குப் புகழ் மிகுவதாயிற்று. தமிழ்ப் புலவர்களிடத்து மிக்க நன்கு மதிக்கற்பாடுற்றனர். பற்பல நாட்டுத் தமிழ்ப் பண்டிதர்களும் இவரைச் சலஞ்சலத்தைச் சூழும் வலம்புரியெனச் சூழ்வாராயினர்.

பரீட்சிக்குந்திறமை: இத்தகைய புலவர் பெருமானது ஆற்றலும் நல்லொழுக்கமுங்கண்டு சென்னைச் சர்வகலாசாலையார் இவரைப் பரீட்சைக் கர்த்தராகப் பல்லாண்டுகளில் நியமித்தனர். இவர் அங்ஙனம் அத்தொழில் புரியமிடத்துத் தமக்கியல்பாயுள்ள நேர்மையும் மாணவரிடத்து இரக்கமுங் காட்டியே வந்தனர். சென்னைச் சர்வ கலாசாலையில் தமிழ்ப் பரீட்சைக் கர்த்தர்களாயிருந்த கனவான்களெவரும் இவரது கல்விக்கு ஈடாவாரல்லர். இவர் பரீட்சை வினுக்களெல்லாம் மாணுக்கரது நுட்பமதியினைப் புலப்படுத்துவனவாம். மாணுக்கர் இயல்பறிந்தும் வகுப்பின் தரமறிந்தும் குறித்தகால வளவறிந்தும் வினுப் பத்திரிகை கொடுக்கும் பரீட்சாதிகாரியையிழந்த தமிழ் மாணுக்கரின் துரதிர்ஷ்டத்தையென்னென்பேம்! இத்துணை நலம் வாய்ந்த இவர் நம் சென்னைச் சர்வகலாசாலையவயவிகளுள் ஒருவராகவுமிருந்தனர்.

நூலாசிரியத் தன்மை: பிள்ளையவர்கள் பதிப்பித்த நூல்கள் போகத் தாமே புனைந்தியற்றியன கட்டளைக் கலித்துறை யென்னுமோர் இலக்கண நூலும், வசன சூளாமணியென்னுமோர் உரைநடை நூலும், சைவமகத்துவ போதம் என்னுமொரு சைவசமய நூலும், **ஆரும் வாசக புத்தகம், ஏழாம் வாசக புத்தகம்**

என்னும் கல்வி யறிவிற்றேரும் இளஞ்சிருர்க்கென வகுத்த வசன நூல்களும் பிறவுமாம். இவரது உரை நடை செந்தமிழ்த் திரி சொற்கள் மலிந்து சொல்லடுக்கும் பதசாலங்களும் இயைந்து கட்டுரைச் சுவைநயங் காட்டி இயல்வது. இவ்வியல் புபற்றியன்னே இவர்தம் வசன சூளாமணி பிரதம கலா பரீட்சைப் பாடமா யேற்பட்டதூஉ மென்க.

ஒழுக்கம் : இவரால் ஆதரிக்கப்பட்டோரும் இவர்க்கு நண்பராய் நண்ணிஞேரும் பல திறத்தினர். தென்னுடெங்கும் இவரை யறியாதார் எவருமில்லை. இவர் உண்மை தோன்ற வாதஞ் செய்வுழித் தமது நண்பர்களுக்காகச் சார்ந்து பேசியும் பிறருக்காக விலகிப் பேசியும் ஒழுகுறு மியல்புடைய சில போலி மக்கள் போலாது எப்பொழுதும் நடுவுநிலைமை குன்ருதவாறு நடந்து வந்த நற்றமிழாளர். தவறுநர் நண்பரேயாயினும் நொதுமலரேயாயினும் அவரை நல்லறிவூட்டித் தெருட்டுவார் இவர். நம் பிள்ளையவர்களும் திவான் பகதூர் வி. கிருஷ்ணமாசாரியரவர்களும் நண்பர்களே யாயினும் மாறுபட்ட இடங்கள் பலவுள. இன்னும் இவர் தற்காலத்துப் பிறர் வன்மை கண்டு அழுக்காறடையும் புன்மக்கள் போலாது பிறரது பேராற்றல் கண்டுழி யெல்லாம் அன்னுரை வியந்தும் ஆதரித்தும் பரிசிலளித்தும் போற்றியும் கொண்டாடியும் ஒழுகி வந்தவர். அந்தோ! அத்தகைய அன்புடைய அண்ணலை இழந்த தமிழ் வாணர் பெரிதும் கறவையிற் பிரிந்த கன்றெனக் கையற்று அயர்வார்கள் என்பதொருதலை.

பட்டப் பேறு : நமது சென்னைத் துரைத்தனத்தார் எப்பொழுதும் யோக்கியதை கண்டுழி யெல்லாம் கவனித்துத் தக்க பட்டமளித்து வருபவராதலின் நமது தாமோதரம் பிள்ளையவர்கட்கும் **ராவ்பகதூர்** என்ற பட்டத்தினை 1895-ம் வருடத்தில் அளித்தார்கள்; அஃதன்றியும் தமக்குத் தமிழ் மொழியின் கண் ஐயப்பாடு நேர்ந்துழி யெல்லாம் அவரிடங் கேட்டுந் தெளிந்தனர். இவ்வாறு இவர் துரைத்தனத்தார்க்கேயன்றிப் பிறர்க்கும் நிகழ்ந்த ஐயங்களையும் அறுத்தனர். எனவே, இவர் வாய்மொழி பலர்க்கும் மேற்கோளாயின.

இறுதிக்காலம் : இவரது தேக சௌக்கியம் 1888 ஆம் வருடம் நிகழ்ந்த புத்திர சோகங் காரணமாகச் சிறிது சிறிதாகக் குறையத் தலைப்பட்டு இறுதியிற் சென்ற ஆறு மாதமாக மார்பு நோய் கண்டு வைத்திய நூல் வல்ல பலருதவி செய்துஞ் செவ்வைப்படாது போயிற்று. ஆகவே நற்குணமும் நேரிய வாழ்க்கையுமுடையவரும், செந்தமிழ்ப் புலவரும், பல தமிழ் நூற் பதிப்பாசிரியரும், சென்னைச் சர்வ கலாசாலைப் பல்லாட்டைப் பரீட்சைக் கர்த்தரும், தமிழ் வள்ளலாரும், சென்னைச் சர்வ கலாசாலை யவயவிகளுளொருவரும், நமது ஞானபோதினிப் பத்திரிகைக்குப் பேராதரவாயிருந்தவரும், பாவலர் நண்பரும், எம்மீது ஆர்வமுடையாரும், எம்மைத் **திராவிட சாஸ்திரி** யென்றழைப்பாரும் ஆகிய நமது தாமோதரம் பிள்ளை யவர்கள் இவ்வுலகினின்றும் நீங்கினர். இத்தகைய புலவர் கோமான் இறந்து பட்டார் என்பது தெரிந்த தமிழர் குழாம் இரங்குமாறு இற்றெனெ எம்மாற் புனைதலியலாது. இவர் இறந்துபாடு தமிழுலகஞ் செய்த பாவமோ தேவர் தங்நயம்பற்றிச் செய்த கொடுமாயமோ? அறியேம்.

இனிக் காட்டகத்து மலர்ந்து மனிதர்க்கு இன்பம் பயவாது தாமே யழியும் மலர்கள்போலப் பல தமிழ் வித்துவான்கள் உலகில் வெளிப்போதராது காலஞ் சென்றனர்; அன்னார் கதி மிகவுமிரங்கத்தக்கதே. இவ்வாறன்றி நமது தாமோதரம் பிள்ளையவர்கள் பல நூல்கள் அச்சிட்டும் சில நூல்களியற்றியும் பலரோடளவளாவியு மிருந்து காலஞ் சென்றமையின் இவர் இறந்தும் இறவாதவரே யென்பது யாவரு முணர்ந்ததே.

அருஞ்சொற்பொருள்

அற்றை ஞான்றே - அந்த நாளில். அவல மெய்ப்பாடு - துன்ப உணர்ச்சி. பிரவேச பரீட்சை - முதற் பரீட்சை. வாய்விடுத்துக் கூறுமிடத்து - பிறரறியச் சொல்லும்பொழுது. குடந்தையம்பதி கும்பகோணம். நியாயவக்தா - வழக்கறிஞர். விலைப்படல் - விலையாதல். சிக்கற - இடையூறு நீங்கும்படி, சிக்கல் தீரும்படி. சலஞ்சலம் - ஆயிரம் வலம்புரிச் சங்குகளால் சூழப்பட்டுள்ள பெரிய சங்கு. வலம் புரி - வலமாகப் புரிகளுடைய சிறு சங்கு. அவயவி - அங்கத்தினர். பதசாலம் சொற்களின் கூட்டம். கொதுமலர் - பகைவர். தெருட்டுவார் - தெளிந்

அறிவு பெறச் செய்வார். கையற்று - உதவியில்லாது. ஒருதலை - உறுதி. யோக்கியதை - தகுதி. நேர்ந்துழி - ஏற்படும் பொழுது. புத்திர சோகம் - மகன் இறந்ததால் பெற்றோருக்கு ஏற்படும் துயர். செவ்வைப் படாது - குணமடையாமல். இற்றென - இவ்வளவென்று. இறந்துபாடு - மரணம்.

வினாக்கள்

1. தாமோதரம் பிள்ளையவர்களின் பிறப்பிடம், பெற்றோர், இளமை இவற்றைப்பற்றிக் குறிப்பெழுதுக.

2. இராசதானிக் கலாசாலையில் தாமோதரம் பிள்ளையைத் தமிழ்ப் பண்டிதராக அரசாங்கத்தார் நியமிக்கக் காரணம் யாது?

3. தாமோதரம் பிள்ளை உபகாரச் சம்பளம் பெற்றபின் எத்துறையில் எவ்வாறு தொண்டு செய்தார்?

4. தாமோதரம் பிள்ளை குடந்தையிலிருந்தபொழுது பதிப்பித்த தமிழ் நூல்கள் யாவை?

5. தாமோதரம் பிள்ளையவர்களின் நூற்பதிப்புத் திறனைப்பற்றி இக்கட்டுரை ஆசிரியர் கூறுவதென்ன?

6. தாமோதரம் பிள்ளையவர்கள் தாமே இயற்றிய நூல்களில் மூன்று கூறுக. இவரது உரை நடையின் இயல்பு எவ்வாறிருந்தது?

7. தம் நண்பர்களிடத்து, தாமோதரம் பிள்ளை எவ்வாறு நடந்து கொண்டார்?

8. அரசாங்கத்தார் தாமோதரம் பிள்ளையை எவ்வாறு பெருமைப் படுத்தினர்?

9. "தாமோதரம் பிள்ளை இறந்தும் இறவாதவரே"—விளக்குக.

7. நம் பண்டைய நீதி நூலாசிரியர்

(பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்)

மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் வண்ணம் நம் பெரியார் நமக்கு உதவிய நூல்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கினையும் பற்றியனவே யாம். இவ்வெல்லாம் நீதியின்மேல் அமைந்தன வெனினும், இவற்றுள் பொருட் பகுதியைப் பற்றி யெழுந்த நூல்களையே 'நீதி நூல்' எனப் பெரியோர் வழங்குவர். அப்பொருட் பகுதியை மாத்திரம் சிறப்பாக எடுத்துக் கூறிய ஆசிரியரும் உளர். அதனோடு அறமுதலிய ஏனைய உறுதிப் பயன்களையும் இயைத்துக் கூறிய ஆசிரியர்களே பெரும்பான்மையோராவர். இம் முறையில் தமிழிற் சிறந்த நீதிகளை வழங்கிய வண்மையிற் சிறந்த பெரியார் திருவள்ளுவரேயாவர். அவர்க்கு முன்னும் பின்னும் நீதி நூலருளிய ஆசிரியர்கள் வடமொழியிலும் தமிழிலும் பலரிருந்தனர். எனினும், அன்னார் புகழொளி யெல்லாம் வானத்து விளங்கும் மீன்களாக, வள்ளுவர் கீர்த்தி அப்பன் மீன் நடுவண் பான்மதிபோலத் திகழ்வதாகும். "எல்லாப் பொருளும் இதன்பாலுள; இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்," என்றபடி உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் வள்ளுவர் வாய் மொழியிற் காணப்படுவனவேயாம். தம் தெள்ளிய கல்வியானும் ஒள்ளிய மதி நுட்பத்தானும் உலகியலையும் மக்கள் வழக்க ஒழுக்கங்களையும் அழுந்தி யறிந்து உள்ளத் தமைத்துத் 'திருக்குறள்' என்னும் நீதிக்களஞ்சியத்தை உலக முள்ளளவும் நிலைபெற யாத்துதவிய பெருமையே அப்பொய்யில் புலவர் புகழொளி விஞ்சுதற்கு ஏதுவாயிற்று.

திருவள்ளுவர் எழுதிய நூல் ஒழுங்கிற்கும் ஏனையோர் நூன் முறைக்கும் உள்ள வேறுபாடுகள் பலவாம். தாம் கூற மேற்கொண்ட பொருள் நன்கு ஆராய்ந்து, இவ்வாறு தெளிவு படுத்த வேண்டுமென்று உள்ளத் தமைத்துப் பின்னர்ச் செய்யுள் வடிவில் இவர் வெளியிட்டுள்ளார். பெரும்பான்மையும், கொண்ட பொருளின் இலக்கணம்,

அதன் சிறப்பு, அதனுலாம் பயன், அஃதில்வழி வருந்தீங்கு என்று இன்னேரன்ன பாகுபாடுகளை வரையறுத்துக்கொண்டு கூறுதல் இவர் இயல்பு. எப்பொருட்கும் வரையறையும் தெளிவும் இன்றி யமையாதன வரையறுத்துத் தெளிவுபடுததப் படாத பொருள்கள் மக்கள் உளங்கோடற்கு ஏற்றனவாகா என்பது பெரியார் துணிபு.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்குறளுக்கு வடமொழி தென் மொழிகளிலுள்ள பற்பல நீதி நூல்களையும் நன்கு கற்று ஆராய்ந்த பரிமேலழகர் என்னும் புலவர் பெருமான் இயற்றிய உரையே எல்லா உரைகளினும் சிறந்ததாகப் போற் றப்படுவது. அவ்வுரையாளர் ஓரிடத்து, "தேவர்க்கும் அசு ரர்க்கும் அமைச்சுப் பூண்ட வியாழ வெள்ளிகளது துணிபு தொகுத்துப் பின் நீதி நூலுடையார் கூறியவாறு கூறுகின்ற மையின்" என்று எழுதியிருத்தலால், வடமொழியிற் புகழ் மிக்கவர்களான வியாழ வெள்ளிகளின் நூற் கருத்துக்கள் நம் வள்ளுவர் வாய்மொழியிற் புலப்படுகின்றன வென்பது பரிமே லழகர் கருத்தாம் ஒரு நாட்டினர் வழக்க வொழுக்கங்களை உணர்ந்து அவற்றிற் கேற்ப நீதிகளை வரையறுக்கும் ஆசிரியர் கள் கால இடையறவால் சேய்மைக்கண் உள்ளா ரெனினும், பொருள் ஒற்றுமைக் கருத்தால் அணிமையில் உள்ளவராகவே கருதப்படுவர்.

வடமொழியில் மனு முதலிய நூல்கள் அறம்பொருள் இன்பங் கள் விரவக் கூறப்பட்டுள்ளன. பொருட் பகுதியாக அரசியல் முறையைத் தனிமையில் விளக்க எழுந்த நூல்களுள் பிருகற் பதியாகிய வியாழ குருவால் தேவர்கள் பொருட்டு இயற்றப் பட்ட பாற்கபத்தியமும், உசனஸ் என்னும் சுக்கிராச்சாரியரால் அசுரர் பொருட்டு இயற்றப்பட்ட ஔசநசமும் முதலில் நினைக்கத் தக்கனவாம். இவற்றின் பின் எழுந்தன சந்திர குப்தன் காலத்து அமைச்சராக இருந்த சாணக்கியரால் ஆக்கப் பட்ட கௌடலியமும், காமாந்தகனுல் இயற்றப்பட்ட காமாந் தகம் முதலியனவும் ஆம். இவற்றுள் இக்காலத்துச் சட்ட நூல் வல்லோராற் பெரிதும் தழுவப்படுவது கௌடலியம் என்னும் நூலேயாம். வியாழனுல் ஆக்கப்பட்ட நூலினும்

வெள்ளியாய சுக்கிரரால் ஆக்கப்பட்ட நூல் தென்னாட்டு வழக்க வொழுக்கங்களுக்குப் பெரிதும் இயைபுடையதாகும். இவற்றின் பின் தோன்றிய கௌடலிய நூலின் தொடக்கத்தில் அதன் ஆசிரியர் பூர்வாசார்ய வணக்கமாகச் "சுக்கிர பிருகஸ்பதிப்யோநம:" "சுக்கிரற்கும் பிருகற்பதிக்கும் வணக்கம்" என்று கூறியுள்ளார். இதனாலேயே வெள்ளி நூலின் விழுப்பம் புலப்படுவதாகும். பிற்காலத்துக் கவிஞர் பெருமானாகிய கம்பர், "வெள்ளியும் பொன்னும் என்பார் விதிமுறை வகுத்த நூலில்" என்று முறைப்படுத்துக் கூறியதும் இதனை வலியுறுத்தும். இங்ஙனம் சிறந்துள்ள ஔசநசத்தின் சுருக்கமே '**சுக்கிர நீதி**' யென்னும் மேற் **பொருள் நூலாகும்.**

இச் சுக்கிர நீதியைத் தமிழ் மக்கள் நலங்குறித்து மொழி பெயர்த்தபொழுது, யான் கண்ட புதுமைகளும் பழமைக்குரிய சான்றுகளும் பலவாம். "புதல்வர்ப் பேற்றை விரும்பும் பெண் மக்கள் வயிரமணியை அணிதலாகாது" என்று கூறப்பட்டுள்ளது. கருவைத் தடைப்படுத்தற்கு வைரவொளி எங்ஙனம் காரணமாகும் என்பதைக் கலவை (இரசாயன) நூலார் ஆராய்தல் வேண்டும். இது போன்றன புதியனவாம். நீர்ப்பொறி, இசைப்பொறி, காற்றியக்கும் பொறி, கம்பிவழிச் செய்தியனுப்புங் கருவி, நீராவியால் இயக்கப்படும் பொறிகள் முதலிய இக்காலத்துக் காணப்படும் இயந்திரத் தொழில்களைப்பற்றியும் அந்நூலிற் கூறப்பட்டுள்ளன. ஆனால், இவற்றின் அமைப்பு முறைகள் வேறுபட்டிருக்கலாம். போர்த்தொழில் முறைகளும், போர்க் கருவிகளும், பொறி வழியாக ஆயுதங்களைச் செலுத்தும் முறையும், வெடிமருந்து செய்யு முறையும், படைகளின் அணி வகுப்புகளும் பிறவும் செவ்வையாகக் கூறப்பட்டுள்ளன. மக்கள் இயங்குஞ் சாலை (Road) ஆமை முதுகுபோல் இருக்கவேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆமை முதுகு இருமருங்கும் தாழ்ந்து நடுவிடம் சிறிது உயர்ந்திருக்கும். இது சாலை வழியிற் பெய்யும் மழை நீரால் அச்சாலை கெடாமலிருப்பதற்குக் கருதப்பட்டதாகும். மேலும், இந்நூலின்கண் அரசனியல்பு, அவன் சுற்றங்களாகிய அமைச்சர் முதலியோரியல்பு, வினைசெய்யும்

ஏவலரியல்பு, கிராம பரிபாலனம், வாணிக முறை, நியாய மன்றங்கள், நீதிபதிகளின் அதிகாரங்கள், வழக்கின் இயல்பு கள் முதலியன விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன,

கரிகாற்சோழ அரசனைக் குடிமக்களுள் ஒருவனுகச் சிலப் பதிகாரம் கூறும். இதனுல் அரசன் குடிமக்களின் உயர்ந்தவ னுகத் தன்னை எண்ணலாகாது என்பது புலனுகும். செங் கோன்மை தவருது செலுத்தும் நல்லரசற்கு அரசியற் காரியம் தன்னலங் குறித்ததாகாது; குடிமக்கள் நலங்குறித்ததேயாம். இங்கே, கோவலனைக் குற்றமில் வழியும் கொலைபுரிவித்த பாண்டியனைக் கண்ணகியார் வெகுள, அது காரணமாகப் பாண்டியன் உயிரிழந்தான் என்று தண்டமிழ்ப் புலவர் **சாத்தனுர்** செங்குட்டுவற்குக் கூறினுராக, அது கேட்ட செங்குட்டுவன் பாண்டியன் தவறின்மையையும் அரசியல் நடாத்தும் சிரமத்தையும் சாத்தனுர்க்குக் கூறுமுகமாக,

"மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லென,"

என்று இளங்கோவடிகள் கூறியது நினைந் தின்புறத் தக்கது. "அரசன் குடிகளிடத்தினின்று தனக்குரிய அரசிறையாகிய வேதனத்தைப் பெறுதலால், அக்குடிகளுக்கு ஏவலாளர் தன் மையுடையனுவான்" எனவும், "பூ மரத்தை வளர்த்து மலர் பறித்து மாலைகட்டிப் பயன் பெறுபவனை யொப்பக் குடிகளைப் பாதுகாத்து அவர்பால் அரசிறை பெறவேண்டும்" எனவும், "அங்ஙனமன்றி அம்மரத்தை எரித்துக் கரிசெய்து பயன் பெறுதல்போலக் குடிகளைக் கெடுத்துச் சிறுபயன் கொள்ள லாகாது," எனவும் சுக்ரநீதி கூறுகின்றது. இச்செய்திகள் மிகவும் பாராட்டற் குரியனவாம்.

திருக்குறட் பொருட்பகுதி அரசர், அமைச்சர், படைத் தலைவர் முதலியோரின் இலக்கணங்களாகக் கூறபபட்டனவும் பிறவும் யாண்டும் காண்டற்கரியனவாம். ஒற்றர் இயல்பு கூறுங்கால், ஒற்றும் நீதி நூலும் ஆகிய இரண்டும் அரசர்க்கு

இருகண்களாகும் என்று கூறப்பட்டுள்ளது. நாட்டின் இலக்கணங் கூறுங்கால், ஒரு நாட்டில் வாழ்வோர் தேடி வருந் தாமல் வேண்டுவன வெல்லாம் ஆங்கே பெறத்தக்கதாக இருத்தல் வேண்டும் என்னும் கருத்தமைய "நாடென்ப நாடாவளத்தன" என்றார். பிணியின்மையும், நிரம்பிய செல்வமும், விளைவும், இன்பமும், காவலும் ஆகிய இவ் வைந்தும் நாட்டிற்கு அழகு செய்வன வெனவும் கூறப்பட் டுள்ளன. இதனால் அரசன் தன் நாட்டை இத் தகுதி களுக்கு உரியதாக அமைத்துக்கொள்ளல் வேண்டு மென்பது புலனாகும். அமைச்சரியல்பு கூறுங்கால், வினைத்தூய்மை, வினைத் திட்பம், வினைசெயல் வகை என மூன்றதிகாரங்கள் காணப்படுகின்றன. இவற்றை ஊன்றிப் படிப்பார்க்குத் தாம் செய்யவேண்டிய காரியங்களைப்பற்றிய தெளிவு கல்லெழுத்துப் போல நெஞ்சிற் பதிவதாம். திருக்குறளேயல்லாமல் நாலடி யார், நான்மணிக்கடிகை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் முதலிய சங்கமருவிய நீதிநூல்களும் தமிழிற் பல வுள. அவை யெல் லாம் மக்கள் ஒழுக்க முறைகளை வரையறுத்துத் தெளிவு படுத்துவனவாகும்.

நாலடியார் என்னும் நூல், **கற்பார் மனத்தைக் கவர வல்லது.** " ஆலும் வேலும் பல்லிற் குறுதி, நாலு மிரண்டுஞ் சொல்லிற் குறுதி" என்னும் பழமொழியில் நாலென்பது நாலடி யாரையும், இரண்டு என்பது ஈரடியானமைந்த திருக்குறளையுங் குறிப்பனவாம். ஒருவன் சிற்சில செயல்களிற் செவிடனாய்க் குருடனாய் ஊமையாயிருத்தல் வேண்டுமென நாலடி கூறு கின்றது. இம்முறை வியக்கத்தக்கது. இதன் கருத்து, பிறர் இரகசியங்களைக் கேட்பதிற் செவிடனாகவும், பிறர் மனைவியரைக் காமநோக்காகக் காண்பதிற் குருடனாகவும், பிறரைப் பற்றிக் காணாவிடத்துப் புறங்கூறுவதில் ஊமை யாகவும் இருத்தல் வேண்டும் என்பதாம். இங்ஙனம் சாதுரிய மாகக் கூறுமியல்பு இந் நூலிற் பல விடங்களிற் காணலாம். ஒருவன் மற்றொருவன் பால் இல்லாத குணங்களைப் புகழ் தலினும் அவனை வைதல் நல்லதென்கிறார். கடையாயார், இடையாயார், தலையாயார் ஆகிய இம் முத்திறத்தாரும் அஞ்சு

தற்குரியன யாவை என்னும் வினவை எழுப்பி விடையிறுக்கு முகமாக முறையே கடையாயார் பசிக்கு அஞ்சுவரெனவும், இடையாயார் துன்பத்திற்கு அஞ்சுவரெனவும், தலையாயார் பழிச் சொல்லிற்கு அஞ்சுவரெனவும் கூறுவர். குலப்பெருமை பேசுவார்க்கு "நல்ல குலமென்றுந் தீய குலமென்றுஞ் சொல்லளவல்லாற் பொருளில்லை" என்றும், "தவங்கல்வி ஆள்வினை என்றிவற்றான் ஆகும் குலம்" என்றுங் கூறுவர். இன்னோரன்ன சிறந்த நீதிமணிகள் பல ஒளி செய்தலை இந் நூலாகிய பொற்பேழையிற் பரக்கக் காணலாம்.

பிற்காலத்து **ஔவைப்பிராட்டியார்** அருளிய ஆத்திசூடி, வாக்குண்டாம், நல்வழி முதலிய நீதி நூல்கள் சிறுவரும் உணர்ந்து இன்புறத்தக்க நிலையில் அமைந்து பேரறிவாளர்க்கும் விருந்தாக விளங்குவன. 'இயல்வது கரவேல்' என்னும் சூத்திரம் ஒருவன் மனமொழி மெய்களாற் பிறர்க்குச் செய்யக் கூடிய உதவியை ஒளித்தலாகாது என்னும் பொருளை உட்கொண்டு இப்பொருளின் விரிவுகளுக்கெல்லாம் நிலைக்களமாக நிற்றலை நோக்குவோர்க்கு இதன் திட்ப நுட்பங்கள் இனிது விளங்கும்.

> "சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
> செவ்வன் ஆடியிற் செறித்தினிது விளக்கித்
> திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்,"

என்பதனாற் சூத்திரத்தின் இலக்கணத்தை அறியலாம். இவ் விலக்கணத்துக்குப் பெரிதும் இவ் ஆத்திசூடிச் சூத்திரங்கள் இயைபுடையவாக விளங்குவன. **இந் நூல் மாபாடியம் போன்ற விரிவுரையே யேற்குந் தகுதி வாய்ந்தது.** உயர்ந்த நீதிகளைச் சிறுவர் எளிதிலுணர்ந்து கொள்ளுவதற்கும் பெரும் புலவர்கள் பல திறமாக வகுத்து ஆராய்ந்து உரை காண்டற்கும் இஃது இலக்கியமாகத் திகழுமாயின், இதனை உபகரித்த **தமிழ்ச் செல்வி**யின் அறிவின் திட்பம் எத்துணைச் சிறந்ததாகும் என்பதை அறிவுடையார் உணர்வாராக.

பண்டை நீதிநூலார் கூடியவரை முயன்று தம் அநுபவத்திற் கண்ட உண்மைகளை நெடுங்காலமாயினும் சிதையாமலிருத்தற் பொருட்டுச் சூத்திர வடிவிலும் செய்யுள் வடிவிலும்

யாத்துதவினர். அவை உரைநடையில் ஆக்கப்படாமை குறை யென்ப ஒரு சாரார். முற்காலத்தில் இவ்வளவு விரிவாக அச்சிடுதற்குரிய கருவிகளில்லை. கற்பவர் நெஞ்சத்தில் உரை நடையினும் செய்யுணடை நிலை பெற்று ஞாபகத்துக்கு நன்கு பயன்படும். காலந்தோறும் மக்கள் வழக்க வொழுக்கங்கள் மாறுபடுதல் இயல்பே. அம் மாறுபாட்டிற் கேற்ப நீதிகளும் திருத்தப்படுமென்பது சொல்லாமலே விளங்கும். மகா பார தத்துக் கண்ட சில அறங்கள் இக்காலத்துக்குப் பொருத்தமாகக் காணப்படா. அதுபற்றிப் பேரறிஞராகிய வியாச முனிவர் இழித் துரைக்கப்படுவாரல்லர். ஆகவே, எத்தகைய நீதிகளையும் காலம் நோக்கிக் கொள்ளுதலும் தள்ளுதலுஞ் செய்தல் வேண் டும். "பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்பதைக் கடைப் பிடித்து மனம்போனபடி செய்யத் துணிதல் நன் றன்று. இங்ஙனம் வடமொழி தென்மொழிகளிற் சிறந்த நீதி நூல்களை ஆக்கிய பெரியாருடைய இயல்புகளை இங்கே கூறியனகொண்டு தெளிந்துகொள்க.

அருஞ்சொற்பொருள்

கீர்த்தி - புகழ். வானதமீன் - நட்சத்திரம். பான்மதி - வெண் ணிறச் சந்திரன். நடுவண் - மையத்தில். உள்ளுநர் - சிந்திப்பவர். யாத்து உதவிய - இயற்றித் தந்த. விஞ்சுவதற்கு - மேம்படுவதற்கு. உள்ளத்து அமைத்து - மனத்திற்கொண்டு. இன்னோரன்ன - இம்மாதிரி யான. உளங்கோடல் - மனத்தில் கொள்ளுதல். இடையறவு - இடை யில் ஏற்படும் பிளவு. சேய்மை - வெகு தூரம். விழுப்பம் - மேன்மை. மருங்கு - பக்கம். வேதனம் அரசிறை, வரி. பொற்பேழை - பொன் னாலான பெட்டி. நிலைக்களம் - இருப்பிடம். மாபாடியம் - சிவஞான முனிவர் இயற்றிய சைவ சித்தாந்த நூல். உபகரித்த - இயற்றித் தந்து உதவி செய்த.

வினாக்கள்

1. உறுதிப் பொருள்கள் நான்கு யாவை?

2. நீதி நூல் எனப் பெரியோர் வழங்குவது எதை?

3. திருக்குறளின் புகழ் பிற நீதி நூல்களினும் விஞ்சுவதற்குக் காரணம் யாது?

4. திருவள்ளுவர் எடுத்துக் கொண்ட ஒவ்வொரு பொருளையும் எவ்வாறு வகைப்படுத்திக் கூறுவது வழக்கம்?

5. பாற்கபத்தியம், ஔசநசம், கௌடலியம்—இந்நூல்களை இயற்றியோர் யாவர்?

6. சுக்கிரநீதியில் வைரமணி, சாலை—இவற்றைப்பற்றி என்ன கூறப்பட்டுள்ளன?

7. அரசியலைப்பற்றிச் செங்குட்டுவனது கருத்து யாது?

8. அரசிறை பெறுதல் சம்பந்தமாக சுக்கிர நீதி என்ன கூறுகிறது?

9. "ஒருவன் சிற்சில செயல்களில் செவிடனாய், குருடனாய், ஊமையாய் இருத்தல் வேண்டும்."—விளக்குக.

10. தலையாயார், இடையாயார், கடையாயார் முறையே எவற்றிற்கு அஞ்சுவர்?

11. ஆத்திசூடி எவ்வாறு பெருமை மிக்க நூலாகும்?

12. சூத்திரம் என்பதன் இலக்கணம் என்ன?

13 பண்டைய நீதி நூலார் செய்யுள் வடிவிலும் சூத்திர வடிவிலும் நீதிகளை இயற்றியது ஏன்?

14. பண்டைக்கால நீதிகள் சில இக்காலத்திற்குப் பொருந்தாததற்குக் காரணமென்ன?

8. பண்டைய உரைநடை

நெடுஞ்செழியனது வீரம்

[புறநானூற்று உரையாசிரியர்]

சதங்கை வாங்கப்பட்ட காலிலே ஒள்ளிய வீரக் கழலினைச் செறித்துக், குடுமியொழிக்கப்பட்ட சென்னிக் கண்ணே வேம்பினது ஒள்ளிய தளிரை நெடிய கொடியாகிய உழிஞைக் கொடியோடு சூடிக், குறிய வளைகளை ஒழிக்கப்பட்ட கையின் கண்ணே வில்லைப் பிடித்து, நெடிய தேரினது மொட்டுப் பொலிவுபெற நின்றவன் யாரோதான்? யாரேயாயினும், அவன் கண்ணி வாழ்வதாக: தாரையணிந்து ஐம்படைத்தாலி கழித்தது மிலன்; பாலை ஒழித்து உணவும் இன்று உண்டான்; முறை முறையாக வெகுண்டு மேல்வந்த புதிய வீரரை மதித்ததும் அவமதித்ததுமிலன்; அவரை இறுகப் பிடித்துப் பரந்த ஆகாயத்தின் கண்ணே ஒலியெழக் கவிழ்த்து உடலம் நிலத்தின்கண்ணே பொருந்தக் கொன்றதற்கு மகிழ்ந்ததுவும் இவ்வாறு செய்தேம் என்று தன்னை மிகுத்ததுவும் அதனினும் இலன்.

[பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை இடைக்குன்றூர் கிழார் பாடிய பாடலுக்குப் புறநானூற்று உரையாசிரியர் எழுதிய பொழிப்புரை மேலே தரப்பட்டுள்ளது.]

அருஞ்சொற்பொருள்

வாங்கப்பட்ட - கழற்றப்பட்ட. ஒள்ளிய - பிரகாசமான. சென்னி - தலை. கண்ணி - ஆடவர் தலையில் சூடும் மாலை. தார் - மார்பில் அணியும் மாலை. ஐம்படைத்தாலி - பஞ்சாயுதம்; பிறந்த நாளில் பிள்ளைகளுக்கு இதை அணிவிப்பது பண்டை வழக்கம். வெகுண்டு - கோபித்து. தன்னை மிகுத்தது - தற்புகழ்ச்சி செய்து கொள்வது.

வினாக்கள்

1. பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், மிக்க இளமையுடையவன் என்பதை எப்படிப் புலவர் குறிப்பிடுகின்றார்?

2. நெடுஞ்செழியனுடைய எந்த நற்பண்பு மேலே பாராட்டப்படுகின்றது?

133686

IV FORM SPECIAL

Approved by the Text-Book Committee, Madras, for class use, vide Fort St. George Gazette Part I-B. Supplement Page 21 dated 4-4-1956

Used 32 lbs. Double Demy White Printing

SCANNED

SCANNED

SENTAMIL MALAI

IV Form Special

by

Kumari THILAKAVATHI PAUL, B.A., L.T.,

V. S. SWAMINATHAN
Educational Publisher
MADURAI – MADRAS-1

Copyright] [Price nP. 75